பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com
பெப்ரவரி 2024



இளம் வயதில்
பல துறைகளில்
தடம்பதித்த
நுஷைபா நஷீர்

'மூதூர் முகைதீன்'
நேர்காணல்
பக்கம் 95



வடிவமைப்பு சேவைகள்
கல்வி
பாடத்திட்டம்
கையேடுகள்
மீள் பதிப்பு
மொழிபெயர்ப்பு
சஞ்சிகைகள்
மலர்கள்
நூல்
மற்றும் தங்கள் விருப்பத்திற்கேற்ப தட்டச்சு மற்றும் வடிவமைப்பு வேலைகளை தமிழ், சிங்களம், ஆங்கிலம் மற்றும் அரபு மொழிகளில் செய்து கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு..
+94 70 377 0731
designglitz123@gmail.com
DESIGN GLITZ

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

உதயம் 1972 – பெப்ரவரி 2024

626

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுர் ரஹ்மான்

பாவேந்தல் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

பாவலர் தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் ஈழபாரதி

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

**இராம வேல்முருகன்**
எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச்
சாலை வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண்
+91 9952529619 ( கட்செவி)
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின்கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்

அன்புத் தமிழ் நெஞ்சங்களுக்கு வணக்கம்!

காதலின் மாதத்துக்குள் அடியெடுத்து வைத்திருக்கிறோம். காதலைச் சிறப்பிக்க நாள், நட்சத்திரம் பார்க்க வேண்டியதில்லைதான். ஆயினும் காதல் என்று வந்து விட்டாலே அதில் ஒருவித ஈர்ப்பும் ஈடுபாடும் கொள்வது இயல்பு தானே?

இவ்விதழை காதலின் சிறப்பிதழாகக் கொண்டு வருவதில் எனக்கும் மகிழ்ச்சி தான்.

உண்மைக் காதலின் சக்தியில் தான் உலகமே சுழல்வதாக சொல்லும் காதலர்களும் நம் மத்தியில் இருக்கத் தான் செய்கிறார்கள். இது அவரவர்களின் காதல் அனுபவத்தைப் பொறுத்து, அளவுகோல்களும் மாற்றம் பெறும். காதலில் வெற்றி கண்டவர்கள் காதலை சுவர்க்கமாகவும், தோல்வியடைந்தவர்கள் நரகமாகவும், தெய்வநம்பிக்கையில் காதலை வென்றவர்கள் தெய்வீகமாகவும் பார்க்கிறார்கள். காதலே பிடிக்காதவர்கள் அதை எதிரியாகவே பார்ப்பதும், காதலிப்பவர்கள் கொலைக் குற்றவாளியாகத் தென்படுவதும் அவரவர் மனோபாவத்தினாலேயன்றி வேறெந்தக் காரணத்தையும் இதற்கு காரணியாக சொல்லவும் முடியாது. மனமொத்தக் காதல் எல்லாவற்றையும் நேர்மறையாக சிந்தித்து, நன்மைகளை பெற்றுக் கொள்ளும். உண்மையில், அதுவே இப்பிரபஞ்ச சக்திகளை நமக்குள் ஈர்த்தெடுத்து, நம் எண்ணங்களை வலுவாக்கி தெம்புடன் நடைபோட வைக்கிறதென்றால் அது மிகையில்லை என்றே கூறலாம்.

ஆகவே, காதலால் கனிவுறும் நம் மனதில் நல்லதையே விதைப்போம். காதலைப் போற்றுவோம். காதலாகிக் கசிந்துருகி காதலில் கரைவோம். அதன் இயங்கு சக்தி எம்மையும் செம்மையாக்கட்டும்!

எல்லோருக்கும் இனிய காதலர் தின நல்வாழ்த்துகள்!

அதோடு உலக தாய்மொழி தினம் இம்மாதம் 21 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. தாய்மொழி என்பது எல்லோருக்குமே உயிருக்கு நிகரான ஒன்று. அவரவர் தாய்மொழி அவரவர் பண்பாட்டு விழுமியங்களைக் காத்திடும் அரணாகத் திகழ்வதாகும்.எம் அனைவருக்கும் தாய்மொழி தமிழாதலால், தமிழை வளர்த்து தமிழின் பெருமை உலகெங்கும் வியாபிக்கச் செய்வோமாக! தாய்மொழி வாழ்க! தமிழ்மொழி வாழ்க வாழ்க!

என்றென்றும் அன்புடன்

தமிழ்நெஞ்சம் அமின்

(ஆசிரியர்)

பட விநயம் : கூகுள்




# அங்கீகாரம்

பொதுவாக எந்த ஒன்றை செய்யும்போதும் அதற்கான அங்கீகாரத்திற்காக மனம் ஏங்கும். வெளியிலிருந்து அங்கீகாரம் கிடைத்தாலே தவிர நீங்கள் செய்வதை உங்களாலேயே அங்கீகரிக்க முடியாமல் மனம் தவிக்கும்.

அங்கீகரிக்கப் படாத எந்த ஒரு செயலுமே உங்களுக்கு சாதனையாகவே தெரிய மறுக்கிறது. ஆனால் அந்த அங்கீகாரத்திற்கான ஏக்கமே, அது கிடைக்காத போது உங்களுக்கு ஒரு சலிப்பை ஏற்படுத்தி விடுகிறது. அங்கீகாரத்தை எதிர்பார்ப்பது தவறல்ல. ஆனால் பிறரது அங்கீகாரமென்பது அவர்களின் விருப்பு வெறுப்பிற்கும் பல் வேறு விதமான கோணங்களுக்கும் உட்பட்டது என்பதை புரிந்து கொண்டால் அங்கீகாரத்திற்காக இல்லாமல் ஆத்ம திருப்திக்காக செயல் படத் தொடங்கி விடுவீர்கள்.

அதனால், எதை செய்தாலும் நீங்கள் செய்யக் கூடிய அந்த விஷயம் முதலில் உங்களுக்கு திருப்தி தரக் கூடிய ஒன்றாக இருக்க வேண்டும் என்பதை மனதில் எண்ணிக் கொள்ளுங்கள், இது நிச்சயம் வெற்றி அடையும் என்ற தன்னம்பிக்கையோடு செயலைத் தொடருங்கள்.

பிடித்த விஷயத்தை செய்ய முடியவில்லையென்றால் செய்து கொண்டிருக்கும்

விஷயத்தை பிடித்தமானதாக உருவாக்கிக் கொள்ள உங்கள் எண்ணத்தை சீர் செய்யுங்கள். எந்த மாதிரியான எண்ணம் உங்கள் ஆற்றலை தூண்டி விட்டு நீங்கள் செய்யும் வேலையை உங்களுக்கு சுவாரஸ்யமானதாக மாற்றக் கூடும் என் சிந்தித்துப் பாருங்கள்.

வெற்றி என்பது பணத்திலோ அல்லது புகழிலோ இல்லை. உங்கள் செயலால் இந்த பிரபஞ்சம் அடையும் பலனில் இருக்கிறது.

அது ஒருவருக்கானதாக இருந்தாலும் சரி, அல்லது ஒரு நாட்டுக்கோ இந்த உலகிற்கோ ஆனதாக இருந்தாலும் சரி, அந்த செயலைத் தொடர்ந்து செய்வதற்குப் பெருமைப் படுங்கள்.

பொதுவாக நம் கனவுகளோடும் கற்பனைகளோடும் எப்போதும் நம் வாழ்க்கையை ஒத்து பார்த்து நிறைவில்லாத தன்மையில் பெரும்பாலும் உழல்கிறது மனம்,

அதனால் நாம் செய்து கொண்டிருக்கும் எந்த வேலைக்கும், நம்மிடம் இருக்கும் எந்த பொருளுக்குமான மதிப்பு நமக்கு தெரியாமலே போகிறது.

எத்தனை நல்ல விஷயங்கள் நடந் திருந்தாலும் நீங்கள் விரும்பி, நடக்காமல் நழுவிப் போகும் அந்த ஒன்றில் உங்கள் முழு கவனமும் தேங்கி, சறுகிய பாறையில் வழிந்தோடும் நீராக மகிழ்ச்சியெல்லாம் வழிந்தோட ஆற்றாமையும் வெறுமையு மாக மனம் பாசி படிந்து போகிறது. எனக்கு எதுவுமே சரியாக அமைவதில்லை நான் கொடுத்து வைத்தது அவ்வளவு தான் என்று இயலாமையாக தோன்றி விடுகிறது. மகிழ்ச்சி அந்த கிடைக்காத ஒன்றில் மறைந்து கொண்டு கண்ணாமூச்சி ஆட, வாழ்க்கை சலிப்பு தட்டுகிறது.

உண்மையில் உங்களுக்கு கிடைத் திருக்கும் எந்த வேலையாக இருந்தாலும் அதை இந்த பிரபஞ்சத்தோடு தொடர்பு படுத்தி பார்த்தால் அதன் மதிப்பு உங்களுக்கு பெரிதாகத் தோன்றும். வாழ் வின் அர்த்தம் புரியும்.

அதாவது, நீங்கள் எது செய்தாலும் ஏதோ என் கடமையை செய்கிறேன் என்றில்லாமல் எதற்காக செய்கிறோம் என்னும் அந்த புரிதல் இருந்தால், அதனோடு ஒரு குறிக்கோளை இணைத்துக் கொள்ள முடிந்தால், அந்த வேலை சலிப்பில்லாத சந்தோஷத்தை தரும்.

ஏனென்றால். எதற்காக ஒன்றை செய்கிறோம் என்று புரிந்து செய்யும் போது, அதை ஈடுபாட்டோடு செய்ய முடியும். தவிர உங்களுக்கு கிடைக்கும் சின்ன சின்ன சந்தர்ப்பங்களையும் நீங்கள் பயன்படுத்திக் கொள்ளும் போது, அதில் முன்னேற்றத்தை பார்க்கும் போது, அதன் வெற்றியை தரிசிக்கும் போது வாழ்க்கை தொய்வில்லாமல் struck ஆகாமல் சுவாராஸ்யமானதாக இருக்கும்.

உண்மையில் வாழ்வின் முன்னேற்றம் என்பது எங்கோ கண்ணுக்கெட்டாத தூரத்தை எட்டிப் பிடிப்பது மட்டுமல்ல. உங்கள் அன்றாட செயல்களை அழகான முறையில் அமைத்துக் கொள்வதிலும் இருக்கிறது. அது உங்கள் கைவசமே இருக்கிறது.

உற்சாகமான உழைப்பும், புத்திசாலித் தனமான சிந்தனைகளும் இருந்தால் எதிலும் புதுமை படைக்கலாம். ஒரு மணி நேரம் செய்யக் கூடிய வேலையை பயிற்சியின் மூலம் அதற்கு முன்பாக முடிக்குமளவு செய்ய தேர்ச்சி பெறுவதும்

முன்னேற்றம்தான்.

உங்களுடைய எந்த ஒரு வேலையையும் ஒவ்வொரு முறை செய்யும் போதும் அதன் தரத்தை, அதன் வேகத்தை இன்னும் நேர்த்தியாக கூட்டுமளவு செய்வதும் ஒரு சாதனை தான். உங்களை நீங்களே தட்டிக் கொடுத்துக் கொள்ளும் சின்ன சின்ன சாதனைகளே பெரிய சாதனைகள் படைக்க உங்களை ஈர்த்து செல்லும்.

உங்களுடைய ஒரு நாள் எப்படி போகிறதென்று சின்ன சின்ன விஷயங்களாக இருந்தாலுமே லிஸ்ட் போட்டு பாருங்கள். நீங்கள் என்னவெல்லாம் செய்கிறீர்கள்என்றுஎழுதிபார்க்கும்போது, நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பதை விட அதிகமான வேலைகளை நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பது உங்களுக்கு புலப்படும் அல்லது இன்னும் நேர்த்தியாக பயனுள்ளதாக நேரத்தை செலவிடலாமே என உங்களை productive ஆக சிந்திக்கச் செய்யும்.

அப்படி நீங்கள் உங்கள் அன்றாட செயலை பட்டியலிடும்போது உங்களுடைய ஒரு நாளில் உங்களுக்குப் பிடித்த விஷயம் எது நடக்கிறது, உங்களுக்குப் பிடிக்காத விஷயங்கள் எத்தனை செய்கிறீர்கள், அதை உங்கள் மனம் எந்த அளவு ஏற்றுக் கொண்டுள்ளது அல்லது முரண்படுகிறது, என்பதை அலசிப் பார்க்க முடியும். உங்கள் சூழலில் உங்கள் திறமைக்கு தீனி இருக்கிறதா அல்லது திறமை அற்ற விஷயங்களில் உங்கள் நேரம் வீணாகிக் கொண்டிருக்கிறதா என்பதை முடிவு செய்யுங்கள்.

தவிர, உங்களுக்கு பிடித்த சாதனையாளர்களின் வாழ்க்கை வரலாற்றை படித்துப் பார்த்தால் அவர்கள் எந்த வகையில் தங்களை மேம்படுத்திக் கொண்டார்கள் என்பது புலப்படும். அப்படி புலப்படும்போது, உங்களையும் அறியாமல் உங்கள் ஆற்றல் விரிவடையும். உங்களுடைய குறிக்கோளுக்கு ஏற்ப விருப்பத்திற்கு ஏற்ப உங்கள் திறமை அகண்டு கொடுக்கும். என்னால் முடியும் எனும் உந்து சக்தி எழும்.

மொபைல் ஃபோன்கள் பயன்பாட்டிற்கு வந்த புதிதில் அவற்றில் பயன்படுத்திய சிம்பியன் ஓ.எஸ் பற்றி அறிவீர்களா? மனிதர்கள் செல்லும் இடங்களிலெல்லாம் தொடர்பில் இருக்கும் மொபைல் ஃபோன் இயங்குவதற்கு ஒரு இயங்கு தளம் தேவை என்ற ஒற்றை குறிக்கோளில்தான் அந்த சாஃப்ட்வேரை உருவாக்கினார்கள்.

இன்று உலகையே உள்ளங்கைகளில் கொண்டு வந்து சேர்க்கும் ஸ்மார்ட் ஃபோன்களை உருவாக்க அடித்தளம் அமைத்துக் கொடுத்த சிம்பியன் ஓ.எஸ் உருவாக்கியவர்களுக்கு எந்த அங்கீகாரமும் தேவைப் படவில்லை. David Potter ஆரம்பித்த PSION Software Co கொண்டு வந்த அந்த செயலியை இன்று பெரும் பாலானவர்கள் அறிந்திருக்காததைப் பற்றியும் அவர்களுக்கு கவலை இல்லை. ஏனென்றால் அவர்கள் குறிக்கோள் இந்த உலகை தங்கள் இணைக்க வேண்டும் என்பதுதானே தவிர அதற்கான அங்கீகாரம் தங்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதல்ல.

பொதுவாக எது செய்தாலும் என்ன purpose க்காக செய்கிறோம் என்பதை யோசியுங்கள் அல்லது ஒரு ஆக்கபூர்வமான purpose சை நீங்களே உருவாக்கிக் கொள்ளுங்கள். அப்படி செய்யும் போது வாழ்க்கையில் மகிழ்ச்சியையும் சேர்த்தே நீங்கள் உருவாக்கிக் கொள்கிறீர்கள் என்பதை புரிந்து கொள்வீர்கள்.

## மிதந்து செல்லும் கவிதை

மலரென்றும் மயிலென்றும்
நிலவென்றும் நதியென்றும் வேண்டும்
பொன்னென்றும் வைரமென்றும்
தேவதை என்றும்
ஏன் தெய்வமென்றும் கூட
போற்றுகிறதே அவளை
உங்களின் கவிதைகள்!
பெண்மையை - மென்மையாகத் தாங்கிய
அந்தக் கவிதைகள்
வெள்ளைநிறத் தாள்களுக்குள் படர்ந்திருக்கிறது
கண்ணுக்குப் புலப்படாத ஒருவித கருமை!
ஆம்...
ஒரு மனிதியாய் உயிரும்
உணர்வுகளும் சுயமும் நிறைந்த
ஒரு பெண்ணாய் மட்டும்
அவளைத் தாங்கிக் கொள்வதில்லையே
உங்களின் கவிதைத் தாள்கள் ?
ஒன்றைச் சொல்கிறேன் கேளுங்கள்
இனியேனும் அவளைப் பற்றிய
உவமைகளைக் கைவிடுங்கள்

உயிரற்ற உவமைகள் விடுத்து அவளின்
உணர்வுகளை உயிர்ப்பிக்கும்
வரிகளைப் பாடுங்கள்!
அவளை அவளாக மட்டுமே
உங்களின் கவிதைகளுக்குள்
இனி எப்போதும் போற்றுங்கள்!
வெள்ளை நிறத் தாள்களில்
கண்ணுக்குப் புலப்படாமலேயே
படிந்திருக்கும் கருமைகளை அகற்றுங்கள்!
அந்தத் தூய்மையான
கவிதைகளைத் தாங்கிய
வெள்ளை நிறத் தாள்கள்
அண்டப் பெருவெளி எங்கும்
காற்றில் மிதந்து செல்லட்டும்!

பி.ஹேமா
முசிறி



# நீங்கள் மொட்டைமரம்

எனது கனவைக்
காவல் காத்துக்கொண்டிருந்த
நீங்கள்
மொட்டை மரமாகிவிட்டீர்கள்
பறவைகளுக்கு
உங்களிடம் பெரிதாக ஈர்ப்பில்லை
உங்கள் மாயைகளுக்கேற்ப
நான்
அரச மரமாகலாம்
அல்லது
மல்லிகைப் பந்தலாகலாம்
நீங்கள் எனைப்
பந்தாட நினைத்து
மொட்டை மரமாகிவிட்டீர்கள்
சத்தங்களுக்கு
சருகுகள் கூட இல்லாமல்
மயானத்தை
ஏப்பமிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்
பரவாயில்லை
என்னிடம் நிறைய
கிளைகளும்
இலைகளும்
கனிகளும்
சிறகுகளும்
இறகுகளும் இருக்கின்றன
வேண்டுமென்றால் -நான்
இறகுகளை கொஞ்சம் தருகிறேனே
உங்கள் நிர்வாணத்தை
மறைத்துக் கொள்ள

- பாத்திமா நளீரா
கொழும்பு - இலங்கை



## நிலையா உலகில் நிலை பெறும் காதல்!

உயிரில் உயிராய் ஒன்றாய்க் கலந்தோம்!
உனது கண்ணில் ஐயம் ஏனோ?
கண்ணே நம்பு காதல் இனிது!
செம்மண் நிலத்தில் சேர்ந்திட்ட நீரும்
செந்நிற மாகும் காட்சி என்னே!
காண்பாய் நீயும் கருத்தில் கொள்வாய்!
அன்புடன் கலந்த என்னுயிர்க் காதல்
செம்புலப் பெயல்நீர் போலே உன்னுடன்
கலந்த விந்தை அறிவாய் பெண்ணே!
காதல் கசியும் கண்கள் சாட்சி!
நானும் நீயும் எங்கோ பிறந்தோம்!
எந்தை நுந்தை உறவா சொல்வாய்?
தேனும் திணையும் கலந்தாற் போல
தெவிட்டாக் காதல் பிறந்தது கண்டாய்!
வானும் மண்ணும் உள்ள வரையில்
வாழும் காதல் நமது அன்றோ!
அழகைக் கண்டு மயங்கி வந்த
அவசரக் காதல் அல்ல அன்பே!
ஆழமாய் நெஞ்சில் உதித்து மறையா
ஆத்ம காதல் என்றே சொல்வேன்!
நிலையா உலகில் நிலைபெற்று வாழும்
நித்தியக் காதல் இதுதான் அன்றோ!
இணை பிரியாமல் இதயம் ஒன்றி
ஈருடல் ஒருயிர் என்றே வாழ்வோம்!

ஓசூர் மணிமேகலை

## மலர் விடு தூது

மயிலிறகால் காதலென்னும்
மையொற்றி மடலெழுத

வெண்புறாவின் இறக்கைதனில்
மறைத்தனுப்பிய தூது

மேகத்திடை ஒளிந்துகொண்ட
நிலவிடம் கதைத்து

நெஞ்சம் உரைத்த
அன்பு தூது

மாறாக் காதலை
மறைக்காது தோழியிடம்

பகிர்ந்தே துயர்தீர
மகிழ்ந்த நாட்கள்

தாமரையும் அல்லியும்
பகலிலும் இரவிலும்

பார்த்தே நகைக்க
மலரிடமே தூதுவிட்டாள்

**- விஜி ஆர் கிருஷ்ணன்**



# தமிழ் வளர்ப்போம்

பரணி சுப சேகர்

மூவேந்தர் மடி வளர்ந்த முத்தமிழை மனம் நினைத்தால் முன்னெடுக்கும் முயல்வெல்லாம் முழுமதிபோல் நிறை வாகும். யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம். மாகவிஞர் எழுதிய தீர்ப்பு இது. இத்தகு செந்தமிழை தினமும் உச்சரித்தால் தீங்கரும்புச் சுவை தானே. தமிழெனும் அமுதத்தை முற்றாக உணர்ந்தவர்கள் பலருண்டு. மகாகவிக்குப் பின் பாரதிதாசன், வாணிதாசனார் முடியரசனார், நம் கவிஞர் கண்ணதாசன், அப்துல் ரகுமான், நா. காமராசன், மு.மேத்தா, மீரா, தமிழன்பன் இன்றைய கவிப்பேரரசு வைரமுத்து என இன்னும் எண்ணிலடங்காக் கவிஞர்கள் தமிழோடு வாழ்ந்து தமிழை வாழ வைத்தார்கள்.வாழ வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதுமட்டுமன்றி மொழியை முன்னெடுத்து நமக்கு மொழியை முறையாக அறிமுகம் செய்தவர்களையும் மொழிக்காக மூச்சை விட்டவர்களையும் நாம் நினைவில் வைத்திருக்கிறோமா? எத்தனை பேருக்கு அவர்களின் பெயராவது தெரியும் என்றால் அதுவும் கேள்விக்குறி தான்.

நாம் பேசும் மொழியாவது தமிழாக இருக்கிறதா? எத்தனை கலப்பு? ஏனிந்த அயலக மொழி மோகம். அமுதான மொழியென்று நாம் மார்தட்டிக் கொண்டாலும் நாம் பேசுவதில் தமிழ் இல்லையே. இது தவறென்றும் உணரவில்லையே. மொழியின் வளர்ச்சி என்பது பேசுவதில் தான். தமிழ் வளர வேண்டுமானால் அது நம் பேச்சில் இருக்க வேண்டும். கணினியில் நம் மொழியின் படைப்புகள் சேமித்து வைத்து இருக்கலாம். நீ பேசாத போது சேமிப்பால் என்ன பயன்?

பெற்ற பிள்ளைகளுக்கு தமிழைச் சொல்லிக் கொடுக்க வேண்டிய பெற்றோரே தன்னை மம்மி டாடி என்று சொல்வதையே விரும்புகிறார்கள் என்றால் தவறு யாருடையது? நம் பண்பாடும் கலாச்சாரமும் மொழியுணர்வில் தான் இருக்கிறது. இன்றைய நவீனம் நமக்குத் தேவைதான். ஆனால் மொழியை பலவீனப் படுத்தக்கூடாது. விளம்பரங்களில் கூட தமிழ் அழிந்து வருவதை உணர்ந்தவர்கள் எத்தனை பேர்? இது மட்டுமின்றி மொழியால் நற்படைப்புகளைத் தந்த, தருகின்ற எத்தனையோ நல் உள்ளங்கள் பின்புலம் இல்லாத நிலையில் காணாது போகிறார்களே.

திறமையிருந்தும் தமிழறிந்தும் பல கவிஞர்களின் பெயர்கள் கூட நாம் அறிய முடியாமல் வெளியுலகம் அறியாமலே நம்மை விட்டு போய்விட்டார்கள். காரணம் என்ன வென்று சொல்வது? பாழாய்ப் போன அரசியல் இனம் சாதி இவைகளே பலரை இருட்டடிப்பு செய்கின்றன.

இது ஏற்புடையதா? நல்ல கவிஞனுக்கு மொழி தவிர வேறெதுவும் கிடையாது. ஆனால் நடைமுறையில் இவன் நம்மவனா.. அப்படியானால் போற்றிப் பாடு.

இல்லையா அவனை மேடை ஏற்றாதே என்ற நிலைப்பாடு காலம் தொட்டே தொடர்ந்துதானே வருகிறது. மொழியில் பேதம் பார்க்கலாமா?

கவிதை எழுதுபவனை படைப்பாளி என்று சொல்கின்றோம். படைப்பவன் அனைவருமே இறைக்குச் சமமானவர்கள் தான். உயரிய கவிதைக்கு சாதி மதம் இனம் கிடையாது. அவன் அனைவருக்கும் பொதுவானவன். அவனை மேற்சொன்ன சிறிய வட்டத்துக்குள் நிறுத்துவது மொழிக்கு செய்யும் துரோகம் இல்லையா?. எதிரிகளை மன்னித்து விடலாம். ஆனால் துரோகிகளை மன்னிக்கக் கூடாது. பெரிய பெரிய தலைவர்களை யெல்லாம் சாதிக்குள் இழுத்ததால் தான் அவ்வளவு பெரிய தலைவர்களும் முச்சந்திக்குள் கூண்டுக்குள் நிற்க வேண்டிய அளவுக்கு ஆளாகி விட்டார்கள். இதனை யாரும் யோசித்ததாகத் தெரியவில்லை.

இனத்திற்கும் சாதிக்கும் அப்பாற் பட்டவன் கவிஞன் மட்டும் தான். காரணம் அவனின் மனிதாபிமானம். கவிஞனின் பார்வையில் மொழியைத் தவிர வேறொன்றும் இல்லை. கவிஞனை சாதி மதம் வைத்துப் பார்த்தால் மொழியை முடக்குவதாக மட்டுமே அர்த்தமாகும். மொழிக்கு சாதி மதம் கிடையாதென்றால் படைப்பாளிகள் மட்டும் பாவப் பட்ட வர்களா.

எழுத்து எல்லோருக்கும் வந்து விடுவது இல்லை. எழுத்தாளன் தான் எதையும் சொல்ல முடிந்தவன்.. சொல்லத் தெரிந்தவன்.. அவனைப் போற்றிட வேண்டாமா?

கவிஞர்களைப் போற்றி வளர்த்ததால் தான் பல மன்னர்களின் வரலாறே வெளியே தெரிந்தது. உயர்த்தி விட உறுதுணையாக இரு. அது உன்னால் முடிய வில்லை யென்றால் உதறித்தள்ளாது இரு. காலச் சக்கரம் சுழன்று கொண்டே யிருக்கும். புறக்கணிக்கப் பட்டவர்கள் ஒரு நாள் புயலாகக் கூட எழலாம். வரிகள் அப்போது உன்னைத் தோலுரித்துக் காட்டிவிடும்.

ஏணியாக நீயிரு. ஏற்றிவிடு. ஏற்றிய பின் ஏறியவனைப் பார். இப்போது அவன் மனத்திரையில் நீ இமயமாக உயர்ந்திருப்பாய். உன் மனம் இளக உள்ளுணர்வும் மகிழும். அதை அனுபவி. எழுதுகோல் தெய்வம் இந்த எழுத்தும் தெய்வம் என்ற வரிகளைப் போற்றி எழுத்தாளனை உயர்த்திவிடு. இது தான் மொழிக்கு நீ தரும் மரியாதை.

மொழி வளர்ந்தால் மட்டுமே இனம் வளரும்என்றஉண்மையைஉணர்ந்துகொள். பாரதி போதுமென்று நினைத் திருந்தால் பாரதிதாசன் இல்லை. பாரதிதாசன் போது மென நினைத் திருந்தால்... இது ஒரு மொழிப் பிணைப்புத் தொடர். ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு சூழலுக்கு ஏற்ப கவிஞர்கள் உருவாகிக் கொண்டேதான் இருப்பார்கள். எந்தக் கருத்துக்கும் எதிர் கருத்தும் இருக்கவே செய்யும். மொழியின் வளர்ச்சியே அதனை எதிர்கொள்வதில் தான். விமர்சனத்தை வரவேற்க வேண்டும். மாறாக எதிர்கருத்துரைப்பார் எவரும் இருக்கக் கூடாது அவன் படைப்பு வெளியாகக் கூடாது என்றால்.. நாளை காலம் சுழலும் போது உன் படைப்பும் காணாது தான் போகும். எழுத்து என்பது ஒரு தவம். இதை நல்வழிக்கு மட்டுமே பயன் படுத்தவேண்டும்.

எழுத்தை வியாபாரம் ஆக்குபவன் கவிஞனில்லை. எந்த வரிகள் சோகத்தோடு இருப்பவனுக்கு ஆறுதல் தருகிறதோ எது விழிப்புணர்வைத் தருகிறதோ.. எந்த வரிகளால் அனைவரும் ஈர்க்கப்

படுகிறார்களோ அதுவே எழுத்து, அதுவே பாடல், அதுவே வரலாறு. அதை எழுதியவனே கவிஞன் எழுத்தாளன் படைப்பாளி. எழுத்தை விற்காத கவிஞனை போற்றிப் பாட வேண்டும். அவனைப் பாதுகாக்க வேண்டும். அதை உன் கடமையாகக் கொண்டு எழு. எழுத்தை வியாபாரம் ஆக்குபவன் தான் மொழிக்கலப்பு செய்கிறான். அப்பாடலைப் புறந்தள்ளு. அவனுக்கு காசு தான் முக்கியம் என்பதால் கொள்கை யிருக்காது. குறிக்கோள் இருக்காது.

தன்னுடைய தேவைக்காக எதையோ எதிர்பார்த்து எழுதுபவனை புறந்தள்ளு. அவன் எழுத்தில் மொழியின் ஆளுமை யிருக்காது. வளையும் நிலைப்பாடு வரி களாகி விடாது. வடித்தவன் படைப்பாளி யாகி விடமாட்டான்.

உள்ளுணர்வில் எவனொருவன் மற்றவர்களின் கண்ணீரைப் பார்க்கி றானோ அவனே எழுத்தாளன். அவன் நாட்டின் சொத்து. அவனை எந்த முத்திரையும் குத்தாமல் அவனை பாது காத்து ஏற்றி விடும் முயற்சியில் நீ யிரு. மொழி நன்றாக வளரும். நீ தமிழன் என்ற உணர்வு இருக்குமென்றால் மொழிக்காக எதையாவது செய். இல்லையா.. தமிழன் என்று சொல்லிக்கொள்ளாதே. சமுதாய மாற்றமெல்லாம் செய்ய வேண்டாம். உன் வீட்டில் உன் பேச்சில் தமிழைக் கொண்டுவா..காலம் உன்னை கைவிடாது. நம் அடையாளம் நம் மொழி தான். இதை நம்மைவிட நம்மை ஒடுக்க நினைப்பவர்கள் அறிந்ததால் தான் மொழியை ஒடுக்க முயல்கிறார்கள். கடமையைச் செய். தமிழ் வளர்ப்போம். தாயகம் காப்போம். தாய் மொழி வளர்ந்தால் தான் தந்தையர்நாடு வளமாகும். இனியாவது தமிழ் உரைப்போம்.

வாழ்க தமிழ்.. வளர்க தமிழ்.

# இயற்கை

# அன்னையின் கைகள்

ஒன்றாகவே நடந்து வீடடைந்தோம்
நானும் மழையும்
என்னை மட்டும் உள்ளே அழைத்து
தலையைத் துவட்டினாள்
வாசலில் காத்துக்கிடந்த அம்மா
கோபித்துக் கொண்டு வெளியிலேயே
நின்றிருந்த மழைக்கு ஆறுதல் சொல்லி
அரவணைக்கிறது காற்றில் அசைந்தாடும்
மரத்தின் கிளைகள்

# நெடும்பயணம்



எவ்வளவு நெடுந்தூரம்
அவள் கண்களில் விழுந்து
இதயம் பிடித்து
கன்னம் தாண்டி
உதடு வந்து சேர்வதற்குள்
போதும் போதும்
என்றாகி விடுகிறது

# கண்ணீர் சிந்தும் செடிகள்

சாலை ஓரத்தில்
செடிகளை விற்கும் சிறுமி
தாகம் எடுத்து தண்ணீர்
குடிக்கும் போதெல்லாம்
வாடி இருக்கும் செடிகள் மீதும்
தெளிக்கிறாள்
பேரம்பேசி வாங்கியவரிடம்
செடிகளைக் கொடுக்கும்போது
அவளின் கைகளில் விழுகிறது
தண்ணீர் துளிகள்
யாருக்குத் தெரியும்
அந்தத் துளிகள் பிரிந்துசெல்லும்
ஏக்கத்தில் செடிகள் சிந்தும்
கண்ணீராகவும் இருக்கலாம்

சீ.பாஸ்கர்

# காதல் மாயம்

ஒத்த கேள்வி கேட்டதும்
மொத்த மனமுமே மாறிவிட்டது
ஒரு கேள்வியில்லாமல்
ஒரு கவனிப்பில்லாமல்
ஒரு கவலையில்லாமல்
எப்படி உன்னால் இருக்க முடிந்தது?
எப்படி என்னை நினைக்காமல் இருந்தாய்?
என்னவாயிற்று உனக்கு?
எப்படி மாறிவிட்டாய் நீ
எங்கோ சென்றுவிட்டாய்.

மறந்துவிட்டாயா அல்லது
மறுத்துவிட்டாயா என்னை?
சலித்துவிட்டதா அல்லது
சளைத்துவிட்டதா உனக்கு?
சொல், அன்பே
என்னோடு அன்பென்றால்
இப்படி செய்திருக்கமாட்டாய்



என்னை விட்டுச் சென்றிருக்கமாட்டாய்
சிறிதுகூட என் நினைப்பில்லையா
உனக்கு
சிறிதுகூட என்மீது அன்பில்லையா
உனக்கு
சிறிதுகூட என்னோடு பேச
நேரமில்லையா உனக்கு

பெரும்பிரிவாவது பரவாயில்லை,
இதுபோல தற்காலிகங்களை விட.
இதுவே பெரும்வதை, கடுந்துயர்.
பேசியும் பேசாமலும்
பார்த்தும் பார்க்காமலும்
சந்தித்தும் சந்திக்காமலும்
காதலித்தும் காதலிக்காமலும்
கண்ணீர் வரச் செய்கிறாய்
கண்ணீரோடுதான்
வாழ்கிறேன் நான்
கண்ணீரோடுதான்
கழிக்கிறேன் நாட்களை
கண்ணீரோடுதான்
கவிதைகள் எழுதுகிறேன்
கவிதைகளாவது காதலை
உயிர்ப்பிக்கட்டுமே என்று.
காதல் அது சாகாமல் வாழும்.
அதுவரைக்கும் உன்னை நான்
காதலித்துக்கொண்டிருப்பேன்.
காதலிக்கத் தகுதியான ஒருவன் நீ
நீ எனது நேசன், நீ காதலுற்குரியவன்.

'கலைநேசன்'

முஷ்தாக் அஹ்மத்

# கேடில் பேறு...

ஆடிக்கறையை அடியோடு அழிக்கலாம்
அகத்தின் கறையை எப்படி அழிப்பாய்?

தேடித்தேடி நிழல்தனைச் சேர்க்கலாம்
தெளிவான நிஜத்தை எப்போது பார்ப்பாய்?

கோடி செல்வம் கொண்டாடித்தீர்க்கலாம்
கேடில் பேறு எங்ஙகனம் உய்ப்பாய்?

மாடிமனையென்று மதர்ப்பினில் இருக்கலாம்
மனங்களின் நேசம் எவ்வாறு பறிப்பாய்?

வேடிக்கைப் பார்த்துதவாது  விலகியே இருக்கலாம்
விதியின் வினையை எப்படி முறிப்பாய்?

ஓடியோடி உனக்கென்று உலகமதில் சேர்க்கலாம்
உடன்பிறந்தார் சாபமதை எதைவைத்துக் குறைப்பாய்?

கேடியென வாழ்ந்து கேவலமாய்ப் போகாது
கண்ணியமே காத்துப் புண்ணியசொர்க்கம் புகுவாய்

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், இலங்கை

# துளிப்பாக்கள்

ஓவியம் வரைய
பென்சில் பிடித்தேன்
தாளில் கையின் நிழலோவியம்

இரவில் எழுதுகிறேன்
ஆழ்ந்து படிக்கிறது
குவிந்திருக்கும் மின் விளக்கு

கொட்டத் தொடங்கிய மழை
குழந்தையை அணைக்கிறாள் தாய்
பொம்மையை அணைக்கும் குழந்தை

நீரில் தத்தளிக்கும்
நிலவைப் பார்த்தேன்
வானில் அமைதியாக இருக்கிறது

கிழக்கில் உதித்த சூரியன்
வடக்கிலிருந்து தெற்கு வருகிறது
என்னோடு பயணத்தில்

சா. கா. பாரதி ராஜா,
பெரிய நத்தம், செங்கல்பட்டு. 603002.

# ஞானம்

வெளவால்கள் சிறகடிக்கும் சத்தம்
இரவுடைக்கும்
பின்னிலவு நிலம் துடைக்கும்
சம்மட்டி தேடும்.

மேகம் விலக்குகிறேன்
வானவில் உடைகிறது
கைகளில் மாக்ஸிம் கார்க்கி.

முதலாளித்துவ மூர்க்கம் சனநாயகக்
கறையான கைகளில்
சிவப்புக் கொடி துண்டுப் பிரசுரம்.

உழைப்பாளர் சிலை வடிக்கும் குருதி
வலைத்தளங்கள் நனைக்கிறது.

வலசைப் பறவைகள் ஓய்வதில்லை
ஓய்ந்தால் உலகமில்லை.

கனகசபாபதி செல்வநேசன்.
அல்வாய்.

# தன்முனைக்கவிதைகள்

அகமோ புறமோ
இரண்டையும் தொட்டிடுகிறது
அன்பே சிவமெனும்
அழகுத் தன்முனையொன்று

சுக வெளியீடோ
அறுவை சிகிச்சையோ
கவிதைப் பிரசவத்தில்
அடிவயிற்றில் நெருப்பு

ஆடை அசூசைகள்
பெண்களுக்கான சாபங்களே
கடவுள்பின் ஒளிகின்றன
ஆணாதிக்க அல்பங்கள்

தனிமையின் கதகதப்பில்
தளும்பும் சுயவிமர்சனங்கள்
இறுக்கங்களைத் தளர்த்தலில்
இளகும் சுயகௌரவங்கள்

அணையா நெருப்பாய்
ஆறா வெறுப்பாய்
மனித சுயநலத்தின்
மரிக்கா உயிரிச்சைகள்

அற்ப ஆராய்ச்சிகளால்
அங்கலாய்க்கும் மனம்
சுயம் தொலைந்து
சூனியத்தில் கரைகிறது

இயற்கை முன்
மண்டியிடும் கடவுள்
இடி தாங்கிகளாய்
கோபுர கலசங்கள்

ஆசிரிய சிற்பிகளின்
கட்டப்பட்ட கைகள்
கூர் தீட்டலின்றி
வெறுங்கற்களாய் மாணவர்கள்

என்னை நானே ரசிகனாக்கி
என் கவிதைகளில் தேடுகிறேன்
வலிகளின் சிலுவையில்
உயிர்க்கும் அமைதி

**- ராஜு ஆரோக்கியசாமி**

நெகிழிக் குப்பை
புகுந்தது மண்ணுக்குள்
வற்றி போனது
நிலத்தடி நீர்

கோ.பவித்ரா, காஞ்சிபுரம்

## வண்ணங்களில்... எண்ணங்கள்

உலகளாவிய நேரத்தில்
உணர்வுகளை
அடக்கிடும் வாழ்வில்...
அவரவர் எல்லையில்
அவரவர் தேவைகள்
நிறைவுறும் நிலையில்லையே!

ஆண்டாண்டு காலமாகப்
பருவங்களில் உண்டாகும்
தேடல்கள்...

சண்டை இல்லாது
பல்லுயிர்களின்
பசியைப் போக்குதல்
மீண்டும் மீண்டும்
உண்டாகும் பிறப்போடு
இறப்பாகுதலை... தாண்டி
தன்னைத்தானே தூண்டி
தமிழோடும் தாய்நாட்டுப்
பொருளோடும் உழன்று
உயிரோடு உடலைக்
காத்துவிடும்.

வெளிநாட்டு வாழ்க்கை
கற்றுத்தரும் கடமையில்
நம்பிக்கை...

நிலத்தை விற்று
வீட்டை விற்று
விமானத்தில் ஏறிடும்
வலசைகள் வாங்கிடும்
ஊதியத்தில்...

பண்டிகைக்குப் பத்தாயிரம்
வாலாக்கல் வானிலே
பாயும் வண்ணங்கள் கொண்ட
வாணவேடிக்கை.

எண்ணமெல்லாம் என்றாவது
ஒருநாள் எல்லாம்
சரியாகிடும் அன்றைக்கு...

**ச.அன்புவடிவு**
சிங்கப்பூர்

# நீ யாரோ - நான் யாரோ

– உடுவிலூர் கலா

சங்க கால இலக்கியங்களை இரண்டு வகைப்படுத்தலாம். ஒன்று அகத்திணை. ஆணும் பெண்ணும் காதல் வசப்பட்டு தமக்குள் நடக்கும் ஊடல்கள் கூடல்கள் உணர்வுகள் என்பவற்றை பிறருக்கு எடுத்தியம்ப முடியாது அவ்வாறு படைக்கப் பட்டவை அகத்திணை எனவும், மன்னனின் படை பலம், வீரம், ஆட்சித்திறன், ஆகியவற்றைப் பேசுவது புறம் சார்ந்தவையாகும்.

சங்க காலத்தில் அகம் சார்ந்த நூல்களே அதிகம் இருந்தன. நற்றிணை குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு கலித்தொகை என்பன அகம் சார்ந்த நூல்கள் ஆகும்.

இவை காதலையே அதிகம் கூறி நின்றன. அன்றும் இன்றும் கண்டவுடன் ஈர்ப்புக் கொண்டு காதல் கொள்வது சாதாரண மானது. இன்று இக்காதலைப் பல பெயர் கொண்டு அழைத்தாலும், பல வடிவம் கொண்டாலும் அன்று கண்ட மாத்திரத்தில் தோன்றிய காதல் தெய்வீகப் புணர்ச்சி என்றே அழைத்தனர்.

இவ்வாறு காதலர் மீண்டும் சந்திக்க முதல் சந்தித்த இடத்தையே தேர்வு செய்வர். இதனைச் சங்க காலத்தில் 'இடந்தலைப்பாடு' என அழைப்பர்.

அதேபோல, தனது வருகையைத் தெரியப்படுத்த மரத்தின் மேல் காதலன் கல்லை எறிவான். இருக்கும் புள்ளினங்கள் பறந்து போகும்.. பறவைகளின் ஓசையை அவனின் வருகையின் அறிகுறியாக அறிந்து கொள்வாள்.இதனை 'இரவுக்குறி' என அழைப்பர்.

சிலவேளை அவன் வராமலே போனால் அவள் துன்புற்று நிற்பாள். இதனை, 'அல்லக்குறி படுதல்' என அழைப்பர்.

இவ்வாறு காதலை, அதன் புனிதத்தை அன்று அவர்கள் கையாண்ட விதம் அக்காலப் பாடல்களில் காணலாம்.

காதல் என்பது இரு உள்ளங்களின் பிணைப்பாக, ஒருவரோடு ஒருவர் உணர்வுகளோடு ஒட்டி உறவாடி உயிர்மை பெற்றுப் புனிதமாக வாழ்வது ஆகும்.எமது இலக்கியங்களில் பேசப்படும் காதல் மட்டுமல்ல, காதலியின் பிரிவைத் தாங்க முடியாத காதலனின் விரக்தி நிலையான மடலேறுதல்கூட இன்றுவரை வாழ்கிறது.

அன்றைய காதலின் மேன்மையைப் புனிதத்தைச் சொல்லும் சிறந்த பாடலொன்று சங்ககால இலக்கியமான குறுந் தொகையில் வருகின்ற 40ம் பாடல்.

இப்பாடலைப் பாடிய புலவர் யாரென் பது இன்றுவரை தெரியாது. ஆனால், சுரதாவின் பாடல்களில் வரும் உவமைகள் போல இப்பாடலிலும் வருகின்ற, காதலை ஒப்பிட்டு நோக்குகின்ற உவமையின் பெயரில் பாடிய புலவர் இன்றுவரை பெயர் கொள்கிறார். புலவரின் பெயர் செம்புல பெயனீரார் என்பதாகும். உவமைகளைக் கையாண்டதாலே சுரதா இன்றுவரை உவமைக் கவிஞர் என்று தன்னை அடையாளப் படுகியுள்ளார்.

சரி பாடலை நோக்குவோம்.

'யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே..'

(குறுந்தொகை 40
- செம்புலப்பெயனீரார்)

யார் யாரோ குடிகளில் பிறந்த இருவர் அதாவது ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் சந்திக்க நேருகிறது. தம்மை அறியாமலே விழிகள் கணை வீசி மனங்கள் ஈர்க்கப்பட்டு காதல் பிறக்கிறது. பிரிய முடியாத அளவுக்கு இருவரும் நெருக்கம் கொள்கின்றனர். இடையே தலைவிக்கு ஐயம் ஏற்படுகிறது. தெய்வத்தால் இணைக்கப் பட்டோம். ஆனாலும், பிரிவு வந்து விடுமோ, தலைவன் தன்னைப் பிரிந்து விடுவானோ என்று அஞ்சினாள். இதனைக் குறிப்பாலுணர்ந்த தலைவன் தலைவிக்கு பிரிவில்லை நமக்கு உணர்த்தும் பாடலே இது.

பாடல் விளக்கம் இதோ :-

நானும் நீயும் யார் யாரோ தெரியாது. என் தந்தையும் உன்தந்தையும் எந்த முறையில் உறவோ அதுவும் தெரியாது. நானும் நீயும் எந்த உறவின் வழி வந்தோம் என்று கூடத் தெரியாது. ஆனால், செம்மண்மேல் பெய்த மழை நீர் மண்ணின் நிறத்தைக் பெற்றுக் கொண்டு பிரிய முடியாதுள்ளது போல் ஊழ் வினைப் பயனாக இருவரும் அன்பாக இணைந்து விட்டோம்.

இனிப் பிரிவென்பது நமக்கில்லை என்று தலைவன் கூறுவது போல் இப்பாடல் அமைந்துள்ளது.

செம்மண்ணிலே தண்ணீரைப் போல் உண்டான பந்தம் இது என்கிற சினிமா வரிகள் இந்த உவமையோடு நோக்கத் தக்கது.

இங்கு, 'யாயும் ஞாயும்' என்ற சொற்கள் நானும் நீயும் என்றும், 'எந்தையும் நுந்தையும்' என்ற சொற்கள் என் தந்தையும் உன்தந்தையும் என்றும், 'செம்புலம்' என்பது செந்நிலம் அல்லது செம்மண் என்றும்' பெயனீர் 'என்பது மண்ணை நோக்கிப் பெய்யும் விசும்பின் நீர் என்றும் பெயர் கொள்கிறது.

# விடுதலை

உணவகத்தின் முன்பு நின்று
கொடியசைத்துக் கொண்டிருக்கும் பெரியவர்
பசியின் நிறம் தெரிகிறது

.

உங்கள் உள்ளங்கைகளும் ஒருநாள்
உலகமாக வேண்டுமெனில்
விடுவித்து விடுங்கள்
சிட்டுக் குருவிகளை
சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டக்குருவிகள்
வாழ்நாள் முழுவதும்
பெருமையுடன் பேசப் போவது
தன்னைப் பற்றியல்ல
தான் பெற்ற சுதந்திர உலகத்தைப்
பற்றி தான்...

.

வரிசையாகவும், நேராகவும்,
வைக்கப் பட்டிருந்தன
சிலுவைகள் அனைத்தும்
ஆனால் என்ன
குறுக்காவும், நெடுக்காகவும்
அவர்கள் ஏற்கனவே
வாழ்ந்து முடிந்திருந்தார்கள்...

**இரா. மதிராஜ்**
காங்கேயம்



# தன்முனைக் கவிதை தோற்றமும் - வளர்ச்சியும்

**அன்புச்செல்வி சுப்புராஜு**
பட்டாபிராம், சென்னை

**வருத்தப் படாதே**
**உடைந்த மண் பானைக்கு…**
**பூமி தயாராகிறது**
**புதிதாக வடிவமைக்க…**

**- என். கோபி**

தெலுங்கு இலக்கியத்தில் ஒரு கவிதை வடிவமானநானிலுசாகித்யஅகாடமிவிருது பெற்ற பேராசிரியர் என். கோபியால் 2002 ஆம் ஆண்டு அவரது 'நயீலு' புத்தகத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆழ்ந்த கருத்துடன், எளிமையாய் புரிந்து கொள்ளும் தன்மையுடன் இருக்கும் 'நானிலு' வாசிப்பாளர்களிடையேயும், படைப்பாளர் களிடையேயும் பரவலாய் வரவேற்பைப் பெற்று தன்னை நிலை நிறுத்திக் கொண்டது.

●சுந்தரத் தெலுங்கில் சிறு குழந்தை களை நானா / நானி என்று செல்லமாக அழைப்பது வழக்கம். நானி என்றால் சிறியது என்று பொருள்படும்.

●நேனு + நுவ்வு (நான் + நீ) நானும், நீயுமாய் இணைந்து 'நானிலு' வாக முழுமையடைவது.

இந்த இரண்டு காரணங்களுக்காகவே இச்சிறு கவிதை வடிவத்திற்கு 'நானிலு' என்று பெயர் வைத்ததாக கூறுகிறார் டாக்டர் கோபி.

●நானிலு என்பது நான்கு வரிகளில், இருபது எழுத்துக்கள், அதிகபட்சமாக இருபத்தைந்து எழுத்துக்களுக்குள் அடங்கு மாறு எழுத வேண்டும்

●முதல் இரண்டு வரிகளில் சொல்லப் படும் கருத்து அல்லது செய்தி குறியீடாக அமைந்து, அடுத்த இரண்டு வரிகள் முதலில் வரும் கருத்தைச் சார்ந்தோ, எதிர்த்தோ எவ்வகையிலாவது தொடர்புள்ளவாறு எழுத வேண்டும்.

●முதலிரண்டு வரிகளை மட்டும் வாசித்தாலோ அல்லது கடையிரண்டு வரிகளை மட்டும் வாசித்தாலோ கவிதை யின் பொருள் முழுமையடையாமல் தொக்கி நிற்கும். முழுமையாக நான்கு வரிகளையும் வாசிக்க கவிதையின் பொருள் முழுமையாக நிறைவுறும் வகையில் எழுத வேண்டும். அதாவது கட்டமைப்பில் ஒரே மாதிரியாகவும் இரண்டு வாக்கியங் களாகவும் தோன்றினாலும், சிந்தனையில் ஒருங்கிணைந்தால்தான் கவிதை நிறைவு அடையும்.

●ஹைக்கூ மற்றும் அதன் வகைமைகள், நவீன மற்றும் படிமக் கவிதைகள் போன்ற வைகளும் மேற்சொன்ன விதிமுறைகளின் கீழ் வந்தாலும் கூட 'நானிலு' கவிதை

களில் நாம் கூறிவரும் கருத்தை சிறு அழுத்தமுடன், தெளிவாகக் கூறுவது சிறப்புறும்.

•இயற்கை, அறிவியல், உறவுகள், உணர்வுகள், அனுபவங்கள், சமூகக் கோட்பாடுகள் முதலியவற்றை எளிய சொல் கொண்டு செறிவுடன் எழுதுவதே 'நானிலு'

இத்தகைய சிறப்பு வாய்ந்த நானிலு கவிதைகள் குறித்து எழுத்தாளர் சாந்தாதத் அவர்கள் தமிழ் இலக்கிய இதழ்களில் தொடர்ந்து அறிமுகம் செய்து வந்தார். அவ்வகையில் நானிலு பிரம்மா கோபி அவர்கள் எழுதிய தெலுங்கு நானிலு கவிதைகளை தமிழில் மொழிபெயர்த்து அக்கவிதைகளுடன் எழுத்தாளர் சாந்தாதத் அவர்கள் எழுதிய 'தெலுங்கு இலக்கியத் தளத்தின் புதிய தடம் நானிலு' கட்டுரை ஒன்று அக்டோபர் 2017 மகாகவி இதழில் வெளிவந்தது. இந்தக் கட்டுரையை வாசித்த கவிச்சுடர் கா.ந. கல்யாணசுந்தரம் ஐயா அவர்கள் நானிலு கவிதையின் பால் மிகவும் ஈர்க்கப்பட்டார். தொடர்ந்து தமிழ் மொழியில் 'நானிலு' கவிதை வகைமையை எவ்விதமாவது படைப்பாளர்களிடையே, வாசிப்பாளர்களிடையே கொண்டு சேர்க்க வேண்டும் என்ற ஆவல் கவிச்சுடர் ஐயா அவர்களின் மனதில் உதித்தது...

எழுத்தாளர் சாந்தாதத் அவர்கள் மொழிபெயர்த்து மகாகவி இதழில் வெளி வந்த கட்டுரையில் என்னை ஈர்த்த கவிதை ஒன்று

சொல்வது
புரியாததற்கு
மொழி மட்டும் காரணமல்ல
மனமும்...

தொடரும்

## ஒரு தபாற்பெட்டியின் துயரம்

(நிலைமண்டில ஆசிரியப்பா)

சிவப்பு வண்ணம் செறிந்த உருவம்
உவப்பில் ஊரவர் உள்ளம் நிறைக்கும்
என்னைக் கண்டே இயங்கிடும் காலை
என்னுள் அடக்கிய உணர்வுகள் ஆயிரம்
எம்மொழி யாயினும் இன்முகச் சேவை
அம்மா பாசம் அப்பா வியர்வை
நட்பின் தொடர்ச்சி நாட்டின் நடப்பு
திட்டங்கள் போடல் திசைகளின் இணைவு
பாசத்தின் வாசனை பள்ளித் தோழமை
நேச உறவுகள் நெகிழும் நினைவுகள்
அரச அலுவல் அன்புப் பரிமாறல்
உரிமைப் போர்கள் ஊரின் நலன்கள்
உறவுப் பாலம் உயர்கல்விச் சாலைகள்
முறையாய் இயங்க முதுகெலும் பானேனே!

அறிவியல் தந்த அஞ்சலின் வரவால்
வறியோன் ஆகிநான் வாடி நிற்க
தேடி வருவோர் தெருவில் இல்லை
ஆடி அடங்கி அமிழ்ந்ததே வாழ்வு
துலங்கிய நினைவுகள் துயருள் மூழ்க
கலங்கி நானும் கதியினை இழந்தே
மீண்டும் வசந்தம் மிளிரும் என்றே
பிள்ளையார் கோயில் பேச்சிலா ஓரம்
உள்ளம் ஏங்க ஊமை யானேனே !



சுகந்தி மார்க்கண்டு
கனடா

# இதோ! புதிய மன்னவர்கள்

**கவிமணி இரஜகை நிலவன்**
மும்பை

அந்தக் கல்லூரிக்கு மாணவர்களும் மாணவிகளும் மாறி மாறி வேகமாக பைக்கிலும் சைக்கிளிலும் பஸ்ஸிலுமாக வந்து சேர, வாசலில் பைக்கில் சிவாவும், விக்னேஷும் யாருக்காகவோ காவல் நின்று கொண்டிருந்த

இன்னொரு ஹீரோ ஹோண்டாவில் வேகமாக வந்திறங்கிய மனோகர், "ஹாய் மச்சி... கிளியோ பாட்ரா வந்தாச்சா?" என்றான் கூலிங்கிளாஸைக் கழற்றிக் கொண்டே.

"இல்லைடா அவள் வரவிற்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறோம்"

"ஜொள்ளு விடறதுக்காவே சீக்கிரம் வந்து விடுவீர்களே" என்றவாறு பைக்கிற்கு ஸ்டான்ட் போட்டான் மனோகர்

"நம்ம மட்டும் இங்கே எதுக்கு வந்து நிற்கிறோம்?" என்று மறைமுகமாக கேள்வியை எழுப்பியவாறு சிகரெட் பற்றவைத்தான் சிவா.

"சரிடா.. நமக்குள்ளே என்ன தகராறு". மனோகர் சிகரெட் எடுத்துக்கப்பா என்றான் விக்னேஷ்.

சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தபடி "நான் நேற்று சொன்னதெல்லாம் நினைவிருக்கிறதா? இல்லை மறந்து போயாச்சா?" என்றான் மனோகர்.

"இன்றைக்கு நாம் மஞ்சுளாவிடம் க்ளீயராக பேசி விடுவோம் அவ்வளவு தானே" என்றான் சிவா.

"அவள் வரும் போதே விடுகிற தனி லுக் இருக்கே. அவள் என்னைத்தான் பார்க்கிறாள் என்பது நன்றாக தெரியும். இருந்தாலும் நம்ம பிரண்ட்ஸ் மனம் தளரக் கூடாதே என்பதற்காகத்தான் நான் இன்று பேசி விட வேண்டும்" என்றவாறு விசிலடித்தான் தூரத்தில் புத்தகத்தை கையில் ஏந்தியவாறு நடந்து வந்த மஞ்சுளாவைப் பார்த்தவாறு.

மஞ்சுளாவும் மனோகரின் தங்கை வினிதாவும் சேர்ந்து வந்து கொண்டிருக்க, "மஞ்சு ஒரு நிமிடம் உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும்" என்றான் மனோகர் அவன் அருகே சிவாவும் விக்னேஷும். வந்துவிட "என்னப்பா காலையிலே சைட் அடிக்க வந்தாச்சா. போய் உங்க வேலையைப் பாருங்கப்பா. அண்ணா ஒழுங்கா காலேஜுக்குப் போற வேலையைப் பாரு" என்றாள் வினிதா.

"சரிதான் போடி போய் உன் வேலையைப் பார். மஞ்சுவிடம் தான் நாங்கள் கொஞ்சம் பேச வேண்டும்" என்றான் மனோகர் கோபமாக.

"வினிதா நீ காலஜுக்குப் போயேன். ஏதோ நம்ம ஜொள்ளர்கள் கேட்கணும் என்கிறார்கள். நான் கொடுத்து விட்டு வருகிறேன்" என்ற வாறு குனிந்து காலில் கிடக்கும் செருப்பைக் கழற்றினாள்.

"மஞ்சு செருப்பையெல்லாம் கழற்ற வரவேண்டிய அவசியம் ஒன்றுமில்லை. நாங்கள் ஒன்றும் உன் கையைப் பிடித்து இழுக்கவுமில்லை. இடையில் கிள்ளவுமில்லை. செருப்பைக் கீழே போடு" என்றான் விக்னேஷ்.

"எல்லாம் வீட்டிற்கு வா. அப்பாவிடம் சொல்கிறேன்" என்று மனோகரிடம் கத்தி விட்டுக் கிளம்பினாள் வினிதா.

கழற்றிய செருப்பைக் கீழே போட்டு விட்டு "என்ன கேட்க வேண்டும் சொல்லுங்கள்?" என்றாள் மஞ்சுளா.

"இது நியாயமான விஷயம். நேரடியாக கேட்கிறோம். எங்கள் மூவரில் உனக்கு பிடித்த பையன் யார்?" என்றான் சிவா.

"எதற்கு என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளவா?" என்று சிரித்தவாறு கேட்டாள் மஞ்சுளா.

கொஞ்சம் நிலைகுலைந்த மூவரும் என்ன சொல்வதென்று புரியாமல் நிற்க, சுதாரித்துக் கொண்ட விக்னேஷ், "மஞ்சு, நான்,சிவா, மனோகர் மூவரும் இங்கே தினமும் உனக்காக காலையிலும் மாலையிலும் காத்திருப்பது உனக்குத் தெரியுமல்லவா?" என்றான்.

"ஓ! நீங்கள் எனக்காக காத்திருந்தீர்கள் என்று தெரியாமல் போனதே. அன்று வினிதா, மனோகரிடம், 'ஏண்ணா இங்கே நின்று கொண்டிருக்கிறாய்' என்றதற்கு, 'சும்மா வானத்தையும் பறவைகளையும் பசும் மரங்களையும் பார்த்துக் கொண்டு நிற்கிறோம்' என்று சொன்னானே" என்று சிரித்தாள்.

"இது கேலி பேசுகிற நேரமில்லை மஞ்சு. நாங்கள் சீரியஸாக பேசுகிறோம்

# தமிழர் மரபு

தன்முனைக் கவிதைகள்

கைகூப்பி வணங்குதல்
தமிழரின் மரபாம்
கைகுலுக்கி வரவேற்றல்
மாறிவிட்ட மரபாம்

இசையும் நடனமும்
இனிமை தந்திடும்
தமிழர் வாழ்வில்
கலைக்கே முதலிடம்

சங்கத் தமிழனின் ஆற்றல்
ஐவகை நிலப் பகுப்பு
தொல்காப்பியன் தந்தான்
தமிழின் இலக்கண மரபு

இயற்கையோடு ஒன்றியதாம்
தமிழனின் வாழ்வு
இதை அறிந்து ஒழுகின்
வந்திடாது தாழ்வு

இயற்கை வழிபாடு
தமிழனின் சிறப்பாம்
குறிஞ்சியின் அழகன்
குமரனே தலைவனாம்

அகத்திணை ஒழுக்கம்
அன்பைப் பெருக்கியது
புறத்திணை ஒழுக்கம்
வீரத்தை ஊட்டியது

தை முதல் நாளே
தமிழர் திருநாளாம்
இதை அறிந்து நாமே
இனிதே கொண்டாடுவோம்



சோ. ஶ்ரீதரன்
இலங்கை

என்னதான் பதில் சொல்கிறாய்?”

“சிவா வீணாக ஏன் கோபப்படுகிறாய்? நீங்கள் எல்லாம் காலேஜுக்கு ஏன் வருகிறீர்கள்? படிக்கவா, காதலிக்கவா? முதலில் முடியுங்கள். அம்மா, அப்பாவின் கனவை நினைவாக்குங்கள். நேரம் கிடைத்தால் பிறருக்கு உதவி செய்யுங்கள். முடிந்தால் சமூக சேவை செய்யுங்கள். இப்படி ஒரு பெண் பின்னால் சுற்றி உங்கள் நேரத்தையும் காலத்தையும் வீணாக்குகிறீர்களே. உங்களுக்கு என்று வெட்கமாயில்லை” என்று கத்தினாள் மஞ்சுளா.

“பாருடா அன்னை தெரசா வந்திருக்காங்க சமூக சேவை செய்யணுமாம். என்ன மஞ்சு லெக்சர் அடிக்கப் பழகியிருக்கே. உன்னிடம் கேட்டது நாங்கள் எங்களுக்கு அட்வைஸ் இல்லை. அது நிறைய கிடைக்கிறது இந்த நாட்டிலே. எங்கள் மூவரிலே யாரை நீ காதிலிக்கிறேன்னு தெரிஞ்சுக்கத்தான் உன்னிடம் வந்தோம்” என்றான் மனோகர்.

“நான் யாரையும் காதிலிக்கவில்லை என்று சொன்னால் என்ன செய்வீர்கள்?”

“திரும்பவும் நாளையிலிருந்து உன் பின்னால் மூவரும் சுற்ற ஆரம்பிப்போம்?”

“சீ! வெட்கமாயில்லை. ஒரு பெண்ணின் மனதில் இடம் பெறுவது அவ்வளவு ஈஸியில்லேப்பா. சும்மா பேகிபேண்டும், கூலிங்கிளாஸ்ஸும் போட்டுட்டு வந்தால் பெண்கள் மயங்கி விடுவார்கள் என்று இருந்த காலம் மலையேறிப் போச்சு.”

“முதலிலே செயல் வீரர்களாக இருங்கள். நீங்கள் செய்கிற ஒவ்வொரு நல்ல காரியமும் பெண்ணை ஏன் என்னையே கவர்ந்திழுக்கட்டும்.”

“படிப்பிலே முதல் மாணவனாக வந்த பிரகாஷ் பின்னால் எத்தனை பெண்கள் சுற்றுகிறார்கள். பார்த்திருக்கிறீர்களா? ஸ்போர்ட்ஸிலே பத்து கோல்டு மெடல் வாங்கிய கணேசனை எத்தனை மாணவிகள் சுற்றி வருகிறார்கள்?”

“சுற்றுப் புற சூழல் வாரம் ஏற்படுத்தி, வாரத்திற்கு ஒரு கிராமம் என்று தெளிவு படுத்த என்.எஸ்.எஸ். மூலம் கிராமக்கல்வி, கிராமச் சுத்தம், முதியோர் கல்வி என எத்தனையோ சாதனைகள் ஏற்படுத்தும் சந்திரனின் பின்னால் எத்தனை பெண்கள்.

போங்கப்பா. போய் சாதனை வீரர்களாக மாறுங்கள். வெறும் உடையிலும் அழகிலும் மயங்கும் காலம் மலை ஏறி விட்டது. எனக்கு உங்கள் மூவர் மேலும் காதலும் இல்லை. கத்திரிக்காவும் இல்லை.

ஐயோ பாவம் வேலையில்லாமல் கால் கடுக்க நிற்கிறீர்களே என்று தான் இரக்கமும் கோபமும் வருகிறது. போங்கப்பா” என்றவாறு வேகமாக கல்லூரிக்கு நடந்தாள் மஞ்சுளா.

மூவரும் அமைதியாக கல்லூரி வாசலில் அடியெடுத்து வைக்க அந்த மூன்று மாணவர்கள் மனதிலும் சாதனை செய்யும் விதைகள் வேரூன்ற தொடங்கியிருந்தன.

---

**உழும் நிலத்தில்**
**மாட மாளிகைகள்**
**அழியும் நிலையில்**
**உழவனின் வாழ்வு**

**கோ.பவித்ரா, காஞ்சிபுரம்**

# வேறாகா வேர்கள்




**நூல் மதிப்புரை**

பக்கங்கள் 110
பதிப்பு மார்ச் 2023
விலை 650 இலங்கை ரூபாய்

எழுத்தாளர், நண்பர் நஜ்முல் ஹுசேன் எழுதிய 'வேறாகா வேர்கள்' சிறுகதைத் தொகுப்பானது 23 கதைகளுடன் வெளிவந்த ஒரு நூலாகும். இதிலுள்ள கதைகள் ஒவ்வொன்றும் மிக எளிமையான முறையில் எழுதப்பட்டிருப்பதோடல்லாமல் அருமையான படிப்பினைகளையும் தந்து செல்வதைக் காணக் கூடியதாக உள்ளது. ஒரு எழுத்தாளனின் எழுதுகோல் ஒவ்வொரு முறை குனியும் போதும், எழுத்தாளனின் பெருமை தலைநிமிர்கிறது எனச் சொல்வார்கள். சமூக சீர்கேடுகளைக் களைந்து சமூகத்தை செப்பனிடும் பணியில் எழுத்தாளனது வகிபாகம் அளப்பரியது. அப்பணியை செவ்வனே செய்து நமது எழுத்தாளர் நஜ்முல் ஹுசேன் நிமிர்ந்து நிற்கிறார்.

சமூகத்தின் குறைகளைக் களைகையில் தம் வீரியமான எழுத்துக்களால் அதிரடியாக களமிறங்குவது ஒருமுறை. மென்மையாகக் கையாண்டு அன்புவழியில் சீர்திருத்துவது மற்றொரு முறை. அன்பின் சாட்டையால் அகிலத்தை செப்பனிட முயலும் ஒரு துடிப்பான எழுத்தாளரை நான் இந்நூலின் மூலம் இனங் காண்கிறேன்.

இந்நூலில் அடங்கியுள்ள ஒவ்வொரு கதையும், சமூகத்துக்கான ஒரு விழிப்புணர்வை உள்ளடக்கி, மயிற் பீலியால் வருடுவது போல் தனிமனித உணர்வை மென்மையாகத் தட்டி யெழுப்பிச் செல்கின்றன. அதில் மனிதமும் மனித நேய உணர்வுகளும் வழிந்தோடக் காண்கிறேன். ஒவ்வொரு கதையிலும் எளிமை தாண்டவமாடினாலும், அவற்றுள் பொதிந்துள்ள உயரிய கருத்துக்களோ எல்லோரையும் எளிதில் சென்றடையும் எனத் திண்ணமாகக் கூறலாம்.

இதில் முதற்கதையான 'அவனில்லாமல் நானில்லை' சமூக ஒற்றுமைக்கு வலுவான ஒரு அடித்தளமிடும் என்றும் கூறலாம். அதேபோல 'நிலைக்கண்ணாடி' பொறுமையிருந்தால் பூமியையும் வெல்லலாமென பாடம் புகட்ட, 'எனக்குக் கிடைக்கும்' தானத்தின் மகிமை கூறி இஸ்லாம் சொல்லும் 'தானம் கொடுத்தால் பத்து மடங்காக அல்லாஹ் திருப்பிக் கொடுப்பான்' என்ற போதனையை வலியுறுத்திச் செல்கிறது.

இந்த சிறுகதைத் தொகுப்பை மனம் விரும்பி படித்து லயித்தேன். கதைகள் யாவுமே நறுக்குத் தெறித்தாற் போல் கச்சிதமான அளவுகளில் குறுங்கதைகளின் இலக்கணம் சொல்ல, எழுத்தாளர் நஜ்முல் ஹுசேனைப் பாராட்ட வார்த்தைகளின்றித் தவிக்கிறேன். ஏனோ தானோ வென்றில்லாமல் ஒரு எழுத்தாளனின் கடமையுணர்ந்து, மிகப் பக்குவமாக, அதேசமயம் சமூகத்தின் நாடித்துடிப்பறிந்து, அதற்கேற்றாற் போல் கதைகளைப் படைத்ததோடல்லாமல் மனதில் நிறுத்திப் போயிருக்கிறார். காலத்தின் தேவையுணர்ந்து, சமூகத்தை தன் எழுதுகோல் கொண்டு கட்டமைக்க முன்வந்துள்ள இக்கவிஞனை, எழுத்தாளனை மனதார வாழ்த்தி, தமிழ்கூறும் நல்லுலகு சிறக்க இவர் இன்னுமின்னும் இதுபோல் படைப்புகளைத் தர வேண்டுகிறேன்.

தமிழ்நெஞ்சம் அமின்

நூல் தேவைத் தொடர்புகளுக்கு...
+94 22222 22222

# உளி பேசும் மொழி

## II



**நெல்லை க. சோமசுந்தரி**

(கவிஞர், எழுத்தாளர் & தொல்லியல் ஆர்வலர்),

சென்னை, தமிழ்நாடு

மனித மனமானது வாழும் வாழ்வில் ஒரு விடயத்தின் இரகசியத்தை அறிவதில் எப்போதும் ஆர்வம் கொள்ளும். பொது வாகவே, இரகசியம் என்பது என்ன? ஒரு விடயமானது ஒருவருக்கோ அல்லது ஒரு சிலருக்கோ தெரிந்து மற்ற யாவருக்கும் தெரியாமல் இருந்தால் அதனை நாம் இரகசியம் எனக் கொள்ளலாம். ஒரு சில இரகசியங்கள் வெளிவராமலேயே ஒருவரோடு முற்றுப் புள்ளியாக முடிந்து விடுவதும் உண்டு. ஆனால், சிதம்பர ரகசியம் என்பது எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை அறிய வாருங்கள் தொடர்ந்து பயணிக்கலாம்.

'சிதம்பர ரகசியம்' என்பது அனைவ ராலும் அறிந்து உள் உணரக்கூடிய ஒன்றே ஆகும். ஆனால், அதற்கான முனைப்பு ஒருவரிடத்தில் இருந்தால் அதனை அறிய இயலும். அனைவராலும் அவரவர் சொந்த முயற்சியினாலேயே ஒரு விடயத்தை அறிந்து கொள்ள இயலும் எனில் அதனை நாம் எவ்வாறு இரகசியம் என்று கூற முடியும் என்ற கேள்வி தற்போது நம்மிடம் எழாமல் இல்லை.

உண்மையில் சிதம்பர இரகசியம் என்பது, ஒவ்வொரு மனித ஜீவராசி களுக்கும் 'மாயை' எனும் ஒரு திரையானது மறைக்கப்பட்டுள்ளது. அந்த மாயத்திரையை விலக்கினால் ஒவ்வொருவரும் தன்னை உண்மையில் யாரென்று உணர முடியும். யார் ஒருவரால் தன்னிலையை உணரமுடிகிறதோ, அவர் களால் ஆடல் வல்லானின் ஆனந்த கூத்தின் நடனத்தைக் உள்வாங்கி உணர இயலும். இதனை உணர்த்தும் வகையிலேயே நடராசரின் ஆலயத்தில் திரை விலக்கப்பட்டு சிற்றம்பலத்தினை ஆகாய வடிவில் உணர்த்தப்படுகிறது. ஆகாயம் என்பது எத்திசையிலும் இந்த பால்வெளியில் எல்லையற்ற நிலையில் விரிந்து கடந்து சென்று கொண்டிருக்கிறது. அதற்கு எல்லையற்றது என்று பொருளா கிறது.

அவ்வழியிலேயே, ஆகாய வடிவில் விளங்கும் நடராஜரும் எல்லையற்றவர் என்ற பொருளை உணர்த்துவதாக அறியப்படுகிறது. சிதம்பர ரகசியம் போலவே இவ்வாலயம் அமையப் பெற்றுள்ள இடமானது ஒரு அதிசயத்தைக் கொண்டுள்ளது. அதனை அறிந்து கொள்ள ஆவல் தூண்டுகிறதல்லவா? அதனை முழுமையாக அறிந்து கொள்ள நாம் சற்றே நமது காலத்தினை முன்னோக்கிச் செலுத்தி நமது பள்ளி பருவத்தினில் பயின்ற நமது பூமியின் அட்ச மற்றும் தீர்க்க ரேகைகளைப் பற்றி இங்கு நினைவு கூர்வோம்.

**ஒற்றைக் கால் மண்டபம்**





புவிப் பரப்பின் மீது கிழக்கு மேற்காகச் செல்லும் கற்பனைக் கோடுகளுக்கு அட்ச ரேகைகள் என்று பெயர். அட்ச ரேகையானது கோணங்களில் குறிக்கப் படுகின்றன. அட்ச ரேகைகளைச் செங்கோணத்தில் வெட்டிக்கொண்டு இரு துருவங்களையும் இணைத்தபடி செல்வதாய் உணரப்படும் கற்பனைக் கோடுகளுக்குத் தீர்க்க ரேகைகள் என்று பெயர். அட்ச ரேகையானது கிழக்கிலிருந்து மேற்காகவும், தீர்க்க ரேகைகள் வடக்கிலிருந்து தெற்காகவும் வரையப்பட்டிருக்கும்.

சிதம்பர நடராசர் ஆலயமானது 79.6954லி (79.6954 "degrees") தீர்க்க ரேகையில் அமையப்பெற்றுள்ளது. அவ் வகையில், மேலும் ஏழு சிவாலயங்கள் ஏறக்குறைய அதே தீர்க்க ரேகையில் அமையப்பெற்றுள்ளது. அதனைப்பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்ந்து உளியின் மொழியினைக் கேளுங்கள். அந்த ஏழு சிவாலயங்களானது கேதார்நாத் (79.0669லி), காலேஷ்வரம் முக்தேஸ்வரா - சுவாமி கோயில் (79.9067லி), காளகஸ்தி (79.7037லி), காஞ்சி ஏகாம்பரேஸ்வரர் (79.7036லி), திருவண்ணாமலை அருணாச லேஸ்வர் (79.0747லி), திருவானைக் கோவில் ஜம்புகேஸ்வரர் (79.3174லி) மற்றும் இராமேஸ்வரம் ராமநாத சுவாமி கோவில் (79.9067லி) ஆகும்

இந்த அற்புதமானது, பஞ்ச பூத தளங்கள் அனைத்தும் ஏறக்குறைய ஒரே நேர்க்கோட்டில் அமைந்திருப்பது தற்செயலாக நடந்த ஒன்றாக இருக்க வாய்ப்பில்லை என்பதனை நம்மால் அறிய முடிகிறது. மேலும், இவ்வாலயங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு கால கட்டங்களில் வெவ்வேறு மனிதர்களால் கட்டப்பட்டுள்ளது. அப்படியிருப்பின், இவ்வாலயங்கள் இவ்வாறு அமைந்ததற்கு

ஏதோ ஒரு சக்தியானது மூலமாக அமைந்திருக்க வேண்டும் என்பதனை நம்மால் உற்று நோக்க முடிகிறதல்லவா?

ஆடல் அரசனின் ஆலயம் முழுவதும் உள்ள கலைநயத்தின் சிற்பங்கள் மற்றும் நடனச் சிற்பங்கள் பற்றி உளியின் வாயிலாக நாம் அறிந்தோம். இதற்கு மேலும் மெருகூட்டும் வகையில் இயற்கை மூலிகைகளின் மூலம் பிரகாரங்களில் வரையப்பட்ட பழங்கால ஓவியங்கள் நம்மை வியக்க வைக்கின்றன. இந்த ஓவியங்கள் சிவகாமசுந்தரி அம்மன் ஆலயத்தின் உட்பிரகாரத்தில் உட்பக்கக்கூரையான விதானத்தில் வரையப்பட்டுள்ளது. இவ்வோவியங்களானது நூற்றாண்டுகள் கடந்தும் அதன் தன்மை மாறாமல் இன்றளவும் அழகுடன் மிளிர்கிறது.


சிற்றம்பல ஆலயத்தில் உள்ள கட்டிடங்களோ, கலை நயமிக்க ஓவியங்களோ, சிற்பங்களோ இன்றைய காலகட்டத்தில், நவீன அறிவியலே வியக்கத்தக்கும் வகை



**இயற்கை மூலிகையிலான பழங்கால ஓவியங்கள்**

யில் படைக்கப்பட்டுள்ளன. மேலும், இவ்வாலயத்தின் கட்டிடக்கலைக்கு சிறப்பு சேர்க்கும் வகையில், திருமூலர் விநாயகர் சந்நிதியானது, ஒற்றைக்கால் தூணின் மூலம் அமையப்பெற்றுள்ளது. இது ஒற்றைக் கால் மண்டபம் என அழைக்கப்படுகிறது. ஒற்றைக்கால் மண்டபமானது, கருவறையை ஒட்டி முன்னதாக சுவரும் தளமும் எழுப்பி ஒற்றைத் தூணை ஒரு புறத்தில் நிறுவி அமைப்பதாகும். அந்த ஒற்றைத் தூணே அமைக்கப்பட்டிருக்கும் மண்டபத்தின் மறுபக்கத்திற்கான தாங்கு சக்தியாக விளங்குகிறது. இவ்வகையில் அமைக்கப்பட்ட மண்டபமானது அக்காலக் கட்டிடக்கலையின் நுட்பத்தை வெளிப்படுத்துவதாக அமைத்துள்ளது.

**7 சிவாலயங்களின் கோவில் - தீர்க்க ரேகை**




இவ்வாலயமானது பஞ்ச பூத தளங்களில் மட்டுமல்லாது அனைத்து சிவாலயங்களுக்கும் முதன்மையாக விளங்குகிறது. இவ்வாலயத்தில் மட்டுமே மூலவரான நடராஜர், நடனமாடும் நிலையிலிருந்து பக்தர்களுக்கு காட்சியளிக்கிறார். எத்திசையிலும் நீண்டு, அகண்ட எல்லையற்ற தூய்மையான ஆகாயத்தினை உருவகித்து, எழுப்பப்பட்ட ஆடல் வல்லானின் ஆலயத்தில் அமையப்பெற்ற, நூற்றாண்டுகள் பல கடந்த, ஆனால் இன்றும் அதன் கலை பொக்கிஷங்களை பல



தலைமுறைகள் கடந்தும், அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு போற்றப்படுகிறது என்பதனை, உளியின் மொழி மூலம் ஆறு திங்களாக நாம் அறிந்து கொண்டோம். அவ்வகையில் கலை மற்றும் கலைச் சிற்பங்களுக்கு நம் முன்னோர்கள் அளித்த முக்கியத்துவம் மற்றும் சிறப்பினையும் நம்மால் உணரமுடியும். அவ்வழியே, பஞ்ச பூத தளங்களில், ஆகாயத்தினை அடுத்து முதன்மையான பல சிறப்புகள் பொருந்திய ஒரு ஆலயத்தினைப் பற்றி அறிந்து கொள்ள தொடர்ந்து உளியின் மொழியினை கேட்போம்.

- தொடர்ந்து உளி பேசும்



## சீரழியும் மாணவர்கள் சீர்திருத்த யார் பொறுப்பு

சின்னஞ் சிறுமலர்கள் சீரழியும் நிலைகாணீர்!
தன்னிலை மறந்தவை, தடுமாறித் தவிக்குதே!

போதையிலே ஊறிப் புதைந்திடும் பொன்மணிகள்!
வாதையைத் தேடிடும் வழிகளிற் தொலையுதே!

கணங்களைத் தொடுதிரையில் கரைத்திடும் கண்மணிகள்
பிணங்கிப் பிறருடன் பிரச்சினைக்குள் புகுந்திடுதே !

கூட்டமாகச் சேர்ந்தே குதூகலித்துக் குதித்திடுதே!
சாட்டையடிச் சாடையிலே சகலரையும் சாய்த்திடுதே!

கல்வியிலே தோற்றாலும் கலங்காமல்,
இல்லமதில் இருப்பவரை இம்சையால் வதைக்குதே!

தந்தையை வெறுத்துத் தாய்மனத்தைக் கடிக்குதே!
நிந்தனைகள் தவிர்த்தே நேசங்கள் வளர்ப்போமே!

அன்னையாள் அன்பினால் அறத்தைக் காட்டினால்,
தன்னிலை தளர்த்திடத் தங்கங்கள் முயலுமோ!

பெற்றோரும் பெரியோரும் பெருந்தகை ஆசானும்,
ஒற்றுமை உணர்வுடன் உறவுகளைத் திருத்துவோமே!

- கிண்ணியாசபீனா

---

மழை நீர் தேங்கிய
சிறிய கடல்
அதிலே மிதந்தன
காகித கப்பல்கள்

கோ.பவித்ரா, காஞ்சிபுரம்

## அவள் எங்கே இருக்கிறாள்.?

கால்களுக்கும் கைகளுக்கும்,
மனசுக்குமான,
கௌரவ விலங்குகள்
பிணைக்கப்பட்டவளாய்,
கடந்து கொண்டிருக்கிறேன்,
காலமென்னும் பெருங்கடலை.

சமூகத்திற்காய் என்,
சுயங்களை அடகு வைத்து,
இரத்த உறவுகளுக்காய் என்,
ஊதியங்களை இழந்து,
எல்லோருக்கும் நல்லவளாய் வாழ,
எத்தனை எதிர் நீச்சல்களில்,
மூழ்கி மூச்சுத் திணறுகிறேன்.

அத்தனை தளைகளையும்
அறுத்தெறிந்து,
வெற்றித் திருமகளாய்,
சமூகப் பொருத்தப்பாடுடையவளாய்,
ஒருத்தி இவ்வுலகில்,
எங்கேனும் வசிக்கலாம்.

என்னால் முடியாதவற்றை,
சாதிக்கும் வல்லமையுடையவளாய்,
துன்பங்களத் தூசென,
துடைத்தபடி கடப்பவளாய்,
நியாயங்களை நிலை நாட்டலில்,
எவருக்கும் அஞ்சாதவளாய்,
அவசியமானபோது,
அடித்து நொறுக்கியேனும்,
தன்னைக் காப்பவளாய்…

காற்றைவிடவும் கடுகிசெயற்படும்,
அந்த பேறுடையாள், இவ்வுலகில்
எங்கே இருக்கிறாள்?
இல்லை விதிவிலக்கில்லா,
துயர் வாழ்வே
பெண்களுக்கு, விதிக்கப்பட்டுள்ளதோ?

சம்மாந்துறை மஷ்றா



## கவிதை எழுதுங்கள்!!

**பாவலர் கருமலைத்தமிழாழன்**

எழுதுங்கள் எழுதுங்கள் கவிதை யொன்றை
எவருக்கோ என்றோநல் பயனை நல்கும்
அழுகின்ற ஒருவர்தம் கண்து டைத்தே
அக்கவிதை ஆதரவாய் அணைக்க லாமே !
விழுந்திட்ட ஒருவர்தம் மனத்தைத் தேற்றி
வீறுகொண்டு எழுவதற்குத் தூண்ட லாமே
பழுத்தயிலை போல்துயரில் விழுந்த வர்க்குப்
பசுந்துளிராய் நம்பிக்கை ஊட்ட லாமே !

தோல்வியிலே துவண்டவனின் தோளைத் தட்டித்
தொடர்வெற்றி வருமென்று சொல்ல லாமே
கால்நடுங்கி அச்சத்தில் அமர்ந்தோர் நெஞ்சுள்
கால்தூக்கும் துணிவுதனை ஏற்ற லாமே !
கோல்பிடித்து நடக்கின்ற முதிய வர்க்குக்
கோல்போல உறுதுணையாய் அமைய லாமே
நாள்கொல்லும் தனிமையிலே தவிப்ப வர்க்கு
நறவுபோல பேச்சுதுணை யாக லாமே !

அன்பில்லார் நெஞ்சுள்ளும் மனித நேய
அற்புதத்தை விளைக்குவிதை யாக லாமே
கன்னல்சொல் விடுத்துவேம்பாய்ப் பேசு வோரைக்
கனியவைக்கும் மந்திரச்சொல் லாக லாமே !
அன்புகாட்டி மறுத்திட்ட காதல் நோயின்
அன்பர்க்கு மருந்தாக அமைய லாமே
நன்றாக எழுதுங்கள் கவிதை யொன்றை
நாட்டோர்க்கு நலம்பயக்கும் கவிதை யொன்றை!



# இளம் வயதில் பல துறைகளில் தடம்பதித்த நுஷைபா நஷீர்

இலங்கை கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் நிந்தவூரை பிறப்பிடமாக கொண்ட அலியார் நஷீர் மற்றும் பாத்திமா பஷீனா தம்பதியினரின் மகளான நுஷைபா நஷீர் உயர்தரம்வரையிலான தனது கல்வியை அல் மஷ்ஹர் தேசிய பாடசாலையில் கற்றார். பாடசாலை காலத்தில் முதலுதவி, சுற்றாடல் கழகம், இசை வாத்திய குழு, சுகாதார கழகம், ஆகியவற்றில் இணைந்து செயற்பட்டதுடன் மாணவர் பாராளு மன்றம் தேர்தலில் அதிகூடிய வாக்குகளை பெற்று பாடசாலையின் சுற்றாடல் அமைச்சராக தெரிவு செய்யப் பட்டிருந்தார். மேலும் சுற்றாடல் கழகத்தில் பல பதக்கங்களை பெற்றுக் கொண்டுள்ளார்.

தற்போது தேசிய சமுக அபிவிருத்தி நிறுவனத்தில் முதலாம் வருட மாணவியாக கல்வி பயின்று கொண்டிருக்கிறார். இதைவிட Diploma in Counselling Psychology, Diploma in




கடந்த வருடம் குரோசியா நாட்டுத் தூதுவராக நியமிக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட புகைப்படம்

English, Diploma in Sinhala, Diploma in Human Resource Management, Pre Metrial Counselling, Child Psychology போன்ற கற்கை நெறிகளை பூர்த்தி செய்துள்ளதோடு மார்க்கக் கல்வியினையும் பூர்த்தி செய்துள்ளார். தற்போது சட்டத்துறையில் UK University இல் படித்து வருகிறார். சிறந்த கவிதை எழுதுவதனால் கவிச்சிகரம் என்ற புனைப்பெயர் இவருக்கு சூட்டப்பட்டுள்ளது.

இவர் Edu free academy யில் நிர்வாக உறுப்பினராக கல்விக்கான செயற்திட்டத்தில் பங்கு கொண்டு பாடசாலை மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு, வினாத்தாள் விநியோக பணிகளில் ஈடுபட்டுள்ளார். இவர் சமூகத்தில் ஒரு முன்மாதிரியான சமுக ஆர்வலராகவும் பயணித்துக்





டிப்ளோமா கற்கையை பூர்த்தி செய்து பட்டமளிப்பு விழாவில்...

கொண்டிருக்கின்றார். பெண்கள் சார்ந்த பிரச்சினைகளை குறும்படம் மூலம் வெளிக் கொண்டு வந்துள்ளார் என்பது சிறப்பான விடயமாகும்.

பல அமைப்புக்களினுடைய உறுப்பினராக காணப்படும் இவர் நிகழ்வுகளின் வளவாளராகவும் உளவியல் ஆலோசகராகவும் செயற்படுகின்றார்.

இவரது திறமைகள் ஒரு குறித்த வட்டத்தில் முடங்கிப் போகாமல் photography துறையிலும் art மற்றும் craft painting இலும் வெளிக் காட்டுப்படுகின்றன. மேலும் இவரது பகுதிநேர செயற்பாடு தோட்டம் செய்தல் மற்றும் இசைக்கருவிகளை வாசிப்பதாகும்.

அண்மையில் International achivers foundation இனால் women achivers award இற்கு தெரிவு

ஜனாதிபதி பதக்கத்தின் போது ஜனாதிபதி பதக்கதாரிகள் ஜனாதிபதியுடன் எடுத்த புகைப்படம்






சுற்றாடல் ஜனாதிபதி பதக்கம் பெற்றுக் கொண்ட போது...

செய்யப்பட்டுள்ளார். LACSDO media இன் திறமைக்கான விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்தியாவினுடைய Production for legal & human rights foundation இனால் women's day இனை முன்னிட்டு Sprit of humanity award கிடைக்கப் பெற்றது என்பது முக்கிய அம்சமாகும். pen club national conference இல் விருது கிடைக்கப் பெற்றது. eastern youths organization இன் 4 ஆவது ஆண்டுவிழாவினை முன்னிட்டு விருது கிடைக்கப் பெற்றது. இவர் சவால்களை வெற்றிக்கான படியாகவே கருதுகின்றார். இவரை சுற்றி பல விமர்சனங்களும் தவறான கதைகளும் வந்த போதிலும் இவர் நம்பிக்கையினை இழக்கவில்லை. இவருக்கு மனதில் இருந்த விடயம் நான் இன்னும் சாதித்து சிகரம் தொட வேண்டுமென்பதே இவரது அவாவாக இருந்தது. இதற்கு இவரின் தாய் தந்தையின் ஒத்துழைப்பும் இவரது ஊக்கமும் முயற்சியுமே இவர் வெற்றி பெற காரணமாக இருந்தது.

இவரின் எதிர்கால இலட்சியம் ஒரு சட்டத்தரணியாக வர வேண்டும் என்பதேயாகும். சமூகத்தில் ஒரு முன் மாதிரியான சமூக ஆர்வலராகவும் வர வேண்டும் என்பதோடு அரசியலிலும் நுழைந்து கொள்ளும் ஆர்வத்தோடும் பயணிக்கும் இளம் சாதனை பெண்ணுக்கு எமது வாழ்த்துகள்.

# உயிர்ப்பு

**கவிமுகில் சுரேஷ்**
தருமபுரி

இன்று ஒவ்வொருவர் கையிலும் அலைபேசி இருக்கிறது டிஜிட்டல் மீடியாவின் வளர்ச்சியினால் புத்தகங்கள் வாங்கி படிக்கின்ற காலம் கரையேறி கொண்டிருக்கிறது.

இப்பொழுதெல்லாம் எழுதின புத்த கங்களை பல்லாயிரம் பிரதிகள் பிரிண்ட் போட்டு விற்பது ஆகாத காரியமாய் இருக்கிறது.

ஏதோ மாவட்டந்தோறும் புத்தகத் திருவிழா என்று ஒன்றை வைத்து அதன் மூலம் பல கழிவுகள் கொடுக்கப்பட்டு புத்தகங்கள் விற்கப்படும் முறை இருப்ப தால் ஓரளவுக்கு புத்தகங்கள் மக்கள் வாங்குகிறார்கள்.

அதுவும் வாங்கின புத்தகங்களை கொண்டு போய் புத்தக அலமாரியில் வைக்கிறார்களா அல்லது வீட்டில் ஏதாவது ஒரு மூலையில் வீசப்படுகிறதா அல்லது உண்மையாகவே படிக்கிறார்களா என பல கேள்விக்குறிகள் எழும்புகிறது.

ஒரு எழுத்தாளர் தொடர்ந்து எழுத வேண்டுமென்றால் அவருடைய புத்தகங்கள் வாங்கப்பட வேண்டும் அவை வாசிக்கப்பட வேண்டும் அவை குறித்து அந்த விமர்சனங்கள் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் ஆகவே ஒரு எழுத்தாளனின் வளர்ச்சியில் வாசகர்களுடைய பங்கு மிகவும் அவசியம்.

பத்திரிகை துறையில் இப்பொழு தெல்லாம் எழுத்தை நம்பி முழு ஜீவியம் நடத்துவது எழுத்தாளனுக்கு இயலாத காரியமாய் இருக்கிறது.

இப்பொழுது நிறைய பிரபலமான ஜனரஞ்சக பத்திரிகைகள் எல்லாம் மூடப்பட்டு வருவது நம் கண்கூடாக பார்க்கிறோம்.

டிஜிட்டல் மூலமாய் மொபைலில் வருகிற மின்னிதழ்களை எல்லோரும் ஓசியில் படித்து விடுகிறார்கள்.

என்ன செய்வது இனி தொடர்ந்து எழுதலாமா வேண்டாமா என கோபி யோசித்துக் கொண்டிருந்தான்.

இந்த கோபி ஒரு காலத்திலே எல்லா வார பத்திரிகைகளிலும் சிறுகதைகள் எழுதுவதிலும் தொடர்கதை எழுதுவதிலும் மாத நாவல்கள் எழுதுவதிலும் சிறந்து விளங்கி வந்தவன்.

அப்பொழுதெல்லாம் அலைபேசி சாதனமும் டிவியும் எங்கும் வராத ஒரு காலம்.

நல்ல வகையில் பொழுது போக்குவதற் கும் நல்ல காரியங்களை கற்றுக் கொள் வதற்கும் புத்தங்கள் அன்றைக்கு வாசிக்கப்பட்டது.

இன்று டிவியில் எப்படி தொடர் கதைகளை தொடர்ந்து பார்க்கிறார்களோ அப்படி அந்நாட்களில் பாரபத்திரிகைகளில் வரும் தொடர்கதைகளை தொடர்ந்து வாசிக்கும் வாசகர்களின் எண்ணிக்கை அதிகமாய் இருந்தது.

இன்றோ தொடர் கதைகளை வாசிக்கின்ற பழக்கம் நின்று போனது டிவியில் தொடர்ந்து தொடர்களை பார்க்கும் பழக்கம் மக்களுக்கு உண்டாயிற்று.

பல எழுத்தாளர்கள் இந்த பத்திரிகை துறையில் தொடர்ந்து எழுதி வாழ இயலாது என சினிமா துறைக்குள் நுழைந்து விட்டார்கள்.

அங்கே பேரும் புகழும் பணமும் கிடைக்கிறது ஆகவே இலக்கிய தரத்தில் எழுதியவர்கள் எல்லாம் அங்கே டைரக்டர் என்ன சொல்லுகிறாரோ அந்த படம் எடுக்கும் தயாரிப்பாளர் என்ன சொல்கிறாரோ அதற்கு ஏற்றபடி தன் எழுத்துக்களை கூட்டி குறைத்துக் கொள்கிற அப்படிப்பட்ட தான ஒரு நிலைக்குள் வந்து விட்டார்கள்.

திரைப்படத்திற்குள் நுழைந்துவிட்ட பத்திரிகையினுடைய எழுத்தாளர்கள் எழுத்தோடு இல்லாமல் அவர்கள் சில காட்சிகளில் வாய்ப்பு கிடைக்கப்பெற்று நடிக்கவும் செய்கிறார்கள் அதனால் அவர்கள் எழுத்தாளர்கள் என இன்னும் மக்கள் மனதில் நெருக்கமாய் பதிந்து விடுகிறார்கள்.

என்னதான் எழுத்து திறமைகள் எவ்வளவு இருந்தாலும் சினிமாவுக்குள் தலை காட்டா விட்டால் அந்த எழுத்தாளன் பல லட்சங்களுக்கு அறிமுகம் இல்லாமலே போய்விடுகிறான் அதனால் எழுத்தாளன் இலக்கியம் சார்ந்த எழுத்துகள் எனவும் ஜனரஞ்சகம் சார்ந்த எழுத்து என பிரித்து வைத்து தன் வாழ்வை நடத்த வேண்டிய சூழலுக்குள்ளாய் அவன் தள்ளப்படுகிறான்.

எழுத்து தான் என் மூச்சு என பத்திரிக்கைக்குள்ளே இருக்கின்ற எழுத்தாளர்கள் மூச்சு என சொல்லிய எழுத்தாளர்கள் எல்லாம் இன்று மூச்சு விட சிரமப்பட்டு வருகிறார்கள்.

எழுத்தாளனுக்கு விருதுகள் கொடுத்து புகழாரம் செய்கின்ற பல இலக்கிய சங்கங்களும் எல்லாம் அவர்களின் வாழ்வியலுக்கு தேவையான பணத்தை கொடுக்க மறுக்கிறது கொடுத்தாலும் போதாமையாய் இருக்கிறது.

கோபியாகிய நான் சொல்கின்ற இவையெல்லாம் உண்மை என்பது தான் சொல்லாமலே உங்களுக்கு தெரியும்.

இப்பொழுதெல்லாம் கோபியாகிய நான் ஏன் எழுதுகிறேன் யாருக்காக எழுதுகிறேன் இனி எழுதலாமா வேண்டாமா என பல குழப்பங்களுக்குள் பயணிக்க வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டு இருக்கிறேன்.

இருந்தாலும் கடைசியாக முடிவாக எனக்குள் நானே பேசிக் கொண்டேன் எழுத்தை நம்பி பிழைக்க முடியாது அதே நேரத்தில் பிழைக்கின்ற எனக்கு எழுத்து இல்லாமல் இருக்க இயலாது.

உணவுக்கு உடைக்கு இந்த உலகத்தில் வாழ்வதற்கு ஏதோ ஒரு வேலை ஏதோ ஒரு இருப்பிடம் இருந்து விட்டுப் போகிறேன்.

ஏதோ எனக்குத் தெரிந்ததை இச்சமூகத்திற்கு உரியதை எழுதிவிட்டு கடந்து செல்லவே வாஞ்சிக்கிறது என் ஆத்மா .

# கண்டிப்பும் கருணையும்..!

அது ஒரு கனாக்காலம் ஆசிரியர்களுக்கு
பள்ளி தொடங்கி கல்லூரி வரைக்கும்
சித்திரப் பாவையாய் பாடம் கேட்டனர்.
ஆசிரியர் சொல் வேத வாக்கு அங்கே
பாடமும் கற்றனர் பண்பும் கற்றனர்
நன்னெறி வகுப்புகள் இருந்த காலமது.

உலகம் நவீனம் ஆனதாலே
தனிக்குடும்ப வாழ்க்கை வந்தது
பணம் சம்பாதிக்க ஓடினர் பெற்றோர்
ஆற்றி தேற்ற தாத்தா பாட்டி இல்லை
மதிப்பெண்ணை நோக்கிய ஓட்டத்தில்
ஆசிரியரும் அறிய மறந்தார் மாணவர் மனதை.

பெற்றோரோடு ஆசிரியரிடமும் இருந்தது
கண்டிப்பும் கருணையும் சம அளவில்
சிறுகுடும்ப நெறி வந்த பின்னே
கறிவேப்பிலை கொத்தாய் ஓரிரு பிள்ளை
கண்டிக்கத் தயங்கிய பெற்றோரும்
ஆசிரியர் தண்டிப்பதையும் விரும்பவில்லை.

நானே ராஜா என்றெண்ணிய குழந்தை
சுருட்டிய வாலை அவிழ்த்து விட்டது
ஆசிரியரைக்கூட அடிக்கத் துணிந்தது
வகுப்பறை தொடங்கி பொதுவிடம் வரைக்கும்
ஆசிரியர் கைப் பிரம்பின் வேலையை
காவலர் கை பிரம்பு செய்தது.

பிள்ளைக்குத் தண்டனை அளிக்க அல்ல
அல்லவை செய்யாமல் தடுப்பதற்கே
பெற்றோரும் ஆசிரியரும் ஒன்றாய் பயணித்து
கண்டிப்போடு கருணையையும் காட்டுவோம்
பிள்ளை வளர்வான் நாடு போற்ற
அவன் வளர்ச்சியால் மகிழ்ச்சி நமக்கும் உண்டு.

**- ச.கிறிஸ்து ஞான வள்ளுவன்,**
வேம்பார்.

எழுத்து எனக்கு ஒரு அடையாளத்தை கொடுக்கிறது அந்த அடையாளம் இந்த சமூகத்திற்கு பயனுள்ளவன் என மற்றவர்கள் சொல்லும்படி சாட்சியை ஏற்படுத்துகிறது.

எது எப்படியோ டிஜிட்டல் உலகமோ அல்லது வேறு உலகம் வந்தாலும் சரி என்னால் நிறுத்த இயலாது.

எழுத்து என் நண்பன் என் ஆதங்கத்தை என் துயரத்தை என் கவலைகளை என் இன்பத்தை எல்லாவற்றையும் அதன் மூலம் வெளிப்படுத்துகையில் என் மனம் லேசாகிறது சமாதானம் ஆகிறது.

ஒருவேளை என் எழுத்தை வாசிக்கின்ற வாசக நெஞ்சங்களில் கூட ஏதோ ஒரு வகையில் இது ஒரு ஊக்க மருந்தாக செயல்படும் எனும் நம்பிக்கையிலே நான் என்னை ஒரு எழுத்து வைத்தியன் என சொல்லிக் கொள்வதில் அகமகிழ்கிறேன்.

யார் படிக்கிறார்களோ படிப்பதில்லையோ யார் என்னை கண்டு கொள்கிறார்களோ கண்டுகொள்வதில்லையோ அதையெல்லாம் நான் நோக்காமல் நான் பாட்டுக்கு எழுதிக் கொண்டே இருப்பேன்

எழுத்து என் மூச்சு என் உயிர் அடங்கி இந்த பூமியில் புதைக்கப்பட்டு நான் மண்ணோடு மண் ஆனாலும் என் எழுத்தில் ஜீவன் இருக்கும்.

என எழுதி முடித்திருந்த கோபி மாரடைப்பால் இறந்து போயிருந்தான்

அவன் எழுதின எழுத்து என் மூச்சு எனும் அந்த சிறுகதையின் தாட்கள் மேசையில் இன்னும் உயிர்ப்போடு காற்றில் படபடத்துக் கொண்டிருந்தது.

# அப்பேன் ஆத்தா

படிச்சி பட்டம் வாங்கி
பதவி ஏக்க
பட்டணம் வந்தது முதல்
மறந்து போச்சி
பட்டி தொட்டி.

பத்துக்குபத்து அறையும்
பஞ்சுமெத்தையும்
பாகம் பிரிச்ச கழிப்பறையும்
பக்கெட்டு குளியலும்
பார்த்துக் கொள்ளவொரு
சன்னலுமாக
பட்டணத்து வாழ்க்க.

காத்திகை மாவளி சுத்த
கத்துக் கொண்டதில்
ஆணங்கா காயரைச்சு
அம்மியெல்லாம் கரியாக்கி
ஆத்தாகிட்ட வாங்குன முதலடியும்.

பருவமழை நின்னு
வெயிலடிச்ச காலையில
காளான் பறிக்க போகலைன்னு
அப்பேன் கிட்ட
வாங்குன முதலடியும்.

அதிகாலை கோணியெடுத்து
பனம்பழும் பெறக்கி வந்து
பௌர்ணமி நிலா கூடுகையில்
சொக்கப்பனை கொளுத்தியதில்
அவித்து தின்னதும்;
தாத்தா பொம்மை செஞ்சதும்.
குப்பையில ஊணிவச்சு
பொங்கலுக்கு கெழங்கெடுத்து
ஆத்துப் பாலத்து சொவத்துல
அம்புட்டு நேரம் பேசியதும்.
அத்தனையும் மறந்து போகும்
பட்டணத்து வாழ்க்க.

செகண்டு சிப்டு முடிச்சிட்டு
மேசன் வருகையில
நியான் வெளக்கு மினுப்புல
பிச்சை கேட்கும் மனுசரை
பார்த்து பதைக்குது.
மக்கான்நா மொத வேலையா
பணம் அனுப்பவேணும்
அப்பேன் ஆத்தாளுக்க.

எஸ்.மைக்கேல் ஜீவநேசன்
தேனி.

---

## தமிழ்நெஞ்சம்

## இதழில் எழுதுபவர்கள் கவனத்திற்கு...

பிரதிமாதமும் மாதத்தின் முதல் வாரத்தில் இதழ் வெளிவரும். அதற்கேற்றார் போல 20 தேதிக்கு முன்பாக ஆக்கங்களை அனுப்புதல் நல்லது. அதற்குமேல் வரும் ஆக்கங்கள் அடுத்த இதழில் சேர்க்கப்படும். முந்திக்கொள்வது நல்லதல்லவா?

தவிர, ஆக்கங்களை எழுதிவிட்டு அவசர, அவசரமாக ஆக்கத்திற்கான தலைப்பு, மற்றும் எழுதியவர் பெயர்கூட எழுதாமல் அனுப்பிவிடுகிறீர்கள். அப்படி யானவைகள் நிச்சயமாக இதழில் இடம் பெறச்செய்ய முடியாது.

இயன்றவரை மின்னஞ்சலில் அனுப்பிவைக்கும்படி தயவாய்க் கேட்டுக்கொள்கிறோம். முகநூல் உள்பெட்டி, வாட்ஸ் அப் போன்ற தொடர்பில் ஆக்கங்களை அனுப்புவதைத் தவிர்க்கவும்.

மின்னஞ்சல் : editor@tamilnenjam.com

# வெண்பா போட்டி (பயணம்) – 25

## காலம் 01 - 12 சனவரி 2024

## தலைப்பு - இன்று முதல் நான்

01

பொய்யை விடுத்தரிச் சந்திரன் போலினி
மெய்யே உரைத்திட ஏற்பேனே - அய்யோ
மறுநாளே நான்தவறிப் பொய்யுரைப்பேன் என்செய்வேன்
மறுபடியும்  ஏற்பேன் மனம்.

மலர்க்கணைமன்னன், சென்னை.

02

தினமொரு பாடல் எழுதிட வேண்டும்
மனதிலே சங்கற்பம் கொண்டேன் - இனியபுத்
தாண்டில் எடுக்கும் முடிவில் தவறாது
காண்பேன்  கவியிவன் கவின் .

மு. மதனகோபால், சென்னை

03

திருக்குறள் என்றால் எனக்கும் பிடிக்கும்
ஒருநாள் ஒருகுறள் கற்கத் – திருநாள்
வருட முதல்நாள் முயல்வேன் பலநாள்
வரையிலும் நிற்பேன் இனி.

மன்மதன், ஒசூர் 635109

04

அன்று நடந்ததை அன்றே சுவடியில்
என்றும் எழுதவே ஏங்குவேன் - இன்றுவரை
நாட்குறிப்பு என்னுள்ளம் போலவே நல்லவெள்ளை
ஆட்கொள்ள வேண்டும் இனி.

பக்ருதீன் இபூ ஹம்துன்

05

இன்று முதல்நான் இதம்தரும் நூல்களை
நன்கு படித்து நலமடைவேன்!-என்றும்
தொடர்ந்து படிப்பதனால் ஏற்ற மடைவேன்
இடரைக் களைவேன் இனி.

மாலதி திரு

06

இன்றுமுதல் மாறுவதாய் எப்போதும் சொல்லுவதால்
இன்றுமுதல்' என்றாலே ஏசுகிறார் – என்னசெய்ய?!
இன்றுமுதல்' என்றசொல்லை இங்குள்ளோர் முன்னாலே
இன்றுமுதல் சொல்லேன் இனி!

செ. இராசா

07

உள்ளிய வேதும் உருப்படி யாகவில்லை
தள்ளி விலக்குகிறேன் தானடங்கி - உள்ளமே
ஏது முரைக்காதே என்னுறுதி யென்றுநீ
தீது வரிந்துரைத்தல் தேறு...!

விசு. இம்மானுவேல், பெங்களூரு

08

எனையாளும் தெய்வமதை நாளுமெண்ணி என்றன்
வினையாளச் சொல்வேன் விலகா(த்) - தினமும்
கவிமாலை சூடிக் கடுஞ்சொல் மறந்து
புவியாள்வேன் நன்கு பொலிந்து!

சுரேஜமீ

09

என்றென்றும் யாப்பினையும் எல்லோர்க்கும் கற்பித்தல்
தன்னார்வத் தொண்டென்று தாரணியில் - இன்புடனே
என்னுயிரும் போம்வரை எங்கும் இணையவழி
முன்னிறுத்திச் செய்வேன் முனைந்து .

சரஸ்வதி பாஸ்கரன்

10

என்றேனும் யாரேனும் ஏதேனும் தீமைசெயின்
அன்றே மறப்பேன் அதைநெஞ்சே --அன்றியே!
நன்றெவர் செய்யினும் நான்சாகும் நாள்வரை
நன்றி மறவேனே நான்.

ஜாய் சத்தியா

11

உள்ளத்தில் ஓங்கிநிற்கும் ஓவிய நாட்டத்தைத்
தள்ளிவைத்துக் காலத்தைத் தாழ்த்தாமல் - தெள்ளெனத்
தீட்டிநாளும் இன்பத் திளைப்பினில் மூழ்கியே
ஈட்டிட வேண்டும் ஈவு.

வானதி சந்திரசேகரன்

12

இன்று முதல்நான், இயலு முதவிகளால்
இன்னுஞ் சிலர்க்கேனு மின்பளித்தால் - நன்றாகும்
இல்லார்க்குச் செய்வதிலே என்பெயர் சேராமல்
சொல்லாமல் செய்ய சுகம் .

மலர்மைந்தன்

13

கற்றதையும் பெற்றதையும் காலம் பகன்றதையும்
மற்றவர்க்குச் சொல்லல் மடமையே! - கற்றறிந்த
இப்பாடம் தன்னைநான் இன்றுமுதல் ஏற்கின்றேன்
எப்பாடும் இல்லை இனி

இரா அழகர்சாமி

(தூங்கிசை செப்பல் ஓசை உடைய ஒரு விகற்ப நேரிசை வெண்பா)

14

இன்றுமுதல் நானும் இயந்திரமாய் மாறினால்
நன்மை மறந்து நடக்கலாம் - கொன்றழிக்கும்
தீமைகள் சூழ்ந்த திருநாட்டில் நாள்தோறும்
ஆமையாய் வாழ்தல் அரிது...!

ஜ.க.நாகப்பன்

15

எதையும் எளிதாய் எடுத்து மனத்தைச்
சிதையாமல் வைப்பேன் சிறப்பாய் - விதைதான்
வளரும் மரமன்றோ! வெற்றிக் கனியை
உளமார ஏற்பேன் உவந்து

ஒசூர் மணிமேகலை

16

குறைகளைச் சொல்லும் குணமதை மாற்றி
நிறைகளை மட்டும் நினைவில் - நிறைத்து
மறைகள் பலவும் மனத்தினில் ஏற்க
நிறைவான வாழ்வே இருப்பு.

சோ. சுந்தரேசுவரி.

17

அன்புள்ளம் நொந்துவிட ஆத்திரமாய்க் கூற்றுரைக்கும்
தன்மையற்றத் தீக்குணத்தைச் சாய்த்துவிட்டு - நன்மையைத்
தந்துவிடும் நற்சொல்லை தன்மையுடன் பேசுகின்ற
உந்துதல் கொள்வேன் உணர்ந்து

வே.செந்தில்குமரன்

18 (இருவிகற்ப நேரிசை வெண்பா)

உண்டேன் படுத்தேன் உடல்வளர்த்தேன் என்றறியா
தொண்டுநல வாழ்வைத் தொடங்கிடுவேன் - உண்டிக்கு
நல்லுணவை ஊருக்கு நல்கிடும் ஏருழவை
வில்லாய் எடுப்பேன் விரைந்து

தன்ராஜ் பாப்பண்ணன்

19

வாழ்க்கைத் துணையின்றி வாழ்ந்திருந்த நானுந்தான்
வீழ்வதற்குள் காதலிக்க வேண்டிட்டேன் - வாழ்வது
பேதமில் லாதெனக்கும் பட்டங் கொடுப்பதனால்
காதலிக்கப் போகின்றேன் காண்...!

கவிஞர். சிந்தனை பாரதி, திருச்சி.

20

விடியும் வரைக்கும் விழிகள் முடக்கும்
கடிநோய் உறக்கம் களைந்தே - துடியாய்க்
குடியைக் கெடுத்தே குழியிற் புதைக்கும்
மடியை ஒழிப்பேன் மகிழ்ந்து.

க.சங்கரபாண்டியன்

21

சென்ற இடங்கள் செழிப்புறச் சொற்களைக்
கண்டே எடுத்துக் கவிதைசெய்வேன் - நன்றாய்ச்
சிறந்த இடத்தினில் சிந்தை அமர
நிறைந்த மனத்தில் நிலைத்து.

பாவலர் வா.சண்முகம்

22

செப்பியபோல் நூலிரண்டைச் சென்றாண்டு தந்ததுபோல்
தப்பாதிவ் வாண்டும் தருவதற்கே - நப்பாசை
கொண்டேன் அருள்நீ கொடுப்பாய் தமிழ்த்தாயே
தண்தமிழில் நற்புலமை தா !

பாவலர் கருமலைத்தமிழாழன், தமிழ்நாடு

23

மதகு திறக்க மழைநீர் பயனாம்;
உதவும் தொழில்கள் உயர்த்தும் - முதலுதவி
செய்வதைப்போல் செய்தே, சிறப்பாய்த் துணைநின்று
மெய்வழியில் யானுயர்வேன் மேல்.

நெடுமுடி வேந்தன்

24

இன்றுமுதல் என்மனைவி இல்லாமல் என்வாழ்க்கை
கன்றொன்று தாயின்றிக் குன்றுதல்போல்! - நன்றாக
வாழ்ந்தேன்யான், வாய்ப்பிழந்தேன், வீழ்ந்தேன்,
வளமிழந்தேன்,
தாழ்ந்தாலும் உன்நினைவே தான்.

முனைவர். சுந்தரராசன் தயாளன், பெங்களூர்.

25

விட்டேன் தொடர விரும்பா நடைப்பயிற்சி
சட்டெனக் கூடுஞ் சரீரநோய் - மட்டமாய்
உய்தலு மிங்கே உடன்படா தோடவினித்
தொய்வின்றிப் போவேன் தொடர்ந்து

ஜனனி

26

என்மொழியும் என்னினமும் என்நாடும் என்னுயிர்
என்றினிது வாழ்தலே என்கடனாம் - என்வழி
முன்னணி யாக்கி முனைந்திங்கே முப்பொழுதும்
தன்னிலை ஆள்வேன் தனித்து.

படைக்களப் பாவலர் துரை. மூர்த்தி

27

விரிகின்ற கற்பனையை வீரியமாய்ச் சொல்ல
உரித்தான வார்த்தை உதிக்கும் - கதிரென்(று)
எரிகின்ற வேட்கைக் கிரையாய் மரபில்
அரிச்சுவடி கற்றிடுவேன் ஆழ்ந்து

ஆனந்த் சுந்தரராமன்

28

அன்றுத் தலைவனாய் ஆனேன் குடும்பத்தில்
இன்று விலகினேன் இப்பொருப்பில் - என்றுமே
நன்றாம் இயல்பான நம்வாழ்வில் நாளும்நம்
கன்று வளர்தலைக் கண்டு

கண்ணன் நடராசன்

29

வெண்பாவி லாயிரம் வெற்றியாய்ப் பாடிநான்
எண்ண வலிமையே ஏற்றமிங்கு - கண்டிட
இன்று முதல்நாள் இனிய முயற்சியாய்
நன்றே மனங்கொண்டேன் நான்

உடுவிலூர்கலா, இலங்கை.

30

கழிந்த வருடம் கவலையில் தோய
வழிவரும் நாட்கள் வழங்கும் - அழியாச்
செழிப்புடன் ஆனந்தம் சேர்த்திட போற்றும்
பொழிவுடன் செல்வமது பொங்கு

பாண்டிச்செல்வி கருப்பசாமி கோவை

31

கண்டதையும் தேக்கிக் கடைநிலைக்குப் போயிருந்தேன்
உண்டதையும் விட்டொழித்து ஊறுதனை கொண்டுவிட்டேன்
அன்றிருந்த வாழ்வுதனை ஆள்வதற்கே நின்றிருப்பேன்
இன்று முதல்நான் இசைந்து.

எழுத்தாளர் நாகா

32

தமிழைப் பிழையறத் தேடிநிதங் கற்க
அமிழ்தாம் அதனிலை ஆய்ந்தே - தமிழில்
அரும்நூற்கள் யாத்துநம் ஆன்ற குடிக்குப்
பெருமை தருதற் கடன்.

தமிழ்க்கீரன், இலங்கை.



# வெண்பா போட்டி (பயணம்) - 26

போட்டியின் கால அளவு : 01 - 12 பெப்ரவரி 2024

வணக்கம் பாவலர்களே...
இம்மாத போட்டியின் விதிகள்....

கவிதைக்கும் காதலுக்கும் நிறைய தொடர்பு உண்டு....
ஆக.... காதலர் தினத்தை ஒட்டி வருவதால் இம்மாதப் போட்டிக்கு விதிகள் ஏதும் இல்லை...
காதலை மையப்படுத்தி ஆளுக்கு ஒரு அகப்பொருள் வெண்பா பாடலாமா...?
.
பொதுவான விதிகள் : -

நேரிசை வெண்பா மட்டுமே எழுதவேண்டும், பல வெண்பாக்கள் எழுதினாலும் அதில் ஒன்று மட்டுமே தேர்வு செய்யப் படும், முடிந்த அளவு ஒருவர் பயன்படுத்திய பாடுபொருளை இன்னொருவர் பயன்படுத்த வேண்டாம். வெண்பாவிற்குக் கீழ் எழுதியவர்கள் தங்கள் பெயரினை தமிழில் எழுதுதல் அவசியம்.

அசத்துங்கள் கவிஞர்களே....

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே...அது நகைச்சுவையானாலும் ஏற்றுக் கொள்ளப்படும். உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும்.

காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்...

தளர்வுகள் : - தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்த்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

என்றும் தமிழுடன்....

ஆசிரியர் தமிழ்நெஞ்சம் ,
மற்றும் ஆசிரியர் குழு.

# சின்னச்சின்ன அன்பில்தானே ஜீவன் இன்னும் இருக்கு

**எஸ். ஃபாயிஸா அலி.**

எனது இளையமகள் பிறந்து மறுநாள்.

திருகோணமலை வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதியில், தலைச்சுற்றும்.. கீறிக்கிழித்த தையல் காயங்களின் வலியும் நடக்கமுடியாதபடி உயிரை இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்த நேரம்.

தொடர்ந்து அழுது கொண்டே இருந்த பிள்ளையைத் தனியே விட்டுவிட்டு எங்கேயும் நகரவும் பயந்தபடி நாள் முழுக்க உட்கார்ந்து கொண்டிருந்ததில் அடிவயிறு சுண்டி இழுக்கத் தொடங்கி விட்டிருந்தது. அவசரமாக வோஷ்ரூம் போயே ஆக வேண்டிய சூழ்நிலை. இடநெருக்கடி, பாதுகாப்புநிலை கருதி நோயாளிகளுடன் கூடத்தங்குவதற்கு வெளியார் யாரையும் வைத்தியசாலை நிருவாகம் அனுமதிக்கா ததால் பார்க்க வந்திருந்த உம்மா, சகோதரிகள் கூட பார்வையாளர் நேரம் வந்து பார்த்துவிட்டுப் போய் விட்டி ருந்தனர்.

அந்த விசாலமான வார்டிற்குள் தெரிந்த வர்கள் யாருமே இருக்க வில்லை.

கஷ்டப்பட்டு பிள்ளையைத் தூங்க வைத்துவிட்டு பக்கத்தில் இருந்தவர்கள் யாரிடமாவது சொல்லி விட்டுப் போக லாம் என்று பார்த்தால்... யாரும் நம்ம பிள்ளையைப் பொறுப்பெடுக்கும் அளவுக்கு ஃப்ரீயாக இல்லை. ஆ.. ஊ.. என்று அனுங்கிக் கொண்டும்..அப்பதான் பெற்ற தங்கள் குஞ்சுகளைத் தூக்கிப் பால் கொடுக்கவும் தெரியாமல் தடுமாறிக் கொண்டும் நம்மையே பரிதாபப்படச் செய்யும் இளம் தாய்மார்களுக்கிடையில்,

கொஞ்சம் பரவாயில்லை எனுமளவுக்கு எனது கட்டிலின் அருகில் இருந்த பெண்ணிடம், “கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கமா ரெண்டு நிமிசத்தில ஓடி வந்திடுவேன்..!”

என்று கெஞ்சிக் கூறியபடி வார்ட் கதவிற்கு அருகில் வந்தபோதுதான் அந்தப் பிள்ளையை அவதானித்தேன்.

எங்களூர்தான். அதிலும் கணவரின் குடும்பம். படிக்கிற காலத்தில் நல்ல பழக்கம் தான். என்றாலும் நல்லது கெட்டதுகள் தாண்டி, தொடர்ச்சியான போக்குவரத்து குறைவு. திருமணத்திற்குப் பின்பு ஓரிரு முறை சந்தித்துப் பேசியிருக்கிறோம்.

திருமணத்திற்குப் பின்னர் எத்த னையோ சிக்கல்களை எதிர்கொண்டும்... முதுமானிவரை விடாது படிப்பைத்

தொடர்ந்தது தொடர்பில் அவரில் எனக்கு எப்போதும் நல்ல மரியாதையும் அன்பும்.

இன்னும் பிள்ளை பெறவில்லை போலும்.

அமைதியாக உட்கார்ந்து மன்ஸிலோ இல்லை யாஸீன் சூராவோ தெரியவில்லை. கைக்கு அடக்கமான குர்ஆன்பிரதி ஒன்றை வைத்துக் கொண்டு அமைதியாக ஓதிக் கொண்டிருந்தார்.

இப்ப நின்று பேசிக் கொண்டிருக்க முடியாது. போய் வந்து ஆறுதலாக கதைப்பம் என்று நினைத்து ஒரு புன்சிரிப் போடு கடந்து போனேன்.

மாவட்டத்தின் எல்லாப் பகுதியில் இருந்தும் ஏழை, பணக்காரர் எனப் பாகு பாடின்றி எல்லா விதமான மக்களும் மருத்துவத் தேவைகளுக்காகத் தஞ்ச மடையும் மாவட்ட வைத்தியசாலை யல்லவா.. இங்கு பாத்ரூம் எப்போதும் சுத்தமாக இருப்பதில்லை. உள்ளுக்குப் போய் பார்த்தபோதுதான் தெரிந்தது.. குழாயில் நீர் வரவில்லை. உள்ளங்கை அளவுக்கு குட்டி குட்டியாக கொஞ்சம் பழுப்பும் வெள்ளையும் கலந்த நிறத்தில் டைல்ஸ் பதிக்கப்பட்ட சிறிய தொட் டிக்குள் மட்டும் நீர் நிரப்பப் பட்டிருந்தது.

அந்தத் தொட்டியின் கட்டில் இருந்த சிறிய ஜக்கால் தண்ணீரை அள்ளக் குனிந்தபோதுதான் அவதானித்தேன்.

உள்ளுக்கு யாரோ ஒரு பெண்மணியார் பாவித்துக் கழற்றிய நாப்கின்,தன் சிவப்பு நிறத்தை தொட்டிநீருக்கு அன்பளிப்புச் செய்தபடி ஊறிப் பருத்துக் கிடந்தது.

(சிலவேளை அந்தத்தொட்டிக் கட்டில் வைத்ததை மறந்து போய் வந்திருப்பார். அது தவறி உள்ளுக்குள் விழுந்திருக்கலாம்.)

அங்கு வீசிய குருதிமணம். எனக்கு இருந்த தலைச்சுற்றை இன்னும் கொஞ்சம் கூட்டியது போல இருந்தது.

மெல்லப் போய் பக்கத்தில் இருந்த ஒரு பெண் பணியாளரிடம் விஷயத்தைச் சொல்லி விட்டு நான் அருகில் இருந்த இன்னொரு குளியலறைக்கு சென்று குளித்து உடுப்பெல்லாம் மாத்திக் கொண்டு வரும்வழியிலேயே என் குழந்தையின் அழுகைச் சத்தம் மெதுவாய் காதுக்குள் கேட்டதுபோலவே இருந்தது.

வார்டுக்குள் கால் வைத்ததுதான் தாமதம். ஏதோ விசித்திரமான ஒன்றைப் பார்ப்பது போல என்னை அங்கிருந்த பெண்கள் எல்லோரும் திரும்பிப் பார்க்க, அங்கு பொறுப்பாக இருந்த நர்சோ "என்ன அம்மா.. குளிக்கப்போனிங்களா..? இல்லே.. அங்கேயே நித்திரை கொண் டிங்களா.?. இங்கே பிள்ளையை விட்டுப் போன நினைவே இல்லாம.." என்று பெரிசா சத்தம் போடத் தொடங்கி விட்டார்.

எனக்கு சிலீர் என்றது. கட்டிலில் பிள்ளையைக் காண வில்லை. அழுகையே வந்து விட்டது. பதட்டத் தோடு திரும்பினால்.. ஓதிக் கொண்டிருந்த இந்தப் பிள்ளைதான் அழுத மகளைத் தூக்கிச்கொண்டு மெல்ல...

மெல்ல அந்த வார்டுக்குள் நடந்து கொண்டிருந்தார்.

என்னைக் கண்டதும் அவரின் இயல் பான அதே சிரிப்புடன்.. "நீங்க வாரதுக் கிடையிலே முழிச்சு அழுது கொண்டே இருந்தா.. அதான் தூக்கிச் கொண்டு நடந்து பார்க்கிறேன்.." என்று கூறுகிறா.

அல்ஹம்துலில்லாஹ்.

## உலகை விழுங்கிய பனித்துளிக்கு பருத்த உடல்..

---

பனித்துளியில் விழுந்த
உலகிற்குப் பருத்த உடல்
வளைந்து நெளிந்த பனித்துளியின்
உடலெங்கும் தென்றலின் ரேகைகள்

ஒரு செடியை ஊடுருவிப்
பச்சையத்துடன் புணரும்
பனித்துளியின்
ஆசுவாசக் காதலைத்தான்
நத்தை நகர்வில் கலைத்துவிட்டுச் செல்கிறது
ரேகைகள் கடுமையாய் பதித்த தென்றலின்
விரல்கள்

தென்றலின் கரங்களுக்குக்
காதல் மலர்ந்தாலும்
காமம் மலர்ந்தாலும்
நத்தையோடுகளை கீழிறக்கவில்லை
ஆசையைத் துறந்த புத்தன் சாயலான பனித்துளி...

ஆயிரம் புத்தனை விழுங்கியும்
ஒற்றை ஆசையும் இல்லாமல்
இழக்கிறது
பருத்துப் பருத்து உடைந்து போகும்
பனித்துளியில் விழுந்த பருத்த உடலில்
உலகொன்று..

நீரோ
நிலமோ
ஆகாயமோ
நெருப்போ
காற்றோ
உடலை விழுங்கிய பனித்துளிக்கோ
நிலத்தில் பருத்துப்போனதுடல்...

**சே கார்கவி கார்த்திக்**
நாகப்பட்டினம்

போனஉயிர் திரும்பி வந்தது போன்ற உணர்வு எனக்கு.

மூன்று நாட்களாக ஒழுங்காகச் சாப்பிட முடியாத சூழ்நிலையில்.. பல போராட்டங்களுக்கு மத்தியில் பிள்ளையையும் பெற்றெடுத்த நேரம்.. கூடவே உறவுகள் யாருமில்லையே.. என்ற பதட்டமும் சேர உடலும், உள்ளமும் நலிந்து கிடக்கும் இவ்வாறான தனிமைச் சூழலில்... கொஞ்சநேரம் நாம் வெளியே போய் வரும்வரை உண்மையன்போடும் பரிவோடும் இப்படிப் பிள்ளையைத் தூக்கி வைத்திருந்தது கூட எவ்வளவு பெரிய ஆறுதல் என்பதை.. இப்படியொரு சூழ்நிலையை கடந்து வந்தவர்களால் மட்டுமே உணர்ந்து கொள்ள முடியும்.

அந்த இடத்திலேயே அவரின் கையைப் பிடித்து நிறையத்தரம் எனது பிரார்த்தனைகளையும் நன்றிகளையும் மனப் பூர்வமாய் தெரிவித்துக் கொண்டேன்.

வீடு வந்துரெண்டு அல்லது மூன்றுநாள் கழித்து அவருக்கு அழகான ஆண் குழந்தை பிறந்த செய்தி கிடைத்த போதும் சரி.. அதன்பிறகான இந்தப் பதினாறு வருடங்களிலும் எப்பவாவது அவரையோ இல்லை என் இளைய மகளின் சமவயதொத்த அவரின் அந்தக் கெட்டிக்கார மகனார் தொடர்பான என்னவொரு தகவல்களைக் கேள்விப் படும்போதும்சரி...

அவர்களுக்காக... உள்ளமும்.. உணர்வுகளும் உருகி நெகிழ்ந்தபடியான என் பிரார்த்தனைகளை இறைவனிடத்தில் முன் வைக்க ஒருபோதுமே தவறியதில்லை.

■

# யாதுமாகி

*அத்தியாயம் : 1*
*எழுதியவர் : விஜி சிவா*



அந்தத் தனியார் பள்ளியின் முகப்பு வாயில் மிகக் கம்பீரமாய் எல்லோரையும் வரவேற்றுக் கொண்டிருந்தது. அந்தக் காலை வேளையில், பள்ளியைச் சுற்றி இருந்த மரங்கள் பழுத்த இலைகளை காற்றுக்கு மெதுவாய் உதிர்த்துக் கொண்டிருந்தன. குறுக்கும் நெடுக்குமாய் நடந்த பள்ளிக்குழந்தைகளின் முதுகில் ஆமை ஓடுகள் போல் புத்தகப்பைகள்!

"ஹாய் நவீன்... என்னடா சீரியஸா முகத்தை வச்சுக்கிட்டு வர்ற....?" வகுப்பறையை நோக்கி சென்று கொண்டிருந்த சுரேசின் பார்வை, நவீனை ஊடுருவியது!

"ஒண்ணும் இல்லடா...!" தோளில் தொங்கிய பெரிய புத்தகப்பையுடன், தோளைச் சிலுப்பி அவனைக் கடக்க முயற்சித்தான் நவீன்.

"ஹேய்... பொய் சொல்லாத! நேத்து நடந்ததையே நினைச்சுட்டு இருக்கியா..? விடுடா மச்சான்!"

ஒரு நிமிடம் தயங்கிய நவீன், சுரேஷின் அருகில் சென்று அவன் தோளில் கை போட்டுக் கிசுகிசுத்தான். "இன்னைக்கு அவளுக்கு இருக்குடா மச்சான் ஒரு சர்ப்ரைஸ்! எங்கிட்டயேவா...?" விகாரமாய் இளித்தான்!

"ஏய்... என்னடா சொல்ற..?" சுரேஷின் விழிகள் பயத்தில் விரிந்தன!

"வெயிட் அண்ட் சீ மச்சான்..." தன் புத்தகப் பையைத் தொட்டுக்காட்டி கண் சிமிட்டியபடி வகுப்பறைக்குள் நுழைந்தான்.

## Power Point Stories - 15

*பவர் பாயிண்ட் கதைகள் - 15*

*சிறுகதையை எழுதியவர்கள்:*

*அத்தியாயம்: 1*
**விஜி சிவா**

*அத்தியாயம்: 2*
**வனஜா முத்துக்கிருஷ்ணன்**

*அத்தியாயம்: 3*
**ருக்மணி வெங்கட்ராமன்**

*அத்தியாயம்: 4*
**கி. இரகுநாதன்.**

*கதை நெறியாளுமை:*
**விஜி சிவா.**

வகுப்பறையின் கரும்பலகையில் "பத்தாம் வகுப்பு, டி பிரிவு" மிக அழகாய்ப் பல வண்ணங்களுடன் எழுதப் பட்டிருந்தது. நவீனின் பார்வை அதையே பார்த்தபடி இருக்க, சுரேசின் சிந்தனையும் பார்வையும் நவீனின் புத்தகப்பையில் இருந்தன. "புத்தகப்பையின் முதுகுப் பக்கமாய் ஏதோ ஒன்று தள்ளிக் கொண்டிருப்பதுபோல தெரிகிறதே... என்னவாக இருக்கும்...?"

"டேய் நவீன்... திரும்பவும் முட்டாள் தனமா எதையாவது பண்ணிடாதடா... என்கிட்ட சொல்லுடா என்னன்னு.'' சுரேஷ் அவனை மெதுவாய்க் கிள்ளினான்!

"ஸ்...ஸ்.....வாயமூடுடா!" முறைத்தபடி மீண்டும் கிசுகிசுத்தான் நவீன்.

..................

"பஞ்சபூதங்களும் விழிகளில் நடுநடுங்க
உதிரமும் சுவாசமாய் இசைமீட்ட
யாதுமாகி நின்றாய் பெண்ணே...!"

யாரோ ஒரு கவிஞர் வானொலியில் கவிபாட...

"பிரியா...பிரி...யா.." அடங்க மறுத்த இருமலில், மகளின் பெயர் பிரிந்தது தனலட்சுமிக்கு.

"ம்..சொல்லு."

"டிபன் பாக்ஸல தயிர் சாதம் வச்சிருக்கேன்; மறந்துடாத கண்ணு!" தன் நெஞ்சைத் தடவிவிட்டபடி சத்தமாய்ச் சொன்னாள்.

"அதுக்கு ஏம்மா கத்துற...? ஏதோ விதவிதமா சமைச்சுக் கொடுக்குறாப்ல... டிபன்பாக்ஸ், டிபன்பாக்சுனு; எரிச்சலக் கிளப்பாத.!'' தன் புத்தகப்பையை அடுக்கியவளின் குரல், ஆங்காரமாய் ஒலித்தது!

தொடர் இருமலால் வலித்த நெஞ்சு, ப்ரியாவின் வார்த்தைகளில் சிக்குண்டு சிதறியது.

"அம்மாவால முடிஞ்சா செய்யமாட்டேனா கண்ணு... உனக்கு செய்யாம நான் யாருக்குச் செய்யப் போறேன்?"

"ஆ..மா, நிறைய சொத்து சேர்த்து வச்சிருக்க; விதவிதமா செஞ்சு, வாங்கி கொடுக்கிறதுக்கு..." முணங்கினாள்.

"நான் வேலை செய்ற வீட்ல இன்னைக்கு சம்பளம் கொடுப்பாங்க! நாளைக்கு கறிக்குழம்பு வச்சுத்தாறேன்... சரியா...? இப்ப டிபன் பாக்ஸ பத்திரமா எடுத்து வச்சுக்கோ... கவனமா போயிட்டு வாம்மா.!"

"சம்பளம்... பெரிய சம்பளம்! ஏதோ லட்சக்கணக்கில் வாங்குற மாதிரி...!" சொன்னவள், கோபத்துடன் வேகமாய்த் தன் முதுகுப்பையில் இருந்த ஜிப்பை இழுக்க, அது கையோடு வந்தது.

"சனி...ன்... இது வேற... எனக்கு இருக்கிற திறமைக்கு நான் வேற வீட்ல பிறந்திருந்தா இந்த பிஞ்சுபோன பேக்கயா தூக்கிட்டுப் போவேன்? நான் எவ்வளவு சுகமா இருந்திருப்பேன்!'' அவளின் வார்த்தைகளில் கோபமும் ஏக்கமும் வெடித்தன!

"ப்ரியா, பத்தாம் வகுப்பு டி பிரிவு" என்ற அடையாள அட்டை அவள் கழுத்தில் கோபமாய் ஆடியது.

*அத்தியாயம் : 2*
*எழுதியவர் :*
*வனஜா முத்துக்கிருஷ்ணன்.*



ப்ரியாவும் அவள் வகுப்புத் தோழியு மான ஜோதியும் பள்ளிக்குள் நுழைந்த போது, "ஹே.... ஹூ..." என்று சத்தம் எதிரொலித்தது..!!

பள்ளியின் வாட்ச்மேன் யாரிடமோ சொல்லிக் கொண்டிருந்தார்.

"தேவியை மாணவர் தலைவரா தேர் தெடுத்திருக்காங்கல. அதுக்கு காலை யிலிருந்து ஒரே அமர்க்களம். என்ன பொண்ணுங்களோ?"

ப்ரியா கோபத்துடன், ''பார்த்தியா ஜோதி.. பணத்தைத் தவிர அவளுக்கு வேறென்ன தகுதி இருக்கு.? ம்... இவ எல்லாம் ஒரு தலைவி" எல்லாம் பணம் படுத்தும் பாடு." என்றாள்.

''ஆமாண்டி... சரியாச் சொன்ன;'' பணக்காரங்ளைச் சுத்தியும் பைத்தியக் காரங்களைச் சுத்தியும் ஆளுங்க இருப் பாங்கன்னு எங்க ஆயா சொல்வாங்க; சரியாத்தான் இருக்குது" சொல்லியபடி தன் தலையிலடித்துக் கொண்டாள் ஜோதி.

ப்ரியாவின் மனதில் பொறாமை, இயலாமை என்னும் ஆமைகள் புகுந்தன!

"இந்த உலகத்துல ஒண்ணு பணம் இருக்கணும்; இல்லாட்டா பதவி இருக் கணும். எனக்கு எத்தனை திறமை இருந்து என்ன பயன்? ஒரு குடிசைல வந்து பொறந்திருக்கேன்.!" ப்ரியாவின் கண்கள் சிவந்தன!

ஜோதி ப்ரியாவின் கையை ஆதரவாகப் பற்றிக் கொண்டாள். "எல்லோரும் பணத்தோட பொறக்க முடியுமா ப்ரியா..? அவங்க அவங்களுக்குன்னு ஒரு பாதை இருக்குது. அதன் வழியாகத்தான் போகணும்? 'முடவன் கொம்புத் தேனுக்கு ஆசப்படலாமா'னு எங்க பாட்டி சொல்லு வாங்க.!" புன்னகைத்தாள்.

"படணும்...கண்டிப்பாஆசப்படணும்..." ப்ரியாவின் பார்வை அலைந்தது.!

"அந்தக் காலத்துல ரெண்டு டிரஸ்ஸை வச்சுகிட்டு, ஹரிக்கேன் விளக்கை வச்சு கிட்டு காலத்தை ஓட்டினாங்களாம்.! இப்போ நமக்கு எதைப் பார்த்தாலும் ஆசையா இருக்கு. ஆசைய நிறைவேத்திக்க நமக்குப் பணம் வேணும்னு தோணுது." சற்றே நிறுத்திய ஜோதி பிரியாவின் தோளை இறுக அணைத்தவாறு தொடர்ந்தாள்.... "உன் திறமையை மட்டும் நீ நம்பு ப்ரியா... நிச்சயம் ஃபியூச்சர்ல நீ மிகப்பெரிய ஆளா வருவ பாரேன்!"

"இப்பவே நான் நிறைய பணம் சம்பாதிக்கிற வழியைப் பார்க்கப் போறேன்..'' அலட்சியமாய் வார்த்தை களை உதிர்ந்தாள் ப்ரியா!

"என்னடி பண்ணப் போற...?" திகிலு டன் கேட்டாள் ஜோதி.

..............

"தனாக்கா... என்ன வேலைக்கு கிளம் பிட்டியா..? இன்னிக்கும் ப்ரியா ஏதாவது தாறுமாறா பேசிட்டாளா? உன் முகமே சரியில்லையே...'' என்று கேட்டாள் பக்கத்து வீட்டுக்காரி பாக்கியம்.

"என்னத்த சொல்ல? இந்தக் காலத்துப் பிள்ளைங்க நாம வாழ்ந்த மாதிரியா இருக்காங்க? அவங்களுக்கு எத்தன வசதி வேண்டியிருக்குது?."

"என்னக்கா பண்றது? உன் மவளை பெரிய தனியார் ஸ்கூல்ல சேர்த்துட்டு இப்போ பாடாப் படறே? விரலுக்குத் தக்க வீக்கம் வேணும். அவ கூடப்படிக்கிற பசங்களைப் பார்த்துட்டு எல்லாத்துக்கும் ஆசப்படறாளோ என்னவோ..? ம்... இதெல்லாம் எங்க போய் முடியப் போவுதோ...?'' என்றவள், அருகில் வந்து மெல்லிய குரலில் இன்னும் சில விபரங்களைச் சொல்ல, அதிர்ச்சியானாள் தனலட்சுமி.



அத்தியாயம் : 3
எழுதியவர் :
ருக்மணி வெங்கட்ராமன்

"ரவுண்டானா கிட்ட ப்ரியா எவனோ ஒருத்தன் கூட கார்ல போறத பார்த்தேன். மேற்குப் பக்கம்தானே அவளோட இஸ்கோலு..?'' தயாராக வைத்திருந்த வெற்றிலையை எடுத்து வாயில் போட்டு மென்றபடி... "ம்... நீயே முடியாம நாலு வீடு பத்துப்பாத்திரம் தேய்ச்சு பொண்ண படிக்க வைக்கிற. அவ என்னடானா சொலிக்கிற டிரஸ் போட்டுகினு எவன் கூடவோ வண்டியில் சர்,...னு போறா".

தனலட்சுமிக்கு கோபம் வந்தது. "இப்ப உனக்கு என்ன தெரியணும்? அவ போட்டிருந்த டிரஸ் பத்தி தானே..! அவ எங்க போறானுதானே...! அவ ஃபிரண்ட் பொறந்த நாள் பார்ட்டிக்கு போறா. அவளோட ஃபிரண்டே இந்த டிரஸை எடுத்துக் கொடுத்து போட்டுகிட்டு வரச் சொன்னாளாம். எங்கிட்ட சொல் லிட்டு தான் போயிருக்கா."

தனம் சமாளிக்க முயற்சித்தாள்.

பாக்கியம் விடாமல், "ஆனா கார்ல இருந்தது எவனோ ஒருத்தன் மட்டும்தான். வேற பொம்பள பசங்க யாருமே கார்ல இல்லையே.." என்றாள்.

தனலட்சுமி... பதிலேதும் பேசவில்லை.

பாக்கியம் எழுந்தாள். சற்று தள்ளிச் சென்று விளக்கு கம்பத்தின் அடியில் வாயிலிருந்த உமிழ்நீரை ''தூ..'' என்று துப்பினாள். தேவையை விட அதிகமான சத்தத்துடன் துப்பியதாக தனலட்சுமிக்குப் பட்டது.

"என்னமோ தனாக்கா..! 'கும்பி கூழுக்கு அழுததாம், கொண்டை பூவுக்கு அழுத தாம்'னு சொல்லுவாங்க. ஜாக்கிரதை தனாக்கா.. நான் கௌம்புறேன்.! நமக் கெதுக்கு மத்தவங்க வீட்டு சமாச்சாரம்!" என்றபடி அங்கிருந்து புறப்பட்டாள் பாக்கியம்.

நிறைய கேள்விகளுடன் வீடு நோக்கி நடந்தாள் தனலட்சுமி.

அன்று மாலை ஏழு மணி ஆனாலும் இன்னும் ப்ரியா வராமல் போகவே தனலட்சுமி பயந்தாள். கூடவே கவலையும் தொற்றிக் கொண்டது. நிலை கொள்ளாமல் தவித்து வெளியில் வந்து பார்க்க...

சற்று தூரத்தில் வந்து நின்ற கார் ஒன்றிலிருந்து ப்ரியா இறங்கி வந்தாள். வரும்போதே நடையில் ஒரு துள்ளலும், முகத்தில் வெட்கமும் இருப்பதை தன லட்சுமி கவனிக்கத் தவறவில்லை.

அவளின் கலைந்த தலையும், சோர்வான முகமும் பயத்தைக் கொடுத்தன!

தன் பையை நாற்காலியின் மேல் வைத்தபடி தனலட்சுமியின் பார்வையைத் தவிர்த்தவள்... ரரொம்ப டயர்டா இருக் குமா. எனக்கு சாப்பாடு வேண்டாம்.. தூங்கப் போறேன்..!" என்று சொல்லி தன்

அறைக்குள் நுழைந்தாள்.

ப்ரியாவின் இந்த மாற்றம் தனலட்சுமியின் பயத்தை அதிகரிக்க, இருமலுடன் கண்ணீரும் எட்டிப் பார்த்தது.! “கவர்மெண்ட் பள்ளிக்கூடத்துல சேர்க்காம, தனியார் பள்ளியில கஷ்டப் பட்டாவது படிக்க வைக்கணும்னு நினைச்சது தப்பு போல...” என்று நினைத்தவள், பிரியாவின் மதிய உணவு டப்பாவைக் கழுவ அவளுடைய பையைத் திறந்தவளுக்கு, உள்ளே இருந்த ‘அந்தப்பொருள்’ இன்னும் அதிர்ச்சியைத் தந்தது.!

‘புத்தம் புது செல்போன்...’



அத்தியாயம் : 4
எழுதியவர் :
கி. இரகுநாதன்

அந்த அறையின் நடுவில் இன்னும் மயக்கம் தெளியாத நிலையில் தேவி...! அவள் மீதிருந்த பார்வையை எடுக்காமல் சுரேஷ் கேட்டான்.

“நீ பெரிய ஆளுடா மச்சான்..! இவ ரொம்ப திமிர் பிடிச்சவளாச்சே.. எப்படி வலையில விழுந்தா..?”

நவீன் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான். “ரொம்ப சிம்பிள்டா மச்சான். அரசியல் பிரபலத்தோட பொண்ணு இல்லையா..? கொஞ்சம் புகழ்ந்து பேசினேன். விழுந்துட்டா...” பெரிதாகச் சிரித்தான். பாக்கெட்டிலிருந்து ஒரு சிகரெட்டை எடுத்து பற்றவைத்தபடி சொன்னான். “மச்சான்..! அந்தப் ப்ரியாவை வேற மாதிரி... டீல் பண்ணியிருக்கேன் தெரியுமா..? இன்னும் கொஞ்ச நேரத்துல கிளி தானாகவே வந்து மடியில விழப் போகுது பாரு..”

“டேய்...எப்படிடா இதெல்லாம்...?”

நவீன் சிகரெட்டை ஆழ இழுத்து நிதானமாக புகையை வெளியேற்றியபடி சொன்னான். “ப்ரியா ஒரு மீன்... பணப் பைத்தியம் பிடிச்ச மீன். தூண்டில்ல கொஞ்சம் பணத்தை வெச்சு ருசியை மட்டும் காட்டியிருக்கேன். பெரிய ருசிக்காக அந்த மீனும் இன்னும் கொஞ்ச நேரத்தில் இங்க வந்துடும்.. அப்புறம் என்ன..? மீனை நம்ம இஷ்டத்துக்கு சமைக்க வேண்டியது தான்” . மர்மமாகப் புன்னகைத்தான்.

கீழே மயக்கத்தில் இருந்த தேவி சற்றே முனக, நவீன் சோபாவில் உட்கார்ந்தபடியே பக்கத்தில் இருந்த கழியை எடுத்து தேவியின் துப்பட்டாவைத் தூக்கி கோபத்துடன் தூர எறிந்தான்; வெறித்துப் பார்த்தான். “ஏண்டி..? கேவலம் ஒரு பொண்ணு நீ..!, அவனால என்னப் பு........ முடியும்...னு என்னைப் பத்தி கமெண்ட்டா அடிக்கற.. காட்டறேன்...! நான் யாருன்னு இன்னைக்கு காட்டறேன்.. உங்கப்பன் அரசியல்ல செல்வாக்கா இருந்தா எனக்கென்ன..? அவன் என்ன பெரிய ம.......னா?”

பக்கத்திலிருந்த சுரேஷ் பயந்தான். “என்னடா பண்ணப் போற...?” என்றான்.

நவீன் அவனைப் பார்த்து விகாரமாகச் சிரித்தான். “அன்னைக்கு என் பைக்குள்ள என்ன இருக்குன்னு கேட்டியே.. இக் கடச்சூடு.!” என்றபடி பக்கத்தில் இருந்த திரைச்சீலையை விலக்கினான். உள்ளே மறைவாக வைக்கப்பட்டிருந்தது....

“கேமரா..!”என்றான் சுரேஷ். “இதை யார்ரா கொடுத்தாங்க..?”

“அமெரிக்காவில இருந்து எங்க மாமா எனக்குன்னு வாங்கிட்டு வந்தாருடா..

நான் இவகூட விளையாடப்போறத இந்தக் கேமராதான் பதிவு பண்ணும். நீ சின்னப் பையன்...! அந்தப் பக்கம் ஓரமா உட்கார்ந்து வேடிக்கைப் பாரு...” என்று சொல்லி இளித்தான்.

அதற்குள் கார் வரும் சத்தம் கேட்டு மெல்ல எட்டிப் பார்த்து லேசாக விசிலடித்தான். ‘‘மீன் வந்துடுச்சிடா.. தானா வந்து மாட்டிக்கிடுச்சு..” என்றவன் சட்டென்று தேவியைப் பார்த்தான். உடனே அவளை இழுத்து அறைக்குள் போட்டு கதவைச் சாத்தினான். வெளிப்புற வாசல் கதவைத் திறந்து, “வா ப்ரியா..” என்றான்.

ப்ரியா உள்ளே நுழைந்ததும் நவீனின் கைகளைப் பற்றி குலுக்கினாள். “டேய் நவீன்..! என்னடா... சாதாரண வீடுன்னு சொன்ன.. இது பங்களாடா.. வாவ்...! எனக்கு இந்த இடம்... அதிக ஜனநடமாட்டமில்லாத சுற்றுப்புறம்... ஆரவாரமற்ற இந்தச் சூழல், இந்தத் தனிமை... எல்லாமே ரொம்ப பிடிச்சி ருக்குடா.. ஹூம்... எங்க வீடும் இருக்கே.. பட்.. யூ ஆர் ரியலி லக்கி..” சட்டென பேச்சை நிறுத்தி, கீழே கிடந்த துப்பட்டாவைப் பார்த்து, கேள்விக்குறியோடு நவீனைப் பார்க்க, அவன் எதுவும் பேசாமல் வெளிப்புறக் கதவைச் சாத்தி தாளிட்டான். அவளருகே வந்து கன்னத்தில் முத்தமிட்டான்.

“நீ இன்னைக்கு வந்துட்டல்ல.. நான் ரெண்டு, மடங்கு லக்கி...” என்று அவளை மார்போடு இறுக அணைத்தான்.

ப்ரியா திடுக்கிட்டு அலறினாள். அவனைத் தள்ளிவிட்டு சற்றே ஒதுங்க.... திரைக்குப் பின்னால் நின்றிருந்த சுரேஷ், அவளுடைய இரு கைகளையும் சற்றே பயத்துடன் இழுத்துப் பிடித்தான். ப்ரியா திரும்பிப் பார்த்து, “அடப்பாவி! நீயுமா..?” என்றாள் திகைப்புடன்.

நவீன் மீண்டும் சோபாவில் உட்கார்ந்து கழியை எடுத்தான். அவள் அணிந்திருந்த தாவணியை கழியால் நீக்க நினைத்து கழியை நீட்டியவன், சுரேஷைப் பார்த்து பயங்கரமாகச் சிரித்தான். ‘‘டேய். மச்சான்..! நீயும் ரொம்ப லக்கிடா..? நீலப்படம்... நேரடியாகப் பார்க்கப் போற.. கொடுத்து வச்சவ...ன்...”

அவன் சொல்லி முடிக்குமுன்னர் அவன் கையிலிருந்த கழி, ப்ரியாவின் கையில் இருந்தது. அடுத்த கணம் அவன் மூக்கில் இருந்து இரத்தம் வடிந்தது. என்ன நடக்கிறது என்பதை ஊகிப்பதற்குள் கழி அவனுடைய நெற்றி, புருவம், கன்னம், கால் முட்டிகள் என சகல இடங்களிலும் ஆக்ரோஷமாக இறங்கியது. சுரேஷ் சுதாரித்துக் கொண்டு ஒரு அடி முன்னே வர, அவனுடைய புருவத்தின் மத்தியில் சரேலென்று கழி பாய, துடிதுடித்து அறைக்கதவின் மீது விழ... கதவு திறந்து கொண்டது. தேவி தள்ளாடியபடி வெளியே வந்தாள்.

ப்ரியா பாய்ந்து சென்று நவீன் வயிற்றில் உதைக்க... கத்தவும் பலமின்றி சுருண்டான்.

கருப்பு வண்ணத்தில் இடுப்பு வரை அணிந்திருந்த முழுக்கைச் சட்டை, தூக்கி செருகிய பாவாடை, இடுப்புக்குக் கீழே அணிந்திருந்த லெக்கின்ஸ் உடை சகிதம் ப்ரியா கையில் கழியுடன் நவீன காளி போல் தெரிந்தாள்.

“என்னடா.. ப்ளூ ஃபிலிம் பார்க்க ணுமா..? எல்லோரும் சேர்ந்து பார்ப் போமா..? ஆனா என்ன..? இதில் சிவப்பும் கலந்திருக்கும்...’’ என்றவள், ஓரிரு

*நொடிகள் தாமதித்து, "இந்தப் படத்துல நடிச்சிருக்கறது உன்னோட அம்மா.. என்ன..? பார்க்க ரெடியா..?"*

*அவ்வளவு வலியிலும் நவீன் கத்தினான். "நிறுத்துடி... எங்கம்மா அப்படிப் பட்டவங்க இல்ல..."*

*ப்ரியா அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தாள். ''மத்த பொண்ணுங்க மட்டும் அப்படித்தான் இருப்பாங்கன்னு ஏண்டா நினைச்சே..? இன்னொருமுறை வாயைத் தொறந்தே... மவனே.. பொளந்துருவேன்.."*

*தன் பையிலிருந்து கைப்பேசியை உயிர்ப்பித்து தொலைக்காட்சியுடன் இணைத்தாள். சற்று நேரம் திரை முழுவதும் கருப்பாகத் தெரிந்தது. திடீரென்று ''ஐயோ..'' என்ற அலறலும், "அம்மா..." என்ற கூக்குரலும் மட்டும் கேட்டது. எந்தக் கல் நெஞ்சத்தையும் உலுக்கி எடுக்கும் குரல்... பதைபதைக்க வைக்கும் கூக்குரல்... திரையில் மீண்டும் மௌனம். நவீனுக்கு உள்ளமே பதறியது. அவனுக்குத் தெரியும். "அது கண்டிப்பாக அம்மாவின் குரல் தான்... அய்யோ..! அம்மாவுக்கு என்ன ஆச்சு...?"*

*திரையில் தோன்றிய அந்த முகம்.... தலை கலைந்திருந்தாலும் முகம் பூசினாற் போல்இருந்தது. "சட்டென்று வேதனையில் துடித்த அந்த முகம் அம்மாவுடையதுதான். சந்தேகமில்லை."*

*திடீரென்று வலி பொறுக்க முடியாமல் அழுதாள் அவள். கேமரா அப்படியே மேலெழும்பி ஒரு பெண் மருத்துவரையும், இரு செவிலியரையும், கூடவே ஒரு ஆயாவையும் காட்டியது. அவளின் மேடிட்ட வயிற்றுக்கு மேற்புறம் சற்றே அழுத்தம் தர, அந்தப் பெண் கட்டிலின் மேல் இரு கைகளாலும் குத்தி, தலையை*

# நீங்கள் மொட்டைமரம்

எனது
கனவை
காவல் காத்துக்கொண்டிருந்த
நீங்கள்
மொட்டை மரமாகிவிட்டீர்கள்
பறவைகளுக்கு
உங்களிடம் பெரிதாக
ஈர்ப்பில்லை
உங்கள் மாயைகளுக்கேற்ப
நான்
அரச மரமாகலாம்
அல்லது
மல்லிகைப் பந்தலாகலாம்
நீங்கள் எனை
பந்தாட நினைத்து
மொட்டை மரமாகிவிட்டீர்கள்
சத்தங்களுக்கு
சருகுகள் கூட
இல்லாமல்
மயானத்தை
ஏப்பமிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்
பரவாயில்லை
என்னிடம் நிறைய
கிளைகளும்
இலைகளும்
கனிகளும்
சிறகுகளும்
இறகுகளும் இருக்கின்றன
வேண்டுமென்றால் - நான்
இறகுகளை கொஞ்சம்
தருகிறேனே
உங்கள் நிர்வாணத்தை
மறைத்துக் கொள்ள

பாத்திமா நளீரா-
கொழும்பு - இலங்கை

இருபுறமும் ஆட்டினாள்... துடித்தாள்.

பெண் மருத்துவர் மிகவும் கனிவான குரலில் சொன்னார். ரஇன்னும் கொஞ்ச நேரம்தாம்மா.. வலியை பொறுத்துக்கங்க.. எங்க.. கொஞ்சம் ப்ரஷர் கொடுங்க.. இன்னும்... இன்னும்... ர

அந்தப் பெண்ணுக்கு மூச்சு திணறியது. எழுந்து உட்கார முயற்சித்தாள். இரு பக்கமும் செவிலியர் கைகளை பலமாகப் பிடித்துக் கொள்ள... அவள், வலி பொறுக்க முடியாமல் கத்தினாள். அவரவர்கள் இயந்திர கதியில் இயங்கிக் கொண்டிருக்க.. ஒரு கட்டத்தில் வலியின் உச்சத்தில் பெருங்குரலெடுத்து, "ஐயோ.... அ...ம்....மா..." என்று அடிவயிற்றிலிருந்து கத்த, திரை மீண்டும் கருப்பானது.

மீண்டும் திரையில் காட்சி ஓடிய போது உடல் முழுக்க இரத்தத்துடனும்... இன்னும் வெட்டப்படாமல் தொப்புள் கொடியுடனும் இருந்த அந்த சிசுவை தலைகீழாகப் பிடித்து அதன் முதுகில் மருத்துவர் லேசாகத் தட்ட.... அது அழுதது. சுற்றிலும் நின்றவர்கள் சிரித்தனர். மயங்கிய நிலையில் இருந்த அந்தப் பெண்ணைக் காட்டியது கேமரா.

ப்ரியா தொலைக்காட்சிப் பெட்டியை அணைத்தாள்.

"இந்த வீடியோ உன் கைக்கு எப்படி வந்தது....?" திணறினான் நவீன்.

"உன்னோட அமெரிக்க தாய்மாமன் உன்னப்பத்தி என்கிட்ட விசாரிச்சார். இவன் தேவியைப் பழி தீர்க்க ஏதோ திட்டம் தீட்டறான்ங்கறது தெரிஞ்சு அவர் சொன்ன ஐடியாதான் இது. அம்மாங்களோட பிரசவத்தை ஆண் பிள்ளைங்க பார்த்தா... அதற்கப்பறம் பெண்களைப் பார்க்கும் பார்வை மாறும்... ன்னு அவர் தான் சொன்னார். இதை ரெடி பண்ணியபிறகு அவர் தான் என்னை கார்ல் வீடு வரைக்கும் நேற்று விட்டுட்டுப் போனார்.. இப்போதும் என் பாதுகாப்பிற்காக வெளியேதான் இருக்கார்" என்றவள் சற்றே நிறுத்தி புன்னகையுடன் சொன்னாள். "இவன் மாறினானோ இல்லையோ... இனிமேல் நான் எங்கம்மாவை திட்டவே மாட்டேன்..." குரல் தழும்பியது!

நவீன் அந்த அதிர்ச்சியிலிருந்து விடுபடவில்லை. தலை குனிந்தபடி அமர்ந்திருந்தான். "இன்னொரு விஷயம் சொல்லட்டா நவீன்... அந்தக் குழந்தை நீதான்..." என்ற ப்ரியா மெல்ல தன் பாவாடை மற்றும் தாவணியை சரிசெய்து கொண்டாள். தேவியைத் தூக்கி நிறுத்தினாள். தேவி கண்ணீருடன் அவளைக் கைகூப்பி வணங்கினாள்.

"உனக்கு எவ்ளோ விஷயம் தெரிஞ்சிருக்குடி. ஒரு பெண்ணுக்கு படிப்பும் இருக்கணும், தன்னை பாதுகாக்கவும் தெரியணும். நீ தாண்டி உண்மையான தலைவி. என்னை மன்னிச்சுடுடீ ப்ரியா..".

ப்ரியா அவளை அணைத்து கண்ணீரைத் துடைத்தாள். வாசலில் அழைப்புமணி ஒலிக்க....

''ஒரு நிமிஷம்...'' என்றான் நவீன். இருவருடன் சேர்ந்து சுரேசும் திரும்பிப் பார்க்க....

துப்பட்டாவை எடுத்து தேவியிடம் நீட்டினான் நவீன். முதல்முறையாக அவன் கண்களில் கண்ணீர்.!

(முற்றும்)

# வேர்களின் உயிர்

*கவிதைத்தொகுப்பு*

**கோவை ஆனந்தன்**

*பக்கம் 112*
*விலை ரூ 150*
*முதல் பதிப்பு ஜூலை 2023*
**வெளியீடு**
**பொள்ளாச்சி இலக்கிய வட்டம்**




விவசாயக் குடும்பத்தில் பிறந்து விவசாயத்தின் அவசியத்தை உணர்த்தும் தருணங்களை விதைத்துக் தொண்டிருக்கும் கோவை ஆனந்தனின் முதல் கவிதைத் தொகுப்பு.

இலக்கியங்கள் சமூகத்தின் நகர்வை சமூகத்திற்கு படம் பிடித்துக் காட்டும் கண்ணாடி. சமூகம் செல்லும் திசையைக் குறிப்பதிலும் சமூகத்தின் அவலத்தை எடுத்துரைப்பதிலும் உலகின் இயற்கையை, செல்வங்களை, அதிசயங்களை பதிவு செய்வதிலும் இலக்கியத்தின் பங்கு அளப்பரியது.

தான் காணும் காட்சிகளை, சமூகத்தின் அவலங்களை, இன்னும் முடிந்து போகாத கொடுமைகளை மனதிற்குள் படம் பிடித்தபடி வாழும் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் சிறந்த செயல்பாடுகளின் வழியே சமூகத்தை உயர்த்த வேண்டும் என்ற எண்ண அலைகள் எழுந்து அடங்கும்.

இலக்கியத்தை ஆயுதமாகக் கொள்ளும் மனிதர்களோ எழுத்துக்களைத் துணையாகக் கொண்டு எண்ணத்தை வடித்துவிட்டு தன்னைத்தானே இளைப்பாற்றிக் கொள்கின்றனர்.

சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்
உழன்றும் உழவே தலை

என்ற ஐயனின் வாக்கினை இன்றைய தலைமுறையினர் எப்படி தம் வாழ்வோடு பொருத்திப் பார்ப்பர் என்பதை எண்ணுகையில் ஏமாற்றமும் கவலையும் ஒருசேர மனதை வதைக்கின்றன.

நாம் உண்ணும் உணவு எங்கிருந்து வருகிறது என்பதையும் அதை உருவாக்க மனிதன் எவ்விதமான இடர்பாடுகளுக்குள் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறான் என்பதையும் அறியாத தலைமுறையினரிடம் உழவே தலை என்றால் ஒன்றும் விளங்கப் போவதில்லை.

எதிர்கால சந்ததியினர் அறிந்து கொள்ளவாவது இப்படி ஒரு தொழில்

நடைபெற்றது என்பதைப் பதிவு செய்ய வேண்டிய கட்டாயத்தில் காலம் நம்மை இருத்தியுள்ளது. நஞ்சாக மாறிவரும் உணவு வகைகளும் செயற்கை உரங்களால் வளத்தை இழந்து மலடாக மாறிவரும் மண்ணும் நமது உணவுப் பழக்கத்தை அடியோடு மாற்றியமைப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

இயற்கை எப்போதும் தன்னை உயிரினங்கள் சிறப்பாக வாழ தகவமைத்துக் கொண்டும் புதுப்பித்துக் கொண்டும் பணியாற்றுகையில் மனிதனோ தனது பேராசையின் நீளும் நாவினாலும் தீண்டும் கோரக்கரங்களாலும் அதை பலியாக்கி தன்னைத்தானே அழித்துக் கொள்வதில் அகம் மகிழ்கிறான்.

இத்தக சூழலில் உழவின் அவசியத்தை உயர்த்திப் பிடிக்கும் கவிதைகளின் வழி மண்ணின் பெருமூச்சை நமக்குள் கடத்தி விடுகிறது கோவை ஆனந்தனின் வேர்களின் உயிர் கவிதை நூல். உலகத்தில் இயக்கமே வேர்களின் மூச்சில் காத்திருக்கையில் மனிதனின் செயல்களோ விளைநிலங்களை விலைநிலங்கள் ஆக்கி வயல்வெளிகளில் அடுக்ககங்கள் கட்டி கால் வாய்களில் நெடுஞ்சாலைகள் நுழைத்து இயற்கையின் மேனியில் இடுகாடுகளை உருவாக்குகின்றன என்பதை இந்நூல் நமக்கு எச்சரிக்கை செய்யும் அதே வேளையில் இயற்கையைக் காப்பதன் அவசியத்தையும் நமக்குள் புகுத்தி விடுகிறது.

பூச்சிக்கொல்லிகளின் தாக்கத்தால் எறும்புகள் கூட தீண்ட. மறுக்கும் கரும்புதான் நமக்கான உணவாக மாறுகிறது என்பதை உணரத் தொடங்கினால் மனிதன் வேதியுரங்களின் பின்னே பணக்கட்டுகளைப் பதுக்க மாட்டான். வாழும் தலைமுறையினரின் உணர்வுகளில் உழவின் தீவிரம் உணரப்படாத வரை எதிர்கால தலைமுறை எதை உணவாக எடுக்கப் போகிறது என்ற ஆதங்கத்தை நமக்குள் எழுப்பி விடுகிறது இவரின் கவிதைகள்.

பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகள் விவசாயத்தை எவ்விதம் பாதிக்கின்றன என்பதையும் மனிதனின் பேராசைகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் விளைவுகள் எப்படி மழையின்மையை உண்டாக்கி உலகின் ஒட்டுமொத்த கட்டமைப்பையும் சீர்குலைத்து விவசாய நிலங்களை தரிசு நிலங்களாக மாற்றிக் கொண்டிருப்பதையும் இந்த நூல் கோடிட்டுக் காட்டுகிறது

" மரபணு விதைகளால்
விளைந்த அத்தனையிலும்
அடிபட்டுச் சாகிறது
ஆண்மையும் பெண்மையும்."
பக்கம் 30

"பூச்சி மருந்தையும்
இரசாயனங்களையும்
விதைத்திடும் பூமியில்
சுவைத்த கனிகளின்
விதைகளையாவது வீசியிருந்தால்
உயிர்கள் எதுவும்
பசிக்காகக் கையேந்தியிருக்காது"
பக்கம் 31

செயற்கை உரங்கள், மழையின்மை, பருவநிலை மாற்றம், விவசாயத்தால் விளையாத நன்மையினால் விவசாயக் குடும்பங்கள் தொழிலை விட்டு வெளி யேறும் நிலை, மரபணு விதைகள் மூலம் பாரம்பரிய விதைகளுக்கு ஏற்படும் இழப்பு என பல்வேறு காலச்சூழல்கள் விவசாயத்தை எப்படி பாதிக்கின்றன என்பதையும் இந்நூல் கோடிட்டு காட்டுகிறது.

குடும்பமே இணைந்து ஒரு தொழிலில் ஈடுபட்டு கடுமையான முயற்சிகளுக்கு பிறகு உணவை விளைவித்துக் கொடுக்கையில் எந்த விதமான வேலையையும் செய்யாமல் இடைத்தரகர்களாக இருந்து கொண்டு அதற்கு விலை நிர்ணயம் செய்யும் இன்றைய காலகட்டத்தில் உழவனின் உழைப்பு அடியோடு வீணாக்கப்படுவதையும் விலை போகாத நிலையில் அவன் தவித்துப் போவதையும் தக்காளியை தங்கத்தோடு ஒப்பிடும் சூழலிலும் விலையே இல்லாத போது வீதியில் கொட்டப் படும் சூழலிலும் எந்தவிதமான பலனையும் எதிர்பார்க்காமல் இயங்கிக் கொண்டிருக்கும் உழவனின் நிலையை எண்ணிப் பாருங்கள்.

*"தாறுமாறாய் விற்ற தக்காளியாலேயே*
*தாறுமாறாய்ப் போய்விடுகிறது*
*பயிரிட்டவனின் வாழ்க்கையும்*
*வேலியோரங்களில்*
*கூடையோடு வீசும் போதும்"*
*பக்கம் 38*

*"சந்தைகளில் அறுபட்டுக் கிடக்கும்*
*அனாதை செருப்புகளாய்க் கிடக்கிறது*
*விலையிறக்கத்தால்*
*அறுபட்டுத் துடிக்கும்*
*உழவனின் மனம்"*
*பக்கம் 45*

இந்த கவிதையே உழவர்களின் துயரங்களை நமக்குள் உணர்த்திவிடுவதற்கு போதுமானதாகி நிற்கிறது.

*"விவசாய வேலைக்கு*
*ஆட்கள் கிடைக்காத ஊரில்*
*விளைநிலங்கள் எல்லாம்*
*கோடிகளில் பேரம் பேசப்படுகின்றன*
*வரும் சந்ததியின்*
*பசிக்கும் சோர்த்து"*
*பக்கம் 53*

நூலில்காணப்படும்குறுங்கவிதைகளும் அழகியல் தன்மையுடனும் இயற்கையை ரசிப்பதிலும் கவிஞரின் இன்னொரு முகத்தை நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

*" நவீன வரவேற்பறையின்*
*புகைப்படங்களில்*
*இல்லறத்தைத் துறந்த புத்தன்"*

என்ற பக்கம் 90ல் உள்ள குறுங்கவிதை அருமையான கவிதையாக மாறி நமது எண்ணங்களுக்கு வானமமைக்கிறது.

மனிதன் உயிர் வாழ அடிப்படைத் தேவையான உணவை உற்பத்தி செய்யும் உழவனின் அன்றாட நிலைப்பாட்டையும் நமது நாட்டில் உழவன் எவ்விதமான மதிப்பும் மரியாதையும் பெறுகிறான் என்பதையும் கவிதையின் வழியே நமக்குள் சிறப்பாக உணர்த்தி விடுகிறது வேர்களின் மூச்சு. எல்லோரது மனங்களுக்கு உள்ளும் ஓடிக் கொண்டிருக்கும் உயிர்களின் வேர்களை பசுமையாக்குவோம்; உலகத்தின் நகர்தலை சிறப்பாக்குவோம்; அதற்கு உழவின் பின்னே கரம் கோர்ப்போம் என்பதை இந்நூல் ஆசிரியரின் சுவாசத்தோடு நம்மையும் பயணிக்க வைக்கிறது.

**இளையவன் சிவா**
நரசிங்காபுரம்

---

**குழந்தையின் கையில்**
**பெரிய கை பேசி**
**செல்லமே என்றழைத்தும்**
**காதுகள் கேட்கவில்லை**

**கோ.பவித்ரா, காஞ்சிபுரம்**



# மலைக்க வைக்கும் மலேசியா

**பகுதி – 9**

**மருத்துவர்.க.கலைவேந்தன்**

சுற்றுப்பயணிகளின் சொர்க்க பூமியாக லங்காவி தீவுகள் கொண்டாடப் படுகின்றன.

தீபகற்ப மலேசியாவின் வடக்கிழக்கில் உள்ள 104 தீவுகளை உள்ளடக்கியது லங்காவி தீவு. அந்தமான் கடலும் மலாக்கா நீரிணையும் இடத்தில் லங்காவி தீவு அமைந்திருக்கிறது

தீபகற்ப மலேசிய வடக்கிழக்கு கடற்கரையிலிருந்து 30 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

கெடா மாநிலத்தின் ஒரு பகுதியாக கருதப்படுகிறது. தாய்லாந்து எல்லைக்கு அருகில் இருக்கிறது. இந்த தீவுக்கு வரும்போது செல்பேசியில் மலேசியா மற்றும் தாய்லாந்து தொலைதொடர்பு சிக்னல் மாறி மாறி காட்டும்.

லங்காவி என்றால் மலாய் மொழியில் செம்பழுப்பு கழுகு என்று பொருள் படும். மலாய் மொழியில் helang என்றால் கழுகு. இதன் சுருக்கம் "lang", Kawi என்றால் செம்பழுப்பு என்று பொருள். இரு சொற்களையும் சேர்த்து Langkawi என்று அழைக்கப் படுகின்றது.

லங்காவித் தீவிற்கு கெடாவின் பொன் கலன் என்று சிறப்புப் பெயர் உண்டு..

இராமனின் பாதச்சுவடு லங்காவியில் இருப்பதாகச்சொல்கிறார்கள்..

லங்காவி டூட்டி ஃப்ரீ ஜோன் (Duty Free Zone) பொருட்கள் மிக மிக மலிவாகவும், வரிவிலக்கும் கொடுக்கப்படும். குறைந்தது 48 மணி நேரம் லங்காவியில் இருந்தாலே வரிவிலக்கு வாங்கும் பொருட்களுக்கு அளிக்கப்படும்.

12 மீட்டர் உயரபருந்து லங்காவி என்ற பெயருக்கு அடித்தளம்..

ஃபெர்ரி (Ferry) சவாரிதான் மிகவும் ரசிக்கும் மிக அருமையான பயணம்.

இப்படி லங்காவி பற்றி கேள்விப்பட்ட செய்திகள் எப்போது அந்தத் தீவில் கால் வைப்போம் என்ற பரவச உணர்வை ஏற்படுத்தியிருந்தது...

இப்போ மாநகரத்தில் இருந்து பினாங்கு சென்று விட்டு அங்கிருந்து பேருந்து வழியாக லங்காவிற்கு செல்வதற்கான திட்டமிடுதலில் ferry எனப்படும் சிறியவகை கப்பலில் தான் பயணம் செய்யமுடியும் என்பதை அறிந்து அதற்கான முன்பதிவு செய்தோம்... அந்த படகை அடைவதற்காக பினாங்கில் இருந்து புறப்பட்டோம்.. செல்லும் வழியில் சில முக்கியமான தளங்களை பார்வையிட்டு விட்டு படகுத் துறையை சென்று அடைந்தோம்...வழியில் பார்த்த

இடங்களில் பிரசித்தி பெற்ற பாம்புக் கோவிலும் ஒன்று ...அதைப்பற்றி அடுத்த பகுதியில் விரிவாக சொல்கிறேன்...

லங்காவி படகு துறையில் மதிய உணவை அருந்தினோம்.. இந்திய தெருக் களில் உள்ளது போலவே ஒரு சாலையோர கடையில் பல்வேறு விதமான சைவம் மற்றும் அசைவ உணவுப் பொருட்கள் இருந்தன.. தேவையானவற்றை சாப்பிட்டுவிட்டு நாங்கள் செல்லவேண்டிய கப்பலுக்காக காத்திருந்தோம்... சில பரிசோதனைகளுக்கு பின் கப்பலில் பயணத்தை தொடங்கினோம்... மிகச் சிறந்த அந்த கடல் வழியில் லங்காவிற்கு சென்றது என்பது ஒரு மிகச் சிறந்த அனுபவம்.. சுற்றிலும் நீர்நிலைகள் இடையிடையே சிறு சிறு தீவுக் கூட்டங்கள் மரங்கள் பசுமையாக அடர்ந்திருந்த ஏறக்குறைய ஒரு மணி நேர படகு சவாரிக்கு பிறகு லங்காவித்தீவை சென்றடைந்தோம்.. லங்காவின் அந்த பிரம்மாண்டமான கழுகு சிலை எங்களை வரவேற்றது... வரும்பொழுது அதற்கு கீழே புகைப்படம் எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லி லங்காவின் படகுத்துறையில் மீண்டும் தேவையான பரிசோதனை விஷயங்களை காண்பித்து விட்டு ஒவ்வொருவராக உள்ளே சென்றோம்... அங்கு நாங்கள் தங்கும் இடத்திற்கு வாகனம் தயாராக இருந்தது .அந்த இடத்தில் சென்று விட்டு பொருட்களை எல்லாம் வைத்து விட்டு முதல் இடமாக லங்காவில் இருக்கின்ற அருமையான அந்த வெள்ளை மணல் அழகு குலுங்கும் கடற்கரையை சுற்றி பார்க்க ஆர்வமுடன் புறப்பட்டோம்...

1980 களின் தொடக்கத்தில் இந்ததீவைச் சுற்றுலாத்தளமாக மாறி அமைக்க திட்டமிட்டு அதனைச் செவ்வனே செய்து முடித்தவர். தான் ஓய்வு பெற்று விட்டாலும் அதன் எஞ்சிய வேலைகள் சுணக்கம் காணாமல் நடந்த வண்ணமிருக்க முன்னேற்பாடுகள் செய்து விட்டு வெளியேறியவர். மலேசியாவின் நான்காவது பிரதமராக 20 ஆண்டுக்கும் மேலாக இருந்த துன் மகாதிர் (துன் என்பது பேரரசர் வழங்கிய மிகப்பெரிய கௌரவ விருது)

தென்கிழக்காசியாவின் இன்னொரு உல்லாசப் பயணிகள் மையமாக மாறி வருகிறது லங்காவி.

மேல் நாட்டுப்பணக்காரர்கள் சொந்த மாக உல்லாசக்கப்பல்களை வாங்கி கடலில் உல்லாசமாகப் பொழுதைப் போக்குகிறார்கள். அதற்கான இரண்டு துறைமுகங்களை அரசு கட்டிக் கொடுத் திருக்கிறது. குடும்பமாகவோ தனியா கவோ கடலாடி மகிழும் வெளி நாட்டுக் காரர்களின் சொர்க்கபூமி!

மலைத்தொடர்களுக்கு இடையே கேபிள் கார்களை ஓடவிட்டு பிரமிப்பை உண்டாக்கியிருக்கிறார்கள். கடல் திட்டி லிருந்து ஏறக்குறைய 1000 மீட்டர் உயரத்தில், ஒரு மலை உச்சிக்கும் இன்னொரு மலை உச்சிக்கும் இடையே பாலம் கட்டி கடலையும் அதன் அழகையும் ரசிக்க வசதி செய்திருக்கிறார்கள். 1000 மீட்டர் மேலிருந்து பார்த்தால் கால்கள் சில்லிட்டுக்கொள்கிறன. ஒட்டினார்போல கல் மலை சரிந்து கடலை நோக்கி ஓடுகிறது. குளிர்த் தென்றல் இதமாக இருக்கிறது.

லங்காவியில் நிறைய புராண மற்றும் விசித்திர கதைகள் வழங்கப்படுகிறது..

லங்காவித் தீவுக்கு நம் நாட்டு இராமா யணம் போன்ற கதை வழங்கப்படுகிறது..

இளம் மனைவியான. மசூரியின்

கணவர் வெளியூர் சென்றுவிட, அவள் குற்றம் சுமத்தப்பட்டு, எவ்வளவு மன் றாடியும் அக்கிராமத்து சட்டப்படி அக்கிர மமாக, ஊர்க்காரர்கள் மத்தியில் மசூரி மரத்தில் கட்டிப்போட்டு ஈட்டியால் குத்த (அவள் உடலிலிருந்து வெள்ளை ரத்தம் வடிந்ததாம்-தூய்மையானவள் என் நிறுவ) ...

லங்காவிக்கு இனி வரும் ஏழு தலை முறைக்கு விமோசனம் கிடைக்காது என்ற மசூரியின் சாபம்தான் பலித்துவிட்டதாகக் கூறப்படுகிறது. 1970கள் முடிய ஏழு தலைமுறை முடிந்துவிட்டது.

80களில் லங்காவி துரித முன்னெற்றம் காணத்துவங்கி பொன் ஆபரணமாகவும், சொர்க்கபூமியாகவும் திகழ்கிறது..

லங்காவியின் சுற்றிப் பார்க்க நிறைய இடங்கள் உள்ளன..அதைப்பற்றி தெரிந்து கொள்வோம்...

லேஜேண்டா பூங்கா (Taman Legenda). 50 ஏக்கர் நில பரப்புடன் அமைதியான சுற்று சூழல் கொண்டது..

திறந்த வெளி தொல்பொருட்காட்சி நிலையம் (Open Air Museum)-சிறப்பானது..




பூங்கா முழுதும் பூத்து குலுங்கும் பூக்கள், மரங்கள், லங்காவி லெஜெண்ட்ஸ் என்ற பல அரிய மரங்கள், இயற்கை காட்சிகள் எனறு நடக்கும் நடைபாதை முழுதும் அலங்கரித்திருக்கும்.

1989-இல் கலந்துக்கொண்ட எல்லா நாட்டு கொடியும் ஏற்றப்பட்டுள்ள குவாவில் உள்ள சுற்றுலா தளம் CHOGM Park காமன்வெல்த் மீட்டிங்கிற்காக சிறப்பாக வடிவமைக்கப்பட்டது...

பில்லா படத்தில் (அஜித்) ஒரு தொங்கு பாலத்திலிருந்து கீழே இறங்குவாரே, அந்த பாலத்தின் அருமையான காட்சி..

பில்லா பாலம் !!!

காற்று அதிகம் அடித்தால் பாலம் அசையும். பாலத்தில் இருந்து பார்த்தால், கடற்கரை, மலை, தீவுகள், பாதாளம் என்று வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத காட்சி.

லங்காவி மலேசியாவின் மிக அழகிய தீவுக்கூட்டங்களில் ஒன்றாகும், அதன் அழகிய கடற்கரைகள், மலைகள் நிறைந்த பசுமையான இதயப்பகுதி மற்றும் அருகிலுள்ள தீவுகள். நன்கு வளர்ந்த தீவு, தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளுக்குச் செய்ய வேண்டிய பல விஷயங்களை வழங்குகிறது. லங்காவி ஸ்கை பிரிட்ஜ் முதல் புகழ்பெற்ற கழுகு சதுக்கம் வரை, குனுங் ராயா மற்றும் தெலகா துஜு நீர்வீழ்ச்சிகள் வரை மலையேற்றம், கேபிள் கார்களில் ஆடம்பர மடியில் மகிழ்வது வரை, அனைத்து வகையான சுற்றுலாப் பயணிகளும் லங்காவியில் பார்க்க சுவாரஸ்யமான இடங்களைக் காணலாம்.

லங்காவி ஸ்கை பாலம், 125 மீட்டர்

நீளமும் வளைவுமான மனிதனால் உருவாக்கப்பட்ட அற்புதமான பாலமாகும். இது தெலாஜா துஜூ நீர்வீழ்ச்சிகள், பசுமையான மலைகள் மற்றும் லங்காவியைச் சுற்றியுள்ள பல தீவுகளின் அற்புதமான காட்சியை மக்களுக்கு வழங்குகிறது.

கடல் மட்டத்திலிருந்து 700 மீட்டர் உயரத்தில் உள்ள சாகச நடைக்கு மட்டுமின்றி, லங்காவி ஸ்கை பாலம் அதன் முக்கோணதளங்களுக்கும் பெயர்பெற்றது, அங்கு மக்கள் அமர்ந்து ஓய்வெடுக்க மற்றும் பார்வையை அனுபவிக்க வருகிறார்கள். தீவு மற்றும் அதன் சூரிய அஸ்தமனத்தை நீண்ட நேரம் பார்த்து, விடுமுறையைத் தொடங்குவதற்கான சிறந்த வழிகளில் இதுவும் ஒன்றாகும்.

டதரன் லாங் (கழுகு சதுக்கம்)

லங்காவி தீவு அதன் பெயரை கழுகு (மலாய் மொழியில் லாங் என்றால் சிவப்பு-பழுப்பு கழுகு என்று பொருள்) என்பதிலிருந்து வந்ததாக நம்புகிறார்கள். இதைக் கொண்டாடும் வகையில், அந்தக் கழுகின் உயரத்தைக் காட்டிலும் பெரிய சிலை குவாவில் உருவாக்கப்பட்டது. இது 12 மீட்டர் உயரமுள்ள, விமானத்தில் செல்ல தயாராக இருக்கும் லாங்கின் சிலை. ஒரு சிறிய நம்பிக்கை என்னவாக மாறும் என்ற சுத்த மகத்துவத்தில் திளைக்க, உங்கள் பயணத்திட்டம் பட்டியலில் இந்த இடம் இருக்க வேண்டும். ஈகிள் சதுக்கம் குவா ஜெட்டி, தமன் லகெண்டா மற்றும் பல உணவகங்கள் மற்றும் ட்யூட்டி-ஃப்ரீ கடைகள் ஆகியவற்றிலிருந்து 5 நிமிட தூரத்தில் உள்ளது. கழுகுடன், சதுக்கத்தில் சிறிய நீரூற்றுகள், பாலங்கள் மற்றும் மொட்டை மாடிகள் உள்ளன.

மேட் சின்காங் மலையின் உச்சிக்கு 15 நிமிட பயணமாகும், இது கேபிள் காரில் மேற்கொள்ளப்படுகிறது. மழைக்காடுகள், நீர்வீழ்ச்சிகள், தீவுகள் மற்றும் தொலைவில் உள்ள முடிவற்ற கடல் ஆகியவற்றின் வெப்பமண்டலப் பகுதிகளைக் கொண்ட, கீழே உள்ள இயற்கைக் காட்சிகளுடன் இந்த சவாரி உங்களை மயக்கமடையச் செய்யும். மேலே செல்லும் பயணம் இனிமையாக இருக்கும், ஆனால் நீங்கள் ஏறும் போது குளிர்ச்சியாக இருக்கலாம், எனவே எப்போதும் சூடான ஆடைகளை கையில் வைத்திருப்பது நல்லது.



உச்சியில், சுற்றுலாப் பயணிகள் காட்சியை ரசிக்க விரும்புகிறார்கள், உச்சியின் உச்சியில் அமர்ந்து சூரியன் தனது பயணத்தைக் குறிக்கிறார்கள்; அல்லது உள்ளூர் விற்பனையாளர்களிடம் சாப்பிடலாம்.

நீருக்கடியில் உலகம் மற்றும் வனவிலங்கு பூங்கா நீருக்கடியில் உலகம் மற்றும் வனவிலங்கு பூங்கா:

கடல் பிரியர்களுக்கு, இந்த பயணம் செல்லத்தக்கது. அண்டர்வாட்டர்வேர்ல்ட் லங்காவி 500 க்கும் மேற்பட்ட கடல் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களை வழங்குகிறது. சில ஃபிளமிங்கோக்கள் மற்றும் மாண்டரின் வாத்துகளுடன் கடல் குதிரைகள், ராக்ஹாப்பர் பெங்குவின் மற்றும் முத்திரைகள் ஆகியவற்றை நீங்கள்

காணலாம். கடலுடன் ஒன்றினை உணர நீருக்கடியில் சுரங்கப்பாதை வழியாக ஒரு நடையும் உள்ளது; ஆமைகள் மற்றும் சுறாக்கள் உங்கள் தலைக்கு மேல் ஒரு வளைவில் நீந்துகின்றன. மேலும் என்னவென்றால், இது லங்காவி சர்வதேச விமான நிலையத்திலிருந்து 15 நிமிட பயணத்தில் உள்ளது, இது நீங்கள் வீட்டிற்கு திரும்பும் வழியில் ஒரு டிராப்-பை ஆகும்.

விலங்கு பிரியர்களுக்கு, லங்காவி வனவிலங்கு பூங்கா & பறவை பாரடைஸ் செல்ல வேண்டிய இடமாகும். கேனரிகள், ஆந்தைகள் மற்றும் கிளிகள் போன்ற 2,500 அயல்நாட்டுப் பறவைகளுடன், பூங்காவில் ஒரு நடைபறக்கும் பறவைக்கூடம் உள்ளது. பறவைகள் இங்கு சுதந்திரமாக நடமாடுகின்றன, நீங்கள் அவர்களுடன் பழகலாம்.

குனுங் ராயா வரை மலையேற்றம்

லங்காவியின் மிக உயரமான சிகரமான குணுங் ராயா, மாட் ராயா என்ற ராட்சசனால் சபிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இது பறக்கும் நரிகள், இலை குரங்குகள், அணில் மற்றும் ஹார்ன்பில்ஸ் ஆகியவற்றின் தொகுப்பாக உள்ளது மற்றும் தீவின் மிக அற்புதமான காட்சிகளை வழங்குகிறது. இந்த மலைக்கு மலையேற்றம் ஒரு சவாலாக உள்ளது, ஆனால் அங்கு சென்றவுடன், முயற்சி மதிப்புக்குரியதாகிறது.

புலாவ் பயார் கடல் பூங்கா

இது பிரதான தீவில் இருந்து 30 கிமீ தெற்கே அமைந்துள்ள ஒரு கடல் பூங்கா ஆகும், இது விதிவிலக்கான ஸ்நோர்கெலிங் மற்றும் டைவிங் விளையாட்டுகளுக்கு பெயர் பெற்றது. அற்புதமான வண்ண பவளப்பாறைகள் நிறைந்த பவளத் தோட்டத்தையும் இது பெருமையாகக் கொண்டுள்ளது. இந்த பூங்காவில் மீன் பிடிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது மற்றும் இங்கு ஆய்வு செய்வதற்கு தண்ணீருக்குள் செல்வதற்கு முன் அதிகாரிகளின் அனுமதி தேவை. நீங்களே ஒரு டூர் பேக்கேஜையும் முன்பதிவு செய்யலாம் (பொதுவாக ஸ்நோர்கெல்லிங் கியர், மதிய உணவு மற்றும் குடிக்கக்கூடிய தண்ணீர் உட்பட).

பாரடைஸில் உள்ள லங்காவி கலை 3ம் அருங்காட்சியகம்:

ஓவியங்கள் இங்கே உயிருடன் இருப்பதைப் பாருங்கள். இது மலேசியாவின் மிகப்பெரிய கலை அருங்காட்சியகம் மற்றும் 9 ஊடாடும் மண்டலங்களை உள்ளடக்கியது (அதாவது மாயை, நீர்வாழ், சஃபாரி, கற்பனை, கோட்டைகள், எகிப்தியன், மலேசியன் போன்றவை). லங்காவி கேபிள் காருக்குப் பக்கத்தில் இருப்பதால் இந்த இடத்தை நீங்கள் எளிதாகக் கண்டுபிடிக்கலாம்

தமன் லகெண்டா லங்காவி

இது குவா ஜெட்டிக்கு அருகில் உள்ளது மற்றும் இது ஒரு நாட்டுப்புற பூங்காவாகும், இது மிகவும் தனித்துவமான கருத்தாகும். பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் இதை நடந்தே ஆராய்கின்றனர், ஆனால் தரமற்ற வாகனங்களும் வாடகைக்கு கிடைக்கின்றன. 17 அழகான கட்டமைப்புகள் உள்ளன, ஒவ்வொன்றும் அதன் சொந்த நாட்டுப்புறக் கதைகளுடன் உள்ளன. குகைகளின் ராட்சதர்கள் முதல் புராணப் பறவைகள் வரை, வீரம் மிக்க இளவரசிகள் வரை அனைத்தையும் இங்கே பார்க்கலாம். இங்குள்ள நுழைவு மற்ற சுற்றுலாத் தலங்களைப் போல

விலை உயர்ந்ததல்ல. இந்த பூங்காவைச் சுற்றியுள்ள தோட்டங்களில் உங்கள் குடும்பத்தை சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லலாம்.

தெலகா துஜு நீர்வீழ்ச்சிகள்

கட்டுக்கதைகளை நம்புவதாக இருந்தால், இந்த இயற்கை எழில் கொஞ்சும் இடம் தேவதைகளின் உறைவிடம். அதைச் சுற்றியிருக்கும் நாட்டுப்புறப் பிரமிப்பினால் கவரப்பட்ட இந்த நீர்வீழ்ச்சியே ஒரு இயற்கை அற்புதம், அதாவது ஏழு கிணறுகள் என்று பொருள் படும், ஏனெனில் இந்த நீர்வீழ்ச்சியானது ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட ஏழு குளங்களைத் தொடர்கிறது. சுற்றுலாப் பயணிகள் நிதானமான நீராடலுடன், அந்த இடத்தின் இயற்கைக்காட்சி மற்றும் குளிர்ச்சியை அனுபவிக்கின்றனர். அருவியின் உச்சி வரை சாகசப் பயணம்.

Skytrail ஜங்கிள் ட்ரெக்கிங்

லங்காவியில் இருக்கும்போது, Skytrail ஜங்கிள் ட்ரெக்கிங்கில் ஈடுபடுங்கள். சாகச ஆர்வலர்கள், விளையாட்டு ஆர்வலர்கள் மற்றும் இயற்கை ஆர்வலர்கள் இந்த சிலிர்ப்பின் ஒவ்வொரு நிமிடத்தையும் அனுபவிக்கிறார்கள். 500 வருடங்கள் பழமையான ஒரு காடு வழியாக மலையேற்றம், மற்றும் மிகவும் அழகான மிகவும் கவர்ச்சியான தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் வழியாக உங்களை அழைத்துச் செல்கிறது. நீங்கள் 1500 க்கும் மேற்பட்ட வகையான தாவரங்கள், மூலிகைகள் மற்றும் மருத்துவ புதர்களைப் பார்ப்பீர்கள். எனவே இது மிகவும் கல்வியானது, இந்த மலையேற்றம். இந்த மலையேற்றத்தை முடிக்க உங்களுக்கு நடுத்தர அளவிலான சகிப்புத்தன்மை மட்டுமே தேவை, வயது தடை இல்லை.

தஞ்சங் ரு கடற்கரை

லங்காவி தீவில் உள்ள கடற்கரை ஏராளமாக தஞ்சோங் ரு கடற்கரையுடன் தொடங்குகிறது! இது மிகவும் பிரபலமான உள்ளூர் மற்றும் சுற்றுலாத் தளமாகும், இது தூள் மணல் மற்றும் பளபளக்கும் படிக-நீருக்காக அறியப்படுகிறது. நீங்கள் ஒரு புத்தகத்துடன் ஓய்வெடுக்கலாம், உங்கள் குடும்பத்துடன் சுற்றுலா செல்லலாம், குழந்தைகளுடன் மணல் கோட்டைகளை உருவாக்கலாம் அல்லது கடலில் உங்கள் கால்களை நனைக்கலாம். சுற்றிப் பார்ப்பதற்கும் புகைப்படம் எடுப்பதற்கும், இந்த கடற்கரையின் சீம்களில் உள்ள சுண்ணாம்புக் கற்களைப் பாருங்கள். பசியின்மை ஏற்படும் போது - அருகிலேயே அற்புதமான கஃபேக்கள் மற்றும் குடில்கள் உள்ளன!

முதலை அட்வென்ச்சர்லேண்ட்

முதலைகளின் இயற்கையான வாழ்விடத்தில் உள்ள வகைகளை நீங்கள் ஆராய விரும்பினால், முதலை அட்வென்ச்சர் லேண்ட் பூங்கா மிகவும் பொருத்தமானது. கினியாமுதலைமுதல்சியாமிஸ்முதல்உப்பு நீர் வரை பல்வேறு வகையான இனங்கள் இங்கு காணப்படுகின்றன. அவர்களில் 4000 க்கும் மேற்பட்டோர் பூங்காவில் வசிக்கின்றனர். நீங்கள் சூரிய ஒளியில் அவர்கள் ஓய்வறையைப் பார்க்கலாம், நிபுணர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட ஊடாடும் செயல்பாடுகளின் மூலம் உட்கார்ந்து, அவர்கள் வைக்கும் 'ஹார்ட் ஸ்டாப்பிங்' நிகழ்ச்சியின் அற்புதத்தை அனுபவிக்கலாம்.

லங்காவி வனவிலங்கு பூங்கா & பறவைகள் சொர்க்கம் : லங்காவியில் பார்க்க வேண்டிய சுற்றுலா இடங்கள் புகைப்படம் : thrillophilia.com

லங்காவி வனவிலங்கு பூங்கா & பறவை சொர்க்கம் பறவைகள் மற்றும் இயற்கை ஆர்வலர்களுக்கு சிறந்தது. நீங்கள் அரிய மற்றும் பழங்குடி பறவைகளை பார்க்க முடியும், அவர்களின் அன்றாட வாழ்க்கை, முறைகள், பழக்கவழக்கங்கள் மற்றும் உணவளிக்கும் நிகழ்ச்சியை அனுபவிக்கவும், அத்துடன் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும். இந்தச் சிறப்பம் சங்கள் மற்றும் பலவற்றின் மூலம் உங்களை மகிழ்ச்சியுடன் அழைத்துச் செல்லும் வழிகாட்டிகள் பூங்காவில் உள்ளன.

பாண்டாய் செனாங் கடற்கரை

இப்பகுதியில் மிகவும் பரபரப்பான ஒன்று பாண்டாய் செனாங் கடற்கரை. இந்த கடற்கரையின் கரையோரத்தில் பல ரெஸ்ட்ரோ பார்கள், கஃபேக்கள் மற்றும் பார்ட்டி ஹான்ட்கள் உள்ளன, இது சுற்றுலாப் பயணிகளிடையே மிகவும் பிரபலமாக உள்ளது. மேலும், இது முக்கிய விமான நிலையம் மற்றும் ஹோட்டல்களில் இருந்து வெறும் 10 நிமிட பயண தூரத்தில் உள்ளது, இது கைக்கு எட்டும் தூரத்தில் உள்ளது. இருப்பினும், அரிசி தோட்ட அருங்காட்சியகம், கிகி கிளப் மற்றும் அண்டர்வாட்டர் வேர்ல்ட் ஆகியவற்றுடன் குழந்தை நட்புடன் இருப்பதால் உங்கள் குடும்பங்களை இங்கு அழைத்துச் செல்லலாம். இல்லையெனில், நீங்கள் ஜெட் ஸ்கீயிங், நீச்சல், பாராசெயிலிங் மற்றும் பிற நீர் விளையாட்டுகளை அனுபவிக்க முடியும்.

பாண்டாய் கோக் கடற்கரை

லங்காவியில் பார்க்க வேண்டிய மற்றொரு கடற்கரை பாண்டாய் கோக் கடற்கரை. இது மெதுவாக பிரபலமடைந்து வருகிறது, நீச்சலுக்கான அற்புதமான நீர் மற்றும் விரிகுடா பகுதியைச் சுற்றியுள்ள அழகான சுண்ணாம்பு மலைகள். கடற்கரைக்குப் பின்னால் உள்ள அடர்ந்த காடு மற்றும் அருகிலுள்ள தெலகா ஹார்பர் பூங்காவின் அழகிய பின்னணியை நீங்கள் ரசிக்கலாம், மேலும் அதிக கூட்டம் இல்லாமல் அமைதியான இடத்தில் திளைக்கலாம்.

டேடாய் பே

ஒரு அரை நிலவு போன்ற வடிவில், Datai Bay ஒரு தனியார் சிறிய பீச் சொர்க்கம், அழகிய வெள்ளை மணல் மற்றும் வளைந்த கடற்கரையோரங்கள். இரண்டு ஆடம்பர ஹோட்டல்கள் மற்றும் கஃபேக்கள் இந்த தனியார் கடற்கரையைப் பகிர்ந்து கொள்கின்றன, அவற்றின் புரவலர்களுக்கு மட்டுமே நுழைய அனுமதிக்கின்றன. அதாவது, கடற்கரை சுத்தமாகவும், சிறந்த நிலையில் உள்ளது. நீங்கள் ஹோட்டல்களில் தங்கவில்லை என்றால், இந்த கடற்கரையில் உள்ள ஒரு ஓட்டலுக்குச் சென்று வளைகுடாவில் உலா சென்று மகிழலாம். அல்லது வெள்ளை மணலில் படுத்து, சுவையான உணவுக்குப் பிறகு சூரியக் குளியல் செய்யவும்.

மாங்குரோவ் சஃபாரி

லங்காவி, ஒரு தீவுப் புகலிடமானது, அதன் விரிகுடாவில் உள்ள சதுப்புநிலங்களின் முட்களுக்குப் பெயர் பெற்றது. தீவின் வடகிழக்கு விளிம்பில் அமைந்துள்ள Kilim Karst Geoforest Park ஐப் பார்வையிடவும். பசுமையான காடுகள், மணல் நிறைந்த கடற்கரைகள் மற்றும் சதுப்புநில சதுப்பு நிலங்கள் உள்ளன - இவை அனைத்தும் இந்த சஃபாரியில் ஆய்வுக்காக திறக்கப்பட்டுள்ளன. புலம் பெயர்ந்த பருவத்தில், மானிட்டர் பல்லி கள் முதல் காத்தாடி கழுகுகள், கிங்ஃபிஷர்கள் மற்றும் வெள்ளை-வயிற்று

மீன் கழுகுகள் வரை இந்த மரங்களில் வெளிநாட்டு பறவைகளின் கூட்டங்கள் மற்றும் மந்தைகளை நீங்கள் காணலாம். இந்த அதிசயத்திற்கு செப்டம்பர் மற்றும் மார்ச் மாதங்களுக்கு இடையில் வருகை தரவும்.

ஏர் ஹங்காட் கிராமம்:

லங்காவியில் உள்ள நவீன மற்றும் பாரம்பரிய அதிசயங்களை நீங்கள் ஆராய விரும்பினால், ஏர் ஹங்காட் கிராமத்தைப் பார்வையிடவும். வெந்நீர் ஊற்றுகள், உப்பு நீர் கிணறுகள், ஜக்குஸிகள் மற்றும் குளங்கள்... இது இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட அதிசயங்களின் கலவையாகும். உங்கள் பொழுதுபோக்குக்காக ஏராளமான கலாச்சார நிகழ்ச்சிகள், கடைகள், தோட்டங்கள் மற்றும் சந்தைகள் திறக்கப்பட்டுள்ளன. வீட்டிற்குத் திரும்புவதற்கு முன், உள் நாட்டில் தயாரிக்கப்பட்ட நினைவுப் பொருட்களையும் நீங்கள் எடுக்கலாம்.

லங்காவி அதன் மயக்கும் கடற்கரைக்கு பெயர் பெற்றது மற்றும் அதன் கடற்கரைகள் மலேசியாவில் சில சிறந்தவை. பாண்டாய் செனாங், பந்தாய் தெங்கா, பந்தாய் கோக், தஞ்சூங் ரு முதலியன மிகவும் பிரபலமானவை. லங்காவியில் கடற்கரையோர உணவகங்கள், ஏராளமான கடைகள், நீர் விளையாட்டு வசதிகள் மற்றும் சிறந்த இரவு வாழ்க்கை ஆகியவற்றைக் கொண்ட பாண்டாய் செனாங் மிகவும் பிரபலமான ஒன்றாகும். வெள்ளை மணல் மற்றும் டர்க்கைஸ் நீல நீர் இந்த நவநாகரீக கடற்கரைக்கு அழகை சேர்க்கிறது, இது லங்காவியில் சிறந்ததாக அமைகிறது. கடற்கரைக்குச் செல்லும் சாலை உணவுப் பிரியர்களின் மற்றும் கடைக்காரர்களின் சொர்க்கமாகும். பாண்டாய் செனாங்கில்



சூரிய அஸ்தமனம் வண்ணங்களின் தெறிப்பு மற்றும் பார்ப்பதற்கு ஒரு முழுமையான மகிழ்ச்சி. இந்த கடற்கரையை ஒட்டியுள்ள பாண்டாய் தெங்கா, அதிக ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களைக் கொண்ட அமைதியான கடற்கரையாகும். சில கிலோமீட்டர் தொலைவில் உள்ள பனாடை கோக், நீல நிற நீருடன் செல்ல பச்சை நிற பின்னணியுடன் மிகவும் அழகாக இருக்கும். பின்னால் உள்ள மலைகள் அதிக காடுகள் மற்றும் ஏராளமான சுண்ணாம்பு குகைகள் உள்ளன. இது சுற்றுலாப் பயணிகளால் மிகவும் குறைவாகப் பார்வையிடப்பட்ட கடற்கரைகளில் ஒன்றாகும், மேலும் இது மிகவும் அமைதியான ஒன்றாகும். இருப்பினும், இது பல உணவு மற்றும் தங்குமிட விருப்பங்களை வழங்குகிறது. வடக்கு கடற்கரையில் உள்ள தஞ்சோங் ரு ஒரு அழகிய கடற்கரையாகும், இது மெல்லிய மணல்களுடன் கூடிய அழகிய கடற்கரையாகும்.

லங்காவியின் அழகையும், அற்புதமான அனுபவங்களையும் பற்றி இன்னும் நிறைய சொல்கிறேன்...

தொடரும்...

# குழந்தைகளின் உளவியல்



## Dr ஜலீலா முஸம்மில்
ஆதார வைத்தியசாலை, ஏறாவூர்.

குழந்தைச் செல்வங்கள் அனைவரும் நம் எதிர்காலத் தூண்களாவார்கள். அவர்கள் அரிய பொக்கிஷமாகப் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். குழந்தைகள் என்றாலே நம் மனதிலே சந்தோஷப் பூக்களைப் பூக்கச் செய்பவர்கள் என்றே சொல்லலாம். எமது பெயரைச் சொல்வதற்கும் வம்சத்தைக் கட்டிக் காப்பதற்கும் வந்தவர்கள். அவர்களின் சிரிப்பிலே சொர்க்கத்தைக் காணலாம். அவர்களது பேச்சுக்கு நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் சக்தி உண்டு. உங்கள் குழந்தைச் செல்வங்கள் உங்களுக்கான அலங்காரங்கள் என்று அல்-குர்ஆனிலே அல்லாஹு¬தஆலா மிக அழகாக எடுத்தியம்பியுள்ளான். இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள். எதிர்கால உலகின் தலைவர்களாகவும் நாட்டைப் பாதுகாக்கும் வல்லவர்களாகவும் இருப்பவர்கள் சிறுவர்கள் தான். 'இளமையிற்கல்வி சிலையில் எழுத்து' என்பது போல

சிறுவயதில் கற்கின்ற கல்வி, அவர்கள் வாழுகின்ற சூழல் அவர்களது வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவிடுகிறது என்பது முற்றிலும் உண்மை.

சிறுபராயம் என்பது இனிமையான ஒரு காலப் பகுதி, பெரியவர்களாகிய நாம் அனைவரும் கடந்து வந்தக் காலப்பகுதி. இதில் மகிழ்ச்சியை அடையாதவர்கள், சிறுபராய நினைவுகளை இரைமீட்டி இனிமையை அனுபவிக்காதவர்கள் எவரும் இல்லை எனலாம்.

உலகில் வாழ்கின்ற மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் சிறுவர்களாகக் காணப்படுகின்றனர். சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும், மதிக்கப்பட வேண்டும், அவர்களுடையக் கருத்துகளுக்குச் செவிசாய்க்க வேண்டும் என்று சர்வதேச அளவில் சிறுவர்களுக்கென்று ஒரு தினமே கொண்டாடப்படுகிறது. 'தாய் சேய் நலன்' திட்டங்கள், சிறுவர் பூங்கா, சிறுவர் விளையாட்டுக்கள், போட்டிகள், சிறுவர் தினங்கள் என்று இன்னும் ஏராளமான சிறுவர்களுக்கான திட்டங்களை அரசாங்கம் எடுத்துச் செயற்படுத்துவதன் நோக்கம்; வளரும் தலைமுறையினரை வளமான, செழிப்பான, ஆரோக்கியமான, நல்ல சமூகப் பிரஜைகளாக உருவாக்க வேண்டும் என்பதேயாகும்.

சிறுவர்கள் ஒரு நாட்டினதும் ஒரு சமுதாயத்தினதும் அச்சாணியாக இருப்பவர்கள் என்பது நாம் அறிந்த விடயம். நாட்டின் முதுகெலும்பாகச் செயற்பட இருப்பவர்கள் இவர்கள்தான். இவர்கள் அனைவரும் பாதுகாக்கப்பட்டு நல்வழிப் படுத்தப்படுவார்களேயானால் அந்த நாடு, அந்தச் சமூகம் தலை நிமிர்ந்து நிற்கும்

என்பதில் சந்தேகமே இல்லை.

சிறுவர்களின் உளவியல் எனப்படுவது உளவியல் துறையில் ஒரு தனிப்பாகமாகும். இது சிறுவர்களின் மனதையும் குணாதிசயங்களையும் கர்ப்ப காலம் முதல் அவர்கள் பெரியவர்களாகும் வரைக்கும் அலசப்படும் ஒரு விடயமாக இருக்கிறது. சிறுவர்களது உளவியலில் அவர்களது உடல் வளர்ச்சி மட்டுமல்லாது மனநல வளர்ச்சி சம்பந்தமாகவும் உணர்வு ரீதியான வளர்ச்சி சம்பந்தமாகவும் சமூக ரீதியான வளர்ச்சி சம்பந்தமாகவும் அலசி ஆராயப்படுகிறது.

குழந்தை உளவியல் என்பது குழந்தையின் ஆழ்ந்த உணர்வு (சப் கான்ஸியஸ்) மற்றும் உணர்வு (கான்ஸியஸ்) நிலை வளர்ச்சியுடன் சம்மந்தப்பட்ட ஆய்வாகும். குழந்தை உளவியலாளர்கள் ஒவ்வொரு குழந்தையும் தங்களது பெற்றோருடன், தங்களுடன், மற்றும் உலகத்துடன் எவ்வாறு தொடர்பு கொள்கிறார்கள் என்பதைக் கவனித்து, அவர்களின் மன வளர்ச்சியைப் புரிந்து கொள்கிறார்கள்.

நாம் ஒவ்வொருவரும் தனித்துவம் மிக்கவர்கள். அந்தத் தனித்துவத்தைக் குழந்தைகளிடமும் பார்க்கிறோம். இருந்தும் குழந்தைகள் செய்வது அவர்களின் வயதுக்கு உரியனவா அல்லது அப்பாற்பட்டனவா, கவனிக்கப்படக் கூடியனவா? என்ற கேள்வி எழலாம். அதற்காகக் குழந்தைகளின் உளவியலைச் சற்று அறிந்து கொள்ளுதல் நலம்.

எவை சாதாரணமானவை, எவை அசாதாரணமானவை என்ற புரிதல் குழந்தை உளவியலில் மிகவும் அவசியமாகும். எவையெல்லாம் சாதாரணமானவை எவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு வர வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ளக் குழந்தை உளவியல் உதவி செய்யும்.

உலகம் முழுவதும் பன்னிரெண்டு (12) வயதிற்கு உட்பட்டவர்கள் சிறுவர்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளனர். அதுபோலவே, நாமும் நமது பிள்ளைகளில் அதிக அக்கறை செலுத்துவது நமது கடமையாகும். சிறுவர்களுக்கு அன்பு, பாதுகாப்பு, அக்கறை என்பவற்றை வழங்குவதோடு அவர்களுடையத் திறமைகளை வெளிக்காட்டவும் வாய்ப்புகளை வழங்குதல் வேண்டும் என மனித உரிமைகள் ஆணையம் வலியுறுத்திக் கூறுகின்றது. அதை நாம் நன்கு அறிவோம். ஆனால் உளவியல் குழந்தைப் பருவத்தை எவ்வாறு ஆராய்ச்சி செய்துள்ளது, அவர்களைப் பற்றியத் தரவுகள் என்ன விடயங்களைச் சொல்கின்றது? என்பதைப் பற்றிக்கட்டாயம்ஒவ்வொருபெற்றோரும் அக்கறையுடன் கற்றுக் கொள்வதன் மூலம் திறமைமிக்க, ஆளுமையுள்ள, நுண்ணறிவாற்றலுள்ள திறன்களைக் கொண்ட, நற்சிந்தனையாற்றல் மிக்க, பலமிக்க, அன்பான நாட்டையும் உருவாக்குவதோடு மற்றவர்களையும் நேசிக்கக்கூடிய, உதவக் கூடிய, ஒழுக்க விழுமியங்களைப் பேணக்கூடிய சிறந்த நாளையப் பிரஜைகளாகவும் இன்றைய நமது குழந்தைகளை மாற்றலாம் என்பதில் சந்தேகமில்லை.

உளவியல் அறிஞர்களின் கருத்துப்படி சிறுவர்கள் என்பது கருவுற்ற நாட்கள் தொடக்கம் 11 வயதுவரைக் காலமாகும். இக்காலப் பகுதியில் குழந்தைகளின் வளர்ச்சியிலும் முதிர்ச்சியிலும் ஏற்படும் ஒழுங்கு முறைகளைப் பற்றி அறிவதுதான் குழந்தைகளின் உளவியலாகும். தாய் கருவுற்றதில் இருந்து அத்தாய் அக்குழந்தை மீது அக்கறையும் அன்பும் செலுத்த

வேண்டும். ஏன் என்றால் கர்ப்பக் காலத்திலிருந்தே குழந்தையின் உடல், உள வளர்ச்சியில் அக்கறை எடுக்கும் போது குழந்தையின் ஆரம்பக் கட்டம் சிறப்பானதாக அமையும். அவ்வாறு அமைத்துக் கொடுப்பது தாயின் கடமை யாகும்.

எல்லோரும் தங்கள் குழந்தை ஆரோக்கிய மான வளர்ச்சியைக் கொண்டிருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள், ஆனால் ஒரு குழந்தையின் நடத்தை வளர்ச்சி என்பது ஒரு சாதாரண கட்டத்தின் அறிகுறியா அல்லது அசாதாரணத்தின் அறிகுறியா என்பது எப்போதும் தெளிவாகத் தெரிவது இல்லை. குழந்தை உளவியலாளர்கள் இந்த வித்தியாசத்தைப் புரிந்து கொள்ள உங்களுக்கு உதவலாம். ஒரு குழந்தையின் இயல்பான மற்றும் அசாதாரண உளவியல் முறைகளைப் புரிந்துகொள்வது, பெற்றோர்கள் தங்கள் குழந்தையுடன் எவ்வாறு சிறந்த முறையில் தொடர்புகொள்வது மற்றும் இணைப்பது என்பதைப் புரிந்துகொள்வது, உணர்ச்சிகளை நிர்வகிப்பது, குழந்தைகளைச் சமாளிக்கும் வழிமுறைகளைக் கற்பித்தல் மற்றும் ஒவ் வொரு புதிய வளர்ச்சிக் கட்டத்திலும் தங்கள் குழந்தை முன்னேறவும் வளரவும் உறுதுணையாக இருக்கிறது.

குழந்தை உளவியலாளர்கள் அசாதா ரண நடத்தைகளை முன்கூட்டியே அடையாளம் காணுவர். கற்றல் பிரச்சி னைகள், அதி வேகத்தன்மை அல்லது பதட்டம் போன்ற பொதுவான நடத்தைச் சிக்கல்களின் மூலத்தைக் கண்டறிய உதவு வர். வளர்ச்சித் தாமதங்கள் அல்லது மன இறுக்கம் போன்ற அசாதாரணங்களைத் தடுக்க, மதிப்பீடு செய்ய மற்றும் கண்டறியவும் அவை உதவக்கூடும்.

குழந்தையின் ஆரோக்கியத்திற்கு உணவு முக்கியத்துவம் பெறுவதால் சத்து உணவு, கீரை வகைகள், பழங்கள், காய்கறிகள், பழக் கலவைப் போன்றவற்றைத் தினமும் உணவில் சேர்ப்பது அவசியமாகும். குழந்தையின் ஆரோக்கியத்திற்கு உணவு முக்கியத்துவம் கொடுப்பது போலக் குழந்தையின் உள்ளத்திற்கும் உணர்வு களுக்கும் முக்கியத்துவம் அளிக்கக்கூடிய நல்ல நூல்களை வாசித்தல், அறிவூட்டும் சிறந்த விடயங்களைப் பேசுதல், கற்றல் நல்ல தியானங்களில் ஈடுபடுவது, உங்களுடைய மத வழிபாடுகளில் நேரத்தினைச் செல விடுவது, காலை நேரங்களில் குறைந்தது முப்பது நிமிடங்கள் வரைக் கடற்கரை யோரமாய் நடந்து செல்வது, அவ்வாறு கடல் இல்லாத பிரதேசங்களில் வசிப்பவர்கள் சுத்தமானக் காற்று வீசக்கூடிய மரங்கள் உள்ள இடங்களில் நடைப்பயிற்சி செய்வதும் சிறந்தது. இவை போன்றச் செயற்பாடுகள் தாயினதும் சேயினதும் நல்ல ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும்.

குழந்தையின் செவிப்புலனானது நான்கு மாதங்களில் நன்றாகக் கேட்கும் சக்தியைப் பெற்றுக்கொள்கின்றது. இதன்காரணமாகத் தாயின் சூழ்நிலையில் பேசப்படுகின்ற விடயங்களைத் துல்லியமாக அக்குழந்தை உள்வாங்குகின்றது. இத்திறனை இறை வன் குழந்தைக்கு வழங்கியுள்ளான். ஆகவேதான் அக்குழந்தையின் தந்தைக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் ஒரு நாளைக்குக் குறைந்தது ஒரு தடவையாவது கதைப்பது சிறந்தது. அவ்வாறு கதைப்ப தானது தந்தைக்கும் குழந்தைக்கு மான இறுக்கமானப் பாசப் பிணைப்பினை அதிகரிக்கும். அது மாத்திரமன்றிக் கருவிலி ருக்கும் குழந்தையானது தன்னுடன் தனது தந்தை அன்பும் அக்கறையும் கொண்டுள்ளார் என்று மகிழ்ச்சியடையும். ஒரு தாய் அழுவதாக இருந்தால் அக்குழந்தையும் அழும். அத்தாய் சிரித்தால் அக்குழந்தையும் சிரிக்கும். எனவே தாய் இதனை நன்கு உணர்ந்து கொள்ள

வேண்டும். எனவே சிரிப்பதன் மூலமும் மகிழ்ச்சியான வார்த்தைகளைப் பேசுவதன் மூலமும் மனதைச் சந்தோஷமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

துக்கங்கள், அழுகைகள், கவலைகள் என்று உடலையும் உள்ளத்தையும் வருத்திக் கொள்ளாமலும் தேவையற்ற சிந்தனைகளில் உள்ளத்தை மூழ்கடிக்கா மலும் மனதை அமைதியாக வைத்துக் கொள்வது தாய் சேய் நலத்திற்குச் சிறந்தது என்ற வைத்தியர்களின் கூற்றினை விஞ்ஞானிகள் உண்மையென்று உறுதிப் படுத்தியுள்ளார்கள்.

பிறந்த குழந்தையின் வளர்ச்சியானது எவ்வாறு உயரத்திலும் பருமனிலும் வளர்கின்றதோ அதுபோன்றே தனது அனுபவத்திலும் அக்குழந்தை வளர்ச்சி யடைகின்றது. குழந்தையின் வளர்ச்சி யானது ஒரு சுறுசுறுப்பான இயக்கச் செயல் பாடாகும். அது போலவே, குழந்தையின் வளர்ச்சியானது ஒரு தொடர் செயல்முறைப் படிமுறையாக மெதுவாக நிகழ்கின்றது. நாம் குழந்தைகளை எவ்வாறு சிறந்த முறையில் வழிநடாத்துகிறோமோ அந்த அளவிற்குத்தான் அவர்கள் சமூகத்தில் பயனுள்ளவர்களாக மாறுவார்கள். பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தை யும் இயற்கையில் நல்ல தூய்மையானக் குணங்களுடையதாகத்தான் பிறக்கின்றன. ஆனால் அக்குழந்தைகளின் பெற்றோர்கள், குடும்பங்கள், குடும்ப சூழ்நிலைகள் காரண மாகவே குழந்தைகளின் தூய்மையான செயல்கள் மாற்றமடையக்கூடிய நிலைமைக்கு மாறுகின்றன.

'பிறக்கும் குழந்தைகள்
யாவரும் நல்லோர் ஆவார்
பின்னாளில் ஆளாவது
பெற்றோரின் கைகளிலே'

என்ற பாடல் வரிகளிலே அந்தக் கருத்தைக் காணலாம்.

உளவியலாளர்கள், அறிஞர்களின் கருத்துப்படி "குழந்தை உளவியளானது வளர்ச்சி நிலையும் முதிர்ச்சி நிலையும் தனியாள் வளர்ச்சியில் சூழ்நிலையில் ஆதிக்கம் செலுத்தும் குழந்தைகளுக்கும் பிற உறுப்பினர்கள் சமூகத்திற்கும் இடையே இடைவெளிகளை ஆராய்கின்றது" எனக் கூறுகின்றனர். குழந்தையின் ஒவ்வொரு பருவ வளர்ச்சியும் உடல், உள்ளம், உள்ளக் கிளர்ச்சி, அறநெறி, அழகுணர்ச்சிகள் ஆகிய ஐந்து செயற்பாடுகளின் வழியாக ஏற்படுகின்றது. அதனால் சூழல்கள் குழந்தையின் நடத்தை முறை, வளர்ச்சி வேகம் ஆகியவற்றைப் பாதிக்கின்றது.

குழந்தை உளவியலானது இத்தகையப் பாதிப்புகளை ஆராய்வதோடு அவர்களுக்கு இணக்கமான சூழல் எது என்பதையும் கண்டறிந்து கொள்ளக் குழந்தைகள் முற்படு கின்றனர். ஒரு குழந்தையின் ஆளுமையிலும் வளர்ச்சியிலும் அதன் குடும்ப உறுப்பினர் கள், அயலவர்கள், பாடசாலை, விளை யாடும் இடம் ஆகிய அம்சங்கள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. குழந்தையின் உளச் செயல்கள் பெரியவர்களில் இருந்து வேறு படுகின்றது. அதேபோல் குழந்தைகள் ஒருவருக்கொருவர் வேறுபடுகின்றனர். அவ் வேறுபாடுகளினால் குழந்தைகளும் ஒருவருக் கொருவர் வேறுபடுகின்றனர். அவ்வேறு பாடுகள் குழந்தைகளின் நடத்தையிலும் வளர்ச்சியிலும் காணப்படுவதோடு அவர் களின் பின்னணிப் பொருளாதார நிலை, இனவேற்றுமை, ஆளுமை வளர்ச்சி, தசை ஆற்றல்கள், கற்றல் செயற்பாடுகள் ஆகியவற்றிலும் பிரதிபலிக்கின்றது.

அறிஞர்களின் ஆய்வுகளின் முடிவு 1-3 வயதுவரை மூளை வேகமாக வளரும். 5 வயதுடன் மூளை வளர்ச்சி முழுமையடையும். ஒரு 5 வயது குழந்தை யின் ஆளுமை 50 வயதுள்ள ஒருவரின் மூளையின் ஆளுமையைப் பார்த்தால்

மூளையின் வளர்ச்சி ஒன்றுதான். ஆனால் 50 வயதுள்ள ஒருவரின் அனுபவங்கள், கற்றல்கள், திறன்கள் என மூளைச் சேமிப்பு அதிகமாக இருக்கும். ஆகவே குழந்தைகளுக்கு 3 வயதில் நாம் விளையாட்டுப் பொருட்களை வாங்கிக் கொடுப்பதற்குப் பதிலாக 'களியை' வாங்கிக் கொடுப்பது சிறந்தது. அது அவர்களுக்கு நரம்புகளின் வளர்ச்சியைத் தூண்டும் திறன் கொண்டது.

எல்லா மனநலத் துறைகளிலும் அவதானித்தலே (Observations) மிக முக்கியமான உத்தியாகும். இதன் மூலம் குழந்தைகளின் செயல்பாடுகளையும் அவர்களைப் பற்றியும் அவர்களின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், பழகிய மனிதர்கள், அயலவர்கள் மூலம் அவர்கள் வெளி உலகத்தில் மனிதர்களுடன் பழகிய விதத்தைப் பற்றி அறிந்து கொள்ள, புரிந்து கொள்ள முடியும். அவர்களின் மனத்திடம், வளர்ச்சி பற்றி அறிந்து கொள்ளலாம்.

குழந்தை வளர்ச்சியில் பங்களிப்புச் செய்பவையாவன; அவர்களின் பிறப்பிலேயே இருக்கும் உயிர்மம் (gene), இயல்பான தன்மை, வளர்ப்பு முறை மூன்றுமே செல்வாக்குச் செலுத்துகின்றன. குடும்ப உறுப்பினர்கள், அவர்களுடன் அன்றாடம் பழகும் மனிதர்கள், சூழ்நிலை, சுற்றுச்சூழல், சந்திக்கும் அனுபவங்கள் போன்றவை அவர்களின் சிந்தனை உணர்வு, மனநிலை, உடல்நலம், நடத்தை போன்றவற்றில் மாற்றங்களைக் கொண்டு வருகின்றன.

நலமாக வாழ்வதற்கும் வளர்ச்சி அடைவதற்கும் நேர்மறையான எண்ணங்களை விதைக்க வேண்டும். இடையூறு வரும் சந்தர்ப்பங்களில் அது உடல், உணர்வு, உறவு போன்ற அனைத்து விடயங்களிலும் செல்வாக்குச் செலுத்தும். இவை மூன்றும் ஒன்றாக இணைந்து செயற்படுவதனால் விளைவும் மூன்று விடயங்களிலும் செல்வாக்குச் செலுத்துகிறது. அத்துடன் அதற்கானத் தீர்வாக நாம் பெற்றோரிடமிருந்து கற்றவைகள், வாழையடி வாழையாக வரக்கூடிய கலாசார பழக்கவழக்கங்கள் போன்றன கைகொடுக்கின்றன. சுய உளவியல், சமூக நியதி, சூழ்நிலை என்பன இணைந்து ஒரு பிரச்சினையைத் தாங்கக்கூடிய சக்தியை, வலிமையைப் பிள்ளைகளுக்குத் தருகின்றன. கஷ்டங்களிலிருந்து வெளிவருவதும் இல்லாமல் போவதும் இதன் அடித்தளத்தில் அமையும்.

குழந்தை உளவியலில் பின்வரும் விடயங்கள் ஆராயப்படுகின்றன.

1. உடல் வளர்ச்சி (Development)
2. வளரும் நிலை(Milestones)
3. அறிவு வளர்ச்சி (Cognitive development)
4. நடத்தை( behavior)
5. உணர்வுகள் (Emotional)
6.சமூகச் சந்திப்புகள் (Socialization)
7.வருமுன் காப்போம் (Prevention is the key)

உடல் வளர்ச்சி (Development)

குழந்தைகளில் உடல் வளர்ச்சி என்பது பொதுவாக நிகழ்வுகளில் கணிக்கக்கூடிய வரிசையாகும். அந்த வரிசையில் உங்கள் பிள்ளை தலையை உயர்த்தி, உருண்டு, ஊர்ந்து, நடந்து, ஓடுவது அனைத்தும் அடங்கும். உங்கள் குழந்தையின் உடல் வளர்ச்சியைக் கவனிப்பதிலும், வளர்ச்சி முறைகேடுகளைக் குறிக்கும் ஏதேனும் அசாதாரணங்கள் இருந்தால் தெரிவிப்பதிலும் குழந்தை உளவியலாளர் உதவக் கூடும். உங்கள் குழந்தை இயல்பாக வளர்ந்து வருவதை உறுதி செய்ய, வளர்ச்சியின் மைல்கற்களை நோக்கி உங்கள் குழந்தையின் முன்னேற்றத்தைக் குழந்தை உளவியலாளர்கள்

கவனிப்பார்கள். உடல் வளர்ச்சியின் முக்கியத் தாமதங்கள் பிற அடிப்படை வளர்ச்சிச் சிக்கல்களை வெளிப்படுத்தக்கூடும். பின்னர், அவை ஆரம்பத்தில் தீர்க்கப்படலாம்.

குழந்தைகளின் உடல் வளர்ச்சியில் சிறிய மற்றும் பெரிய தசை வளர்ச்சியைப் படிப்படியாக அவதானிக்கலாம். இதனால் தான் குழந்தைகள் முதலில் நிற்பதும் பின்னர் நடப்பதும் அதன் பிறகு ஓடுவதும் என்ற செயற்பாடுகள் படிப்படியாக நடக்கின்றன. சிறிய தசைகள் துல்லியமான, தனித்துவமான, உன்னிப்பான செயல் பாடுகளுக்கு உதவுகின்றன. அதாவது பெருவிரல், சுட்டு விரல் மூலம் பொருட் களை எடுத்தல், எழுதுதல் போன்றன. இவ்வாறான படிப்படியான முன்னேற்றம் இல்லாவிட்டால் கட்டாயம் குழந்தையின் சூழலைப் புரிந்து அதை ஈடு கட்டும் வழியைத் தேட வேண்டும். வைத்திய ஆலோசனையை நாடவேண்டும்.

*2) வளரும் நிலை (milestones)*

இது குழந்தை வளர்ப்பு முறையை வகையாகத் தெரிவிப்பதாகும். ஒவ்வொரு மாதத்திற்கும் படிப்படியான வளர்ச்சி முறைமைகள் உண்டு.

குழந்தைகளின் வயதிற்கேற்ற வளர்ச்சி முறைகளை அறிந்து கொண்டு அவர்கள் சரியான வளர்ச்சிப் படிநிலைகளில் இருக்கி றார்களா இல்லை பின்தங்கி உள்ளார்களா என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அதற்கு அடுத்தக் கட்டமாக அதற்குரிய காரணிகளைக் கண்டுபிடித்துத் தீர்வுகளை எடுக்க வேண்டும்.

குழந்தை வளர்ச்சி என்பது தொடர்ந்து நடைபெறும் செயலாகும். அவர்கள் குறிப் பிட்ட செயல்களைக் குறிப்பிட்ட வயதுகளில் செய்ய வேண்டும். இதைத்தான் வளர்ச்சிப் படிநிலைகள் என்கிறோம். ஒரு குழந்தை வளருகின்ற விதத்திலேயே மற்றொரு குழந்தையும் வளர வேண்டும் என்பது அவசியமில்லை என்பதனை பெற்றோர்கள் உணரவேண்டும். பக்கத்து வீட்டு குழந்தையால் செய்ய முடிவதை எல்லாம் நம்முடைய குழந்தையால் செய்ய முடியவில்லை என்று புலம்புவதும் வருத்தப்படுவதும் தேவையற்றது. கீழே கொடுக்கப்பட்டுள்ளபடி குழந்தைகள் எந்தெந்த வயதுகளில் என்னென்ன செய்வார்கள் என்பதை அறிந்து அதன்படி குழந்தைகளின் செயற்பாடுகளைக் கவனிக்க வேண்டும்.

*குழந்தைகளின் வளர்ச்சிப் படிநிலைகள்:*

*2 மாதங்கள் - புன்சிரிப்பு, லேசான சிரிப்பு.*

*4 மாதங்கள் - கழுத்து நிற்பது, கை, கால்களை சிறிதளவு அசைக்கும்.*

*8 மாதங்கள் - எவ்வித உதவியுமின்றிச் சுயமாக உட்காருதல்.*

*12 மாதங்கள் - எழுந்து நிற்றல்.*

*பிறந்த நாள் முதல் 6 வாரங்கள்:*

தலையை ஒருபுறமாகத் திருப்பியவாறு மல்லார்ந்து படுத்துக்கொண்டிருக்கும்.

திடீரென்று உருவாகும் சத்தம் கேட்டு குழந்தையின் உடல் விறுக்கென்று சிலிர்த்துக் கொள்ளுதல்.

கைவிரல்களை இறுக்கமாக மூடி வைத்திருத்தல்.

குழந்தையின் உள்ளங்கையில் ஒரு பொருளையோ அல்லது விரலையோ வைத்தால் இறுக்கமாகப் பிடித்து வைத்து

கொள்ளுதல்.

குழந்தையிடம் ஏதாவது பொருள், கைகளைக் கொடுத்தால் அவை தன்னுடைய உறுப்பில் ஒன்று என நினைத்துக் கொள்ளும்.

6 முதல் 12 வாரங்கள்:

குழந்தை கழுத்தை நன்றாக நிற்க வைக்கப் பழகும்.

பொருட்களின் மீது கண்களை நிறுத்தி உற்றுப்பார்க்கும்.

குழந்தை திடீரென அழும்.

3 மாதங்கள் முழுமையான குழந்தையின் செயற்பாடு:

மல்லார்ந்து படுத்தவாறு தன்னுடைய இரண்டு கைகள் மற்றும் கால்களைச் சீராக அசைத்து இயக்கும். அழுகைச் சத்தத்துடன் சிணுங்குதல், சந்தோஷத்தை வெளிப்படுத்தும் வகையில் ஒருவிதச் சத்தங்கள் போன்றவற்றையும் வெளிப்படுத்தும்.

குழந்தை தன்னுடைய அம்மாவை அடையாளம் கண்டு கொள்ளும். மேலும் அம்மாவின் குரலுக்கு ஏற்பத் தனது உணர்வுகளை வெளிப்படுத்தும்.

குழந்தை தனது கை விரல்களை முன்பு போல் மூடி வைக்காமல் திறந்து வைத்துக்கொள்ளும்.

குழந்தையை நிற்க வைக்கும் பொழுது ஒரு சில விநாடிகளுக்கு மட்டும் கழுத்தை நேராக நிற்க வைக்கும். பிறகு பழைய நிலைமைக்குக் கழுத்து வந்து விடும்.

அம்மாவைத் தவிர மற்றவர்களை அடையாளம் கண்டு கொள்ள முடியாது.

6 மாதங்கள் முழுமையான குழந்தையின் செயற்பாடு:

குழந்தை தன்னுடைய இரண்டு கைகளையும் தட்டியவாறு விளையாட ஆரம்பிக்கும்.

தன்னைச் சுற்றியுள்ள பகுதியில் மிக அருகில் இருந்து குழந்தை ஏதேனும் சத்தம் கேட்டால் சத்தம் வரும் பகுதியை நோக்கித் தன்னுடைய தலையைத் திருப்பும்.

குழந்தை படுத்தவாக்கிலேயே உருண்டு கொண்டு செல்லும்.

எவ்விதப் பிடிப்போ உதவியோ இல்லாமல் உட்கார ஆரம்பிக்கும்.

தாய் அல்லது பிறர் உதவி செய்தால் அதை மறுத்துத் தானே செயற்பட முயற்சி செய்யும்.

குழந்தை நிற்கும் பொழுது தன்னுடைய உடல் எடையைத் தாங்கும் சக்தியைத் தனது கால்களில் பெறும்.

குழந்தை குப்புறப்படுத்துக் கொண்டிருக்கும் பொழுது தன்னுடைய உடல் எடையை நீட்டிய நிலையில் உள்ள கைகளைக் கொண்டு தாங்கிக்கொள்ளும்.

9 மாதங்கள்

கைகளை ஊன்றியோ, எவ்வித பிடிப்போ / உதவியோ இல்லாமலும் உட்காரும்.

குழந்தை தவழ்ந்து செல்ல ஆரம்பிக்கும்.

அருகிலுள்ள பொருள்களை தள்ளி விட ஆரம்பிக்கும்.

12 மாதங்கள்

குழந்தை எழுந்து நிற்கும்

தாத்தா, பாட்டி, மாமா போன்ற வார்த்தைகளை கொஞ்சும் மொழியில் சொல்ல ஆரம்பிக்கும்.

வீட்டில் உள்ள பொருட்களையும் சுவரையும் பிடித்துக்கொண்டு நடக்கும்.

பிறரின் கையை பிடித்துக் கொண்டு நடக்க முயலும்.

18 மாதங்கள்

யாருடைய உதவியும் இல்லாமல் டம்ளரை, கப்பை பிடித்துக்கொண்டு குடிக்கும். பால் புட்டிகள் ஏதும் இனிமேல் தேவைப்படாது.

கீழே விழாமலும் தடுமாறாமலும் வீட்டில் நடை பழகும்.

ஓரிருவார்த்தைகளைபேசப்பழகிவிடும்.

குழந்தை தானாகவே சாப்பிட ஆரம் பித்துவிடும்.

உடல் நலக்குறைவான குழந்தைகள் நடக்க சிறிது கஷ்டப்படுவர்.

2 வருடங்கள்

கால் சட்டை போன்ற உடைகளை உடுத்திக் கொள்ளும்.

கீழே விழாமல் ஓடிச் செல்லும்.

புத்தகத்தில் உள்ள படங்களைப் பார்க்க ஆர்வப்படும்.

தனக்கு என்ன வேண்டும் என்பதை வாய் திறந்து கேட்கும்.

பிறர் சொல்லுவதைத் திருப்பிச் சொல்ல ஆரம்பிக்கும்.

உடலில் உள்ள சில உறுப்புகளைக் காட்டி அதன் பெயரைக் கேட்டால் பெயர் சொல்லும்.

3 வருடங்கள்

தலைக்குமேல் கையைக் கொண்டு சென்று பந்தை வீசி எறியும்.

சில எளிய வகையான கேள்விகளுக்கு பதில் சொல்லும்.

பொருட்களை இங்கேயும் அங்கேயும் வைப்பது போன்ற சின்ன சின்ன வேலைகளில் உதவி செய்யும்.

குறைந்த பட்சம் ஒரு நிறத்தின் பெயரையாவது சொல்லும்.

மற்ற குழந்தைகளுடன் சேர்ந்து விளையாட ஆரம்பிக்கும்.

4 வருடங்கள்

மூன்று சக்கர சைக்கிளை மிதித்து ஓட்ட ஆரம்பிக்கும்.

புத்தகங்கள் அல்லது பத்திரிக்கைகளில் உள்ள படங்களின் பெயரைச் சொல்லும்.

உறவினர்களிதம் கொஞ்சு மொழியில் பேசப் பழகும்

5 வருடங்கள்

துணிகளை உடுத்திக் கொள்ளும் பொழுது ஒரு சில பட்டன்களையாவது (பொத்தான்களை) போட்டுக்கொள்ளும்.

குறைந்த பட்சம் மூன்று நிறங்களின் பெயரையாவது சொல்லும்

படிக்கட்டுகளில் பெரியவர்களைப் போலவே கால்களை மாற்றி வைத்து ஏறிச் செல்லும்.

குதித்தும் தாண்டியும் செல்லத் தொடங்கும்.

வார்த்தை உச்சக்கட்டங்களை நன்றாக உச்சரிக்கும்.

அந்தந்தக் காலகட்டத்திற்குள் செய்ய வேண்டிய செயல்களை குழந்தையால் செய்ய முடியவில்லை எனில், உடனடியாக குழந்தைகள் நல மருத்துவரிடம் சென்று குழந்தையைக் காட்டி ஆலோசனை பெறுதல் அவசியம். குழந்தையின் உடல்நிலை சரியில்லாமல் இருந்தாலோ அல்லது அதிர்ச்சி/பயம் போன்றவற்றுக்கு உள்ளாகி இருந்தாலோ, குழந்தைகளின் செயல்பாட்டிலும் பழக்க வழக்கத்திலும் மாறுபாடுகள் இருக்கலாம். சில சமயங்களில் ஒரு குழந்தை சம வயது கொண்ட மற்றொரு குழந்தையை விட சில செயல்பாடுகளில் குறைவான விதத்தில் இருக்கும், அதேசமயம் வேறு சில செயல்களில் அதிவேகத்தில் நல்ல வளர்ச்சியும் பெற்று இருக்கும். குழந்தை நடப்பதற்குத் தயாராக இல்லாத தருணத்தில், குழந்தையை நடக்கச் சொல்லி வலுக்கட்டாயமாகப் பயிற்சி கொடுத்தல் எந்தவித பலனையும் தராது.

3) அறிவு வளர்ச்சி (cognitive development)

குழந்தைப் பருவ அறிவாற்றல் வளர்ச்சியின் மருத்துவப் புரிதல் சமீபத்திய ஆண்டுகளில் பெரிதும் மாறிவிட்டது. புதிதாகப் பிறந்த குழந்தைகள் கூட தங்கள் சூழலைப் பற்றி நன்கு அறிந்திருக்கிறார்கள். அதில் ஆர்வம் காட்டுகிறார்கள். அதை வெளிப்படுத்த முயற்சிக்கிறார்கள்.

அறிவாற்றல் வளர்ச்சி என்பது ஒரு குழந்தையின் அறிவுசார்க் கற்றல் மற்றும் சிந்தனைச் செயல்முறைகளைக் குறிக்கிறது. அதைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றிய அவதானிப்பு மற்றும் புரிதல், மொழிக் கற்றல், நினைவகம், முடிவெடுப்பது, சிக்கலைத் தீர்ப்பது ஆகியவற்றில் ஒரு குழந்தை அவர்களின் கற்பனையை எவ்வாறு பயன்படுத்துகிறது? குழந்தை அடிப்படை பகுத்தறிவை எவ்வாறு பயன்படுத்துகிறது? ஆகியவை இதில் அடங்கும். இந்தக் காரணிகள் அனைத்தும் குழந்தையின் மரபியல் மற்றும் சூழலால் பாதிக்கப்படுகின்றன.

அறிவு வளர்ச்சி ஆராய்ச்சியானது சமகாலத்தில் மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ளது. கருவில் உள்ள குழந்தைக்கு சூழல் மாற்றங்கள் எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்று அறியப்பட்டுள்ளது. சாதாரணமாகக் கர்ப்பமுற்ற பெண் கேட்கின்ற பாடல்கள் குழந்தைக்கும் பிறந்த பிறகு பரிச்சயம் ஆனதாக இருப்பதை உதாரணமாகக் கூறலாம். அதேபோல் குழந்தைகள் பிறந்த பின்னரும் சூழலில் எவ்வாறான அவதானத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் முக்கியமானது. அறிவு வளர்ச்சியில் மொழி, கற்றல், ஞாபகத் திறன், முடிவு செய்தல், விடை காணுதல், கூர்ந்து கவனித்தல்,ஆராய்ந்து பார்த்தல், புரிந்துகொள்ளுதல் போன்றவை அடங்கும். இவை தனித்தனியாகவும் பல தடவை கலவையாகவும் சேர்ந்து பயன்

படுத்தப்படும்.

இந்த வகையான அறிவு வளர்ச்சியில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து அதற்குரியத் தீர்வுகளை உரியவர்களிடம் பெற்றுக் கொள்வது நல்லது.

4) நடத்தை (behavior)

இது நடந்து கொள்ளும் விதத்தைக் கூறுவதாகும். குழந்தைகளின் நடத்தையை வைத்து இவர் சாந்தமானவர், மௌன மானவர் அல்லது படுசுட்டி என்று வகைப்படுத்துகிறோம். குழந்தைப் பருவத் திலிருந்து விடலைப் பருவம் வரையில் அவர்கள் கற்றுக் கொள்ளும் நிலையில் இருந்தாலும் அவர்கள் தகுந்த நிலையில் இருக்கிறார்களா என்று ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். உண்மையில் பெற்றோரின் வளர்ப்பு முறை கண்டிப்புத் தன்மை, அவர்களுடன் இருப்பவர்களிடம் இருந்து கற்றுக்கொள்வது எல்லாம் நடத்தையில் அடங்கும். பொதுவாக இரண்டு வயதினரை terrible 2 என்று கூறுவார்கள். அதாவது இரண்டு வயதினர்கள் கூடுதலான சுறுசுறுப்பாகவும் ஓடியாடி விளையாடக் கூடியவர்களாகவும் சோர்வே தெரியாத அளவுக்குத் துருதுருவென்று இருப்பதனால் அப்படிக் கூறப்படுகிறது. இரண்டு வயதில் அவ்வாறு இருப்பதனால் தனித்துவமாக, நிறையக் கற்றுக் கொள்ள வாய்ப்புகள் அதிகம். குழந்தைகள் விடலைப் பருவத் துக்கு மாற்றம் ஏற்படும் போது அவர்களின் மனநிலையில், நடத்தையில் மாற்றங்கள் ஏற்பட்டால் கட்டாயம் மருத்துவரை அணுகுவது அவசியமாகும். அதிக கோபம், வெறுப்பு, அடம்பிடித்தல் போன்றவற்றை உதாரணமாகக் கூறலாம். இதற்குரிய காரணங்களைச் சரியான முறையில் கண்டுபிடித்து அதற்குரிய தீர்வுகளை எடுக்க வேண்டும்.

5) உணர்வுகள் (emotional)
அதாவது மன வளர்ச்சி.

உணர்வுகள் ஒன்றிணைந்தவை.

தன் உணர்வுகளைப் புரிந்து மற்றவர் களின் உணர்வுகளையும் அறிந்து அதைப் புரிந்து கொள்ளும் திறனும் கையாளும் திறனுமே இதற்குள் அடங்கும்.இப்படிச் செயல்படுவது பிறப்பில் தொடங்கி வாழ்நாள் முழுவதும் அவ்வாறே நிகழ்கிறது. பல குழந்தைகளும் ஏன் விடலைப் பருவத்தினரும் கூட தம் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்குத் தயக்கம் காண்பிக்கின்றனர். தடுமாற்றம் கொள்கின்றனர். உளவியலில் இதற்குத் தீர்வு உண்டு. உணர்ச்சிகளைக் கை யாள்வதில் தேர்ச்சி பெற இளம் சமுதாயத்தினரை வழிகாட்ட வேண்டும். இத்திறனை வலுப்படுத்தும் போது பிள்ளைகளின் வளர்ச்சி முன்னேற்றம் பல மடங்கு அதிகரிக்கின்றது.

உணர்ச்சி மற்றும் சமூக வளர்ச்சி ஆழமாக பின்னிப் பிணைந்துள்ளது. உணர்வு வளர்ச்சி என்பது குழந்தை அவர்களின் உணர்ச்சிகளை எவ்வாறு உணர்கிறது, புரிந்துகொள்கிறது மற்றும் வெளிப்படுத்துகிறது என்பதைக் குறிக் கிறது. பயம், மகிழ்ச்சி, கோபம், சோகம் போன்ற அடிப்படை உணர்ச்சிகளின் வெளிப்பாட்டின் மூலம் உணர்வு வளர்ச்சி மிக இளம் குழந்தைகளில் வெளிப்படுகிறது. குழந்தை வளர்ந்து வரும் போது நம்பிக்கை, குற்ற உணர்வு, பெருமை போன்ற சிக்கலான உணர்ச்சிகள் வெளிப்படுகின்றன. உணர்ச்சி வளர்ச்சி யில் பச்சாத்தாபத்தின் மூலம் மற்றவர் களின் உணர்ச்சிகளை உணரவும் புரிந்து கொள்ளவும் ஒரு குழந்தையின் திறனும் அடங்கும். உணர்ச்சிகளை சரியான முறையில் கட்டுப்படுத்தவும்,

வெளிப்படுத்தவும் கற்றுக்கொள்வது பல குழந்தைகளுக்கு கடினம். குழந்தைகளுக்கு அவர்களின் உணர்ச்சிகளை ஆரம்பத்தில் புரிந்துகொள்ள உதவுவது தற்போதைய மற்றும் எதிர்கால உணர்ச்சி வளர்ச்சியில் சக்தி வாய்ந்த தாக்கத்தை ஏற்படுத்தும். ஒரு குழந்தை உளவியலாளர் உங்கள் பிள்ளைக்கு அவர்களின் உணர்ச்சிகளை ஆரோக்கியமான, நேர்மறையான வழியில் புரிந்துகொள்ளவும் வெளிப்படுத்தவும் உதவி செய்வார்.

*6) சமூக சந்திப்புகள்* (socialization)

உணர்வு வளர்ச்சியின் ஒரு பங்கு சமூக சந்திப்புகளில் அடங்கியுள்ளன. மற்றவர்களை சந்திக்கும் வேளையில் பழகும் வகையில் உணர்வுகளில் மாற்றம் ஏற்படுகிறது. ஒரு விடயத்தை ஏற்றுக் கொள்வதும் புறக்கணிப்பதும் அதுபற்றி கருத்துத் தெரிவிப்பதும் உணர்வின் வெளிப்பாடாகும். ஆகவே உணர்வுத் திறனும் சமூகச் சந்திப்புகளும் ஒன்றோ டொன்று தொடர்புபட்டவை. குழந்தைகளின் உறவுமுறை, வளர்ப்பு, ஆரம்ப கால அனுபவங்கள், சுற்றம், சூழல் எல்லாம் இந்த இரண்டு திறன்களையும் உருவாக்க வல்லது. தன்னையும் மற்றவர்களையும் நம்புவது, நண்பர்களையும் பிரச்சினைகளையும் சமாளிப்பது, மரியாதை செலுத்துவது என்பன இந்த இரண்டு திறன்களினதும் வெளிப்பாடாகும்.

இதற்கானஅடிக்கல்லைநாட்டுபவர்கள் பிள்ளைகள் யாருடன் முதலில் வளரத் தொடங்குகிறார்களோ அவர்கள்தான். மற்றவர்களுடன் பழகுவது, உரையாடல், அன்பு, ஆதாரம், தனக்கான பாதுகாப்பு என்பன குழந்தையின் உளவியலை மிகவும் பாதிக்கக் கூடிய விடயங்கள். இதிலிருந்து ஒரு குழந்தை தனக்கான விடயங்களை வேறு பிரித்து அறிந்து கொள்கிறது. எனக்குப் பாதுகாப்பு இருக்கிறது என்ற நம்பிக்கை குழந்தைகளுக்கு வருகிறது.

முக்கியமாக காக்கும் மனப்பான்மை, மற்றவர்களுடைய விடயத்தை பொறுமை யுடன் கேட்டல், விட்டுக்கொடுத்தல் போன்ற அம்சங்கள் உள்ள குழந்தைகளே எமோஷனல் இன்டெலிஜென்ஸ் emotional intelligence உள்ளவர்களாக கருதப்படுகிறார்கள்.

அத்தோடு விளையாட்டும் சமூகச் சந்திப்பில் முக்கிய இடத்தை வகிக்கிறது. வாழ்க்கையைப் பற்றி புரிந்து வாழ கற்றுக் கொடுக்கிறது. தனக்கென்று உறவுகளை, நண்பர்களைத் தேர்ந்தெடுக்க உதவுகிறது. வளரும் குழந்தைகள் விளையாட்டில் இருந்து புரிந்துணர்வு, நுணுக்கமான ஒத்துழைப்பு, சமத்துவம் எல்லாம் கற்றுக் கொள்கிறார்கள். பிள்ளைகள் இவற்றைச் சரியாகச் செயல்படுத்துவதற்குத் ‘தான் பாதுகாப்பாக இருக்கிறோம்‘ என்ற உள்ளுணர்வு இருந்தால்தான் முடியும்.

அப்படி இல்லையாயின் அந்த வயதி னரின் குறைபாட்டை அது காட்டிக் கொடுக்கும். குழந்தை தொடக்கம் விடலை, பெரியோர் வரை முக்கியமான மூன்று கட்டங்கள் அவர்களிடம் கட்டா யம் காணப்பட வேண்டும். மற்றவர் களைப் பார்த்துக் கொள்ளுதல் (caring), உதவி செய்தல், பகிர்ந்து கொள்ளுதல் என்பனவாகும்.

*7) வருமுன் காப்போம்* (prevention is the key)

குடும்பம், பள்ளிக்கூடம், சம வயதுப் பிள்ளைகள் போன்ற காரணிகள் குழந்தையின் வாழ்வில், வளர்ச்சியில் பெருஞ்செல்வாக்குச் செலுத்துகின்றன.

உறவுகளால் பயனையும் அப்படியான உறவுகள் இல்லாமல் போகின்ற போது வாழ்வில் சரிவையும் இவர்கள் அடைகிறார்கள்.

ஆதலால் சிறுவர்களின் பிரச்சினைகளை முன்னதாகவே இனம் கண்டு அதற்குரிய தீர்வுகளைப் பாதிப்புகள் ஏற்படும் முன்னரே சரிசெய்து கொள்ள வேண்டும்.

குழந்தையின் மன ஆரோக்கியம்:

குழந்தைகளின் மன நோய்களை ஆரம்பத்தில் கண்டறிந்து சிகிச்சையளிப்பது மிகவும் முக்கியம். மன நோய் உருவாகியதும், அது உங்கள் குழந்தையின் நடத்தையின் வழக்கமான பகுதியாக மாறும். இதனால் சிகிச்சையளிப்பது மிகவும் கடினம்.

ஆனால் உங்கள் பிள்ளைக்கு கடுமையான பிரச்சினை இருக்கும் போது தெரிந்து கொள்வது எப்போதும் எளிதல்ல. அன்றாட அழுத்தங்கள் உங்கள் குழந்தையின் நடத்தையில் மாற்றங்களை ஏற்படுத்தும். உதாரணமாக, ஒரு புதிய சகோதரர் அல்லது சகோதரியைப் பெறுவது அல்லது ஒரு புதிய பள்ளிக்குச் செல்வது என ஒரு குழந்தை தற்காலிகமாக செயல்படக் கூடும். இது மிகவும் கடுமையான பிரச்சினையாக இருக்கலாம் என்பதற்கான எச்சரிக்கையறிகுறிகள் கீழ்க்கண்டவாறு இருக்கலாம்.

1. பள்ளியில், வீட்டில், நண்பர்களுடன் மோதல்.
2. பசியின்மை அல்லது தூக்கத்தில் ஏற்படும் மாற்றங்கள்.
3. சமூக விலகல் அல்லது தேவை இல்லாத விஷயங்களைப் பற்றிய பயம்.
4. படுக்கை நனைத்தல் போன்ற இளைய வயதுக் குழந்தையின் நடவடிக்



# அந்திவானம் மாறுவதேன்?

கவிஞர் பொன்விலங்கு பூ.சுப்ரமணியன்

ஒரே வானம் ஒரே சூரியன்
வளர்ந்து தேயும் வட்ட நிலா
கண்சிமிட்டும் எண்ணிலடங்கா
விண்மீன் கூட்டங்கள்!

இன்று கண்ணுக்கும்
மனதுக்கும்
அந்திவானம்
மயக்கம் தருகிறது!

நேற்றுப்போல் இன்று
அதே அந்திவானம்
நட்சத்திரத் தோரணங்கள்
மனம் மயங்கவில்லை!

அதே வானம் சூரியன்
விண்மீன் கூட்டங்களில்
சில உதிர்ந்து இருக்கலாம்.

அந்திவானம்
மனம் மயங்கவில்லை
மாறி காட்சி அளிக்கிறதா?
மனதின் பார்வை
மாறி விட்டதா?
அந்திவானம் மாறுவதேன்?

கைகளுக்குத் திரும்புதல்.

5. சோகம் அல்லது கண்ணீர் போன்ற வருத்தத்தின் அறிகுறிகள்.

6. தலையில் அடிப்பது அல்லது திடீரென்று அடிக்கடி காயப்படுவது போன்ற சுய அழிவு நடத்தையின் அறிகுறிகள்.

7. மரணத்தின் எண்ணங்கள் மீண்டும் மீண்டும் ஏற்படுதல்.

மனநலப் பிரச்சினைகளைக் கண்டறிய, மருத்துவர் அல்லது மனநல நிபுணர் உங்கள் குழந்தையின் அறிகுறிகள் மற்றும் அறிகுறிகள், மருத்துவ வரலாறு மற்றும் குடும்ப வரலாறு ஆகியவற்றை அலசிப் பார்க்கிறார். சிகிச்சையில் மருந்துகள் மற்றும் பேச்சுச் சிகிச்சை (speach therapy) ஆகியவை அடங்கும்.

சகலருக்கும் சம வாய்ப்பு என்ற சிந்தனைத் துளிர் விட்டுள்ள இன்றையக் காலகட்டத்தில் உலகில் வாழும் அனைத்து சிறுவர்களும் உடல் ஆரோக்கியமும் உள ஆரோக்கியமும் பெற்று முழுமையாக வளர்ச்சி பெற சிறந்த போசாக்கு உணவும் நோய்ப் பாதுகாப்பும் வன்முறையிலிருந்து விடுதலையும் சிறந்த கல்வி அறிவும் பெறுபவர்களாக உறுதிப்படுத்துவது வளர்ந்தோர் நம் அனைவர் மீதும் உள்ள பாரிய பொறுப்பாகும்.

உண்மையில் பிள்ளையின் வளர்ச்சியில் பெற்றோர்களின் பங்களிப்பானது மிகவும் முக்கியமான ஒன்றாகும். நாம் சில நெறி பிறழ்வான விடயங்களை செய்து கொண்டு பிள்ளைகளை அதனை விட்டும் தடுக்க முயல்வோம் ஆயின் அது ஒரு அசாத்தியமான நிகழ்வாக மாறுவதைக் காணலாம். உளவியலாளர்களின் கருத்துப் படி பிள்ளைகள் முதலாவது முன் மாதிரியாக தமது பெற்றோரின் நடத்தைகளைப் பின்பற்றுகின்றனர் என்று கூறுகின்றார்கள்.

'இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள் என்ற வாசகத்தின் படி உலகின் ஒவ்வொரு சிறு வரும் மதிக்கப் படல் வேண்டும்'. நாளைய எதிர்காலம் நன்றாக அமைய இன்றைய சிறுவர்களை நல்லதோர் பிரஜையாக உருவாக்குவது மிகவும் அவசியமான ஒன்றாகும். அந்த வகையில் ஒவ்வொரு குடும்பத்திலும் சிறுவர்கள் சரியான உடல், மன ரீதியான ஆரோக்கியத்தின் அடிப்படையில் வளர்க்கப்பட வேண்டும், பராமரிக்கப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள்.

சிறுவர்களை நாளைய தலைவர்களாக ஆக்கும் பொறுப்பு ஆசிரியர்களுக்கும் கல்விக்கூடங்களுக்கும் இருக்கிறது. அதே போன்று பெற்றோர், சூழல், நண்பர்கள், பழக்கவழக்கங்கள், குடும்ப நிலைமை போன்ற இதர காரணிகளும் சிறுவர்களின் வாழ்க்கையில் உடல், மன வளர்ச்சியில் பெரும் பங்களிப்பை ஆற்றுகின்றன.

எனவே நாளைய தலைவர்களாக வரவேண்டிய இன்றைய இளம் சிறார்களை அவர்களைச் சுற்றியுள்ள பொறுப்புதாரர்கள் தத்தமக்குரிய வகிபாகத்தைச் சரிவர நிறைவேற்றி ஊக்குவிப்பார்களாயின் நிச்சயமாக எதிர்காலத்தில் சிறந்ததொரு சந்ததியினரை எதிர் பார்க்கலாம்.

'சிறுவர் உரிமை<br>
சிறப்பாய்க் காப்போம்<br>
சிறுமை ஒழித்து<br>
தேசம் வளர்ப்போம்'

அவ்வாறே...

'மகத்துவம் மிக்கதோர் சிறுவர் சமுதாயத்தினை உருவாக்குவோம்'

# சிந்தனைச் சிதறல்

தினம் தினம் புதுப்புது சிந்தனைகளோடு பயணிக்கின்றேன்.

ஏனென்றால் என்னை எனக்கு யார் என்று தெரியப்படுத்துவதற்காக......

✶

நிச்சயமற்ற இவ்வுலக வாழ்க்கைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு மரணம் ஒன்றே ஏனெனில் ஒவ்வொரு ஆன்மாவும் மரணத்தை சுவைத்தே தீரும் என்பதனால்...

✶

ஒவ்வொருவரினதும் சிரிப்பிற்கு பின்னால் இருக்கும் வலிகளும், வேதனைகளும், வாழ்க்கைப் போராட்டங்களும் வார்த்தைகளால் சொல்லி முடிக்க முடியாதவையே..

✶

நயவஞ்சகம் என்ற முகமூடியை அணிந்து கொண்ட கூட்டம் ஒரு பக்கம் இருந்தாலும் கூட... தன்னுடைய வாழ்க்கையை இறுதி மூச்சுள்ள வரை வாழ்ந்து முடிக்க வேண்டும் என்று போலியாக சந்தோசம் என்னும் முக மூடி அணிந்து கொண்டவர்கள் தான் இங்கு அதிகம்.

✶

கடல் நம்மை பிரித்தாலும் வானம் என்றும் ஒன்று தான் என்று பாசத்தை மழை போல் பொழிந்த நட்புகள் இன்றெங்கோ சூறாவளி காற்றாய் சுழன்று காணாமல் போய்விட்டனவே...!!!

✶

தர்மமானது கொடுக்க கொடுக்க குறையாது என்று சொல்வது உங்கள் செல்வத்தையல்ல மாறாக உங்களுக்கு வரும் பிரச்சினைகளையும் சோதனைகளையும் தான்...!!.

✶

நம் வாழ்க்கை ஒன்றும் கிரிக்கட் மைதானம் அல்ல நாம் விளையாட மற்றவர்கள் பார்த்து ரசிப்பதற்கு.

வாழ்க்கை என்பது ஒரு குத்துச்சண்டை போர்க்களம் நீ திருப்பி அடித்தால் தான் உனக்கான பாறாட்டும் அங்கிகாரமும் போர் முடிவில் கிடைக்கும்.

✶

மனிதா நீ

எச் சூழ்நிலையிலும் உன்னை ஈன்றெடுத்தவர்களை மறந்து விடாதே!!

ஏனென்றால் அவர்கள் உன்னை மறந்திருந்தால் நீ இன்று நல் நிலமையில் இருந்திருக்க போவதில்லை ஆகையால் அவர்களை கைநழுவ விடாதே..!!

✶

சிலருடைய சிரிப்பில் ஆயிரம் அர்த்தம் இருக்கும் இன்னும் சிலருடைய அழுகையில் ஆயிரம் அர்த்தம் இருக்கும் ஆனால் ஒரு சிலரது மௌனத்தில் மாத்திரமே எண்ணிலடங்கா வலிகளும் வேதனைகளும் சொல்லிலடங்காதளவில் இருக்கும்.

அவர்களது இதயத்தின் வலிகளின் ஆழத்தை மனிதர்கள் யாருமறியாது அவர்களது கண்கள் தனிமையில் சிந்தும் கண்ணீர்த் துளிகள் மாத்திரமே தீர்மானிக்கும்.

✶

நிரந்தரமில்லா இவ்வுலக வாழ்வில்

எதற்காக இத்தனை போட்டியும்,பொறாமையும், பகைமையும்? இனியும் வேண்டாம் களைந்து எறிவோம் மனக்கசப்புக்களை!!

நாமும் வாழ்வோம் பிறரையும் வாழவைப்போம்.

வேகமாக சுழன்று கொண்டிருக்கும் இக் காலச்சக்கரத்தில் இதுவேல்லாம் தேவைதானா இறை படைப்பினையேற்று இப்புவிதனில் வீற்றிருக்கும் மனிதா...???

✶

உண்மையான நட்பு எதுவென்றால்

உன் நண்பன் உன்னை வழிகேட்டின் பக்கம் அழைக்கும் போது நீ அவனிடத்தில் உன் நட்பு எனக்கு இம்மையில் மட்டுமல்ல மறுமையிலும் கிடைக்க வேண்டுமென ஆசைப்படுகிறேன் என்று கூறி அந்த நண்பனை வழிகேட்டிலிருந்து நேர்வழிப்படுத்த முயற்சிப்பதாகும்..!!

✶



**ஆஷிக் ஹூசைன்**
ஹெம்மாதகம. இலங்கை

# பூமாக்கிழவி –22

ரிஸ்வான்

தேநீர் நேரக்கதை



– ரிஸ்வான்



பூமாக்கிழவி எனும் ராக்காச்சி

தொடர் நாவல்

பூமாக்கிழவி படு குஷியா கூனிப் பாளயத்தாரு டிராக்டரை விட்டு இறங்கி குடிசைக்கு போச்சு.. மனசுக்குள்ள மத்தாப்பு.. கலர் கலரா...சும்மா பேச்சு வாக்குல சொன்னதை செஞ்சித்தரேன்னு கூனிப்பாளையத்தாரு ஒத்துக்குவாருன்னு பூமாக்கிழவி எதிர் பாக்குல.. உஸ்கூலு கட்டித்தரது சாமானிய விஷயமா..ஒரு கோயில் கட்டுறதுக்கு சமம்.

பூமாக்கிழவி குடிசைக் குள்ளாற நுழைஞ்சிது...

கிழவிக்காக காத்திருந்த யசோதா பூனை மாதிரி எந்திரிச்சி..

தே.. கிழவி வந்துடுச்சி.. வா போவுலாம்..

சும்மா இரு டீ கொஞ்ச நேரம் இப்பத்தான் வெய்யில்ல செத்து சுண் ணாம்பா வந்திருக்கும்.. எரிச்சப்படும் நாழி யாவட்டும்.. ஆத்தா மொதல்ல பசியாறட்டும்... பொறுமையா பேசிக்கிடலாம்..

லூசா நீயீ.. கெழவி கஞ்சி குடிச்சிட்டு காலை நீட்டி ஆயாசமா படுக்குற பொம்பளையா அது.. வேற எங்கனாச்சும் கௌம்பி போயிரும்.. அப்புறம் நாமத் தான் போலீஸ்க் காரனுக்கு பதில் சொல்லனும்... காயித்தல கைநாட்டு வேற வச்சிருக்கோம்.. கெழவி இல்லன்னா நம்மள கொண்டுபோயிருவான்.

உனக்கு ஆத்தா மேல ஒரு பொச்சரிப்பு இருந்து கிட்டே இருக்கு டீ ..அது எப்பவும் உன்னை நாய் மாதிரி பிராண்டி கிட்டே இருக்கு.. மனசுக்குள்ளாற..

சப்பிரமணி காலையில கொளுத்து வேலை செய்யும்போது சென்ட்ரிங்

பலகையில இருந்த ஆணிக் குத்தி ரத்தப் போக்கு ஆயிடுச்சு..ஆஸ்பத்திரிக்கு போயி கால்ல கட்டு போட்டுக்கிட்டு படுத்து கிடந்தவன் உசுரை உளுக்கி எடுத்துச்சி யசோதா..

சுப்பிரமணி முனகி கிட்டே எந்திரிச்சி நொண்டி அடிச்சிக்கிட்டே யசோதா கூட கிழவி குடிசைக்குப் போனான்.

என்னாலே திருட்டு ஓணான் சோலிக்கு போவுலியா...என்ன சோடி போட்டுக் கிட்டு வந்திரிக்கீங்க..

வலது கால்ல ஆணி தச்சிடுச்சு ஆத்தா... ஆஸ்பத்திரிக்கு போயிட்டு வந்தேன்.. மேஸ்திரி ஊட்டுக்கு போவ சொல்லிட் டாரு..

பீடை மூஞ்சிக்கு சோலி கிடைக்கா தாம்.. சோலி கெடச்சாலும் கூலி கிடைக் காதாம்..

என்ன ஒன்னா சோடிப் போட்டுக்கிட்டு என் எதுக்க வந்து நிக்கீங்க..

யசோதா சுப்பிரமணியை யசோதா பக்க வாட்டுல இடிச்சிது..

கெழவிக் கிட்ட சொல்லுயா...

என்ன பொட்ட நாயீ பக்கவாட்டுல சீண்டுது..பார்த்து காலைத்தூக்கி உன்மேல மோளப் போவுது.

ஒண்ணுமில்ல ஆத்தா.. உச்சிவேலையில உன்னைத்தேடி போலீஸ் வந்துச்சி.. ஒன்னைப் பத்தி விசாரிச்சிது...

அத பத்தி என்ன... போலீஸ்க் காரன் பொஞ்சாதிக்கு பிரசவம் பாக்க கூட்டிப் போக வந்திருப்பான்..சாவகாசமா பேசுச்சு கிழவி..

ஐயோ அது இல்லை ஆத்தா.. ஒன்னோட பழைய போட்டாப் படத்தை காட்டி அது நீதானான்னு வெசாரிச்சிது..

நீ என்ன சொன்ன..

அது நீதான்னு... சொன்னேன்

அது நீதான் ஆத்தா இந்த கிராமத்துக்கு வந்த காலத்துல நீ அப்படித்தான் இருந்தே.. அப்ப நான் நிஜாரு கூட இல்லாம சுத்திக் கிட்டு சின்ன பையனா இருந்தேன்..நெனைப்பிருக்கு..

பூமாக்கிழவி முகம் சட்டுன்னு மாறிப் போச்சு..

பொறவு என்ன நடந்துச்சி..

நீ வந்தா குடிசையில தங்கி இருக்க சொல்லுச்சு.. பொறவு வாறேன்.. னு சொல்லிட்டு யாருக்கோ போன் பண்ண போயிடுச்சு...

கெழவிக்கு கோவத்துல உச்சி தீஞ்சி போச்சு..வெளியே காட்டிகிடுல.. மத்த விஷமா இருந்தா கிழவி கூந்தலை விரிச்சி போட்டுக் கிட்டு புருஷன் பொண்டாட்டி மேல ஏறி நின்னு ருத்திர தாண்டவம் ஆடி பிச்சி எறிஞ்சி இருக்கும்...

ஆத்தா குடிசையில இரு ஆத்தா எங்கிட்டும் போயிராத.. பொறவு நாங்க மாட்டிக் கிடுவோம். வெள்ளைக் காயித்துல கை நாட்டு வச்சிருக்கோம்..

இந்த பூமாக்கிழவி திருட்டு முண்டை இல்லை.. போலீஸ் நாயிங்களுக்கு பயந்து கிட்டு ஓடுறதுக்கு... நான் பூமாக்கிழவி கிட்டே போயி.. பொஞ்சாதி

முத்தானையில சுத்திக் கிட்டு ஒளிஞ்சிக்க... பண்டீங்களா... போங்க..

பாத்தியா... கெழவி தப்பு தாண்டாக் காரிதான்

எப்படி சுர்ருன்னு கோபம் வருதுப் பாரு... அப்படியே மூஞ்சி இருட்டி கிடுச்சி கவனிச்சியா... கிழவி அங்கிட்டு இங்கிட்டு நகரட்டும்... கயித்துல கட்டி வேப்ப மரத்துல தலைக்கு கீழ தொங்க விடுறேன் பாரு.. நீ வா போவலாம்..

பூமாக்கிழவி ரொம்ப நேரமா காலை நீட்டி உக்காந்து எதையோ யோசிச்சு கிட்டே... இருந்துச்சி. இடுப்புல இருந்த சுருக்குப் பையை விரிச்சி கம்மார் வெத்தலையை எடுத்து கொட்டைப் பாக்கு வச்சி மடிச்சு வாய்க்குள்ள போட்டு மெல்லுச்சி... நாக பாம்பை போல நாக்கை வெளியே நீட்டி நுனி நாக்குல சொட்டுக்கானு சுண்ணாம்பை தடவிச்சு.. பாலக்காடு புகையிலையை கிள்ளி விரிச்சி ஓலைப்பாய் சுருட்டுறாப் போல சுருட்டி கடவாப் பல்லு பக்கம் வச்சி திணிச்சிது...

கிழவியோட புத்தி அது கிட்ட நிலையில நிக்கில... எதையோ தீவிரமா யோசிச்சி கிட்டு இருந்துச்சி... சுருக்குப் பையை திறந்து உள்ள இருந்த மிச்ச சுருட்டை எடுத்து பத்த வச்சி யோசனையோடு தம் அடிச்சிக்கிட்டு இருந்துச்சி...

இம்புட்டு காலத்துக்கு பொறவு எப்படி தாணாக்காரவுங்களுக்கு நான் இருக்குற இடம் தெரிஞ்சிது... எப்படி என்னைத் தேடி கண்டு பிடிச்சுது..

பூமாக்கிழவி சாரைப் பாம்பு தலையை தூக்குறாப்போல விருட்டுன்னு எந்திரிச்சிது... சுருட்டை அணைச்சி சுருக்குப் பையில வச்சிக்கிட்டு குடிசையை விட்டு வெளியே வந்துச்சி... யசோதா குடிசை வாசல்ல உக்காந்து பூமாக்கிழவியை நோட்டம் போட்டு கிட்டு இருந்துச்சி..

கிழவிக்கு உச்சிமுடி இன்னும் பத்தி கிட்டு எரிஞ்சிது...

பொட்ட சிறுக்கி பூமாக்கிழவிக்கு காவல் காக்கியா... நன்றி கெட்ட எச்சிக் கலை நாயீ..

பூமாக்கிழவி... சோலிய பாக்க போறேன்... எந்த நாயீ வந்தாலும் காத்திருக்க சொல்லு பூமாக்கிழவி வந்து சாமியாடி குறி சொல்றேன்னு சொல்லு... எதுக்கும் கட்டுப் பட்டு ஒடுங்குற சாதியில்லை இந்த ஆத்தா... எவனுக்கும் பயப்புடுறவ இல்ல இந்த பூமாக்கிழவி... நெஞ்சு மேல ஏறி நின்னு ருத்திரதாண்டவம் ஆடி துவம்சம் பண்ணுற ராக்காச்சி...

பூமாக்கிழவி விர்ருன்னு நடக்க ஆரம்பிச்சிது...

இனி கிழவிக்கு குறுக்கால போவுறது நல்லதுக்கு இல்லை... ஆத்திரத்துல நெஞ்சை கிழிச்சிறும். கிழவி உக்கிரத்தோட உச்சத் துல இருக்கு, யசோதாவுக்கு நல்லதாவும் தோணல... குழந்தைக்கு பால் கொடுத்துக் கிட்டு... சும்மா இருந்துடுச்சி...

ராத்திரி ஆயிடுச்சு.. பூமாக்கிழவியும் திரும்பி வரல.. போலீஸ்க்காரணும் வரலை..

தொடரும்

பலரின் தாகத்தை
தணித்த கிணறு
இப்போது மாறியது
குப்பை தொட்டியாக

கோ.பவித்ரா, காஞ்சிபுரம்

# காதல் போர்வை

மாமா உன் நினைப்புல தான்
ஒரு மாமாங்கம் காத்திருக்கேன்
மனசுக்குள்ள ஊஞ்சல் கட்டி
மயக்கத்தோட பாத்திருக்கேன்

மாலைக் கருக்கலிலே மஞ்சக் காட்டு
பக்கமெல்லாம் கொஞ்சி நின்ன
நினைப்பெல்லாம் மனசில்
கூடு கட்டிப் போகுதையா!

அந்திவானம் பாக்கையிலே உன்
குறும்புத்தனம் நினைப்பினிலே
வந்து வந்து கன்னத்துல
செங்குழம்பை பூசுதையா
வெட்கம் வந்து மூடுதையா!

வளையோரம் நண்டு ரெண்டு
களிப்போட கொஞ்சயிலே
ஒன் நெனைப்பு வந்து நெஞ்சோரம்
மஞ்சமிட்டு செல்லுதையா

கொஞ்சும் கிளி ஜோடியொன்னு
மூக்கோடு மூக்குரச  உன் முத்தமழை
காட்டுக்குள்ளே சுவாசம் தொலைச்ச
கதை இனிப்பைத் தடவுதையா

பட்டணம் போனவரு பறந்தே வருவதாக
சேதி ஒன்னு வந்திடவே
றெக்கை கட்டி பறக்கிறனே
எட்டி வானம் தாவுறனே

கம்மாக் கரையோரம்
கூதக்காத்து வீசயிலே
குருவியாட்டம் நடுங்குறனே
குடிசைக்குள்ள ஒண்டுறனே

கைப்பிடிச்ச ஆசை மாமா
காலங் கடக்குமுன்னே
கடிசாக வந்திடுங்க-
உங்க காதலால போர்த்திடுங்க

- வஃபீரா வஃபி



# விழிநிரப்பிய கனவுகள்.

காலையில கண்விழிச்சு கொழுந்து பறிக்கப்போறவளே
ஆலையில கரும்புபோல ஆனதடி உன்வாழ்வு

தோட்டத்தில இலைபறிச்சு கூடையில போடுறியே
வாட்டத்தில மனசிருக்க கூடையைத்தான் நிறைக்கிறியே

பனிமறையாக் காலையில பணிபுரியப் போறவளே
விழிநிறையக் கனவடுக்கி விடியலைத் தேடுறியே

மழைப்பொழுது வந்துவிட்டால் வீடெல்லாம் நீராச்சு
மணல்மேடு சரியுமென்று அச்சமே வாழ்வாச்சு

பசியில அழும்பிள்ளை பசியாற வழியில்ல
பள்ளிக்கூடம் போவதற்கும் வசதிகள் எதுவுமில்ல

மலைமலையாய் நீயேறி இலைபறிச்சு வாரவளே
நிலைமாறும் நல்வாழ்வு எப்போதுன் வசமாகும்

உழைத்துக் களைத்தாலும் போதாத வருமானம்
உன்குடும்பம் பசியாற நீதானே அடமானம்

தலைமுறைக்கு இதுவே வழக்கென  ஆனதிங்கு
தலைநிமிர்ந்து மலையகப்பெண் சிறக்கக் காண்பதெங்கு

மக்கொனையூராள்

# காதலர் தின வாழ்த்துகள்

●

எண்ணிரண்டில் பார்க்கும்; இதயங்கள் மோதும்பின்
கண்ணிரண்டில் பேசுங் கதைநினைந்து - விண்ணிருண்டால்
தாகத் தவிப்பால் தலையணையின் பஞ்செரியும்
ஆகத் தணலுண்டே ஆங்கு.

●

செல்பேசி ஓசைச் செவிக்கிசையாங் காதலர்கள்
இல்பேசும் பெற்றோர் இழுக்காவர் - உள்பேசும்
சொல்லாடல் இன்பத்தில் சோகந் தொலைத்துவிடும்
மல்லாந்தே எண்ணும் மனம்.

●

சந்திப்ப தெங்கென்று சாற்றும்; அதையிரவின்
சிந்திப்பில் தானே சிரித்துவிழும்; - அந்தியெல்லாந்
தேங்கிடாமல் செய்திப்போய்த் தேயும் விசைப்பலகை
ஆங்கிலஞ்சேர் செந்தமிழில் ஆங்கு.

●

மல்லிக்கீ டில்லா மணங்கொள் ஒருரோஜா
கிள்ளிப்பை தன்னில் கிடத்திவைப்பான் - அல்லிப்பின்
தொங்கும் பலமிருந்துந் தோற்றே குழல்சேர
அங்கைதான் சூடும் அதை.

●

மன்கை வருடப்போம் மஞ்சப் பொழுதெண்ணித்
தன்கையே பற்ற தனமிரண்டை - மென்கையில்
முத்தாய்ப் பெயரெழுதி முத்தமிட்டுக் கண்விழித்தே
புத்தகத்தின் உள்ளொளிப்பாள் பூ.

●

வஞ்சிக் குளிக்குங்கால் வாளிவழிந் தோடும்நீர்
நெஞ்சிற்கை வைத்தே நினைந்துருக - மிஞ்சும்
நுரைமேனி மூடி நுதல்சேரக் கட்டி
கரைந்தோடி ஆகும் கடுகு.

●

பத்திரண்டு மெய்விரலும் பாவையெழில் தொற்றிநிற்கும்
வத்திரங்கள் அற்றே வருங்கனவில் - அத்தருணங்
கள்ளூறும் வாயுண்ணக் கண்ணறியா ஓர்விரலோ
உள்ளூரும் மேன்மேல் உயர்ந்து.

●

பின்முதுகில் நான்காம் பிணைக்கனிகள் ஆண்சுமந்து
முன்முகிழ்ந்தே துள்ளுந்து முன்னேற - பொன்முகத்தாள்
வேகத் தடையதிர்வை வேண்டி அணைப்பாள்மன்
தேகத்(து) அதிர்வேற்கத் தேர்ந்து.

●

காலை முதலே கனவேறுங் காதலர்கள்
லீலையெல்லாம் பேசி லயித்திருக்க - வேளையெல்லாம்
பாவாய்த் தளிரெழிலைப் பஞ்சணையில் ஏற்றிவிடும்
பூவாளி வேந்தன் பொருள்.

●

மன்னவனைப் பெற்றோர் மணமகளும்; காதலிக்கும்
பெண்ணவளைப் பெற்றோர்மாப் பிள்ளையொன்றும் - எண்ணியெண்ணி
ஓசையில் லாமல் ஒருங்கிணைந்தே தேடிடுவார்
ஆசையறி யாமல் அலைந்து.

●

செப்பும் அறத்தைச் செவிமடுக்கும்; அவ்விளமை
அப்பொழுதுங் கண்ணீர் அணிதிரட்டும்; - முப்பொழுதும்
உற்றார் புலம்பி உளம்நோகக் காதலுள்ளம்
பெற்றோர்க்காய் மாற்றம் பெறும்.

●

பந்தல் நிழலாடப்; பந்தி ரசமன்ன
வந்தவர்கள் வாழ்த்தும் வழிந்தோட ; - சிந்திக்கண்
நேற்றை மனஞ்சுமந்தே நெஞ்சிரண்டுஞ் சேர்ந்துவிடும்
வேற்று மணவறையில் வெந்து.

●

உண்டச் சுவையெல்லாம் உள்ளிருக்க ஓர்கணத்தில்
கண்டால்அந் நாற்கண்ணீர்க் காலோடும் - பெண்டாளோ
மைவிழியில் தூசென்று மாற்றி உரைத்திடுவாள்
கைப்பிடித்தோன் கேட்கக் கவிழ்ந்து.

●

எல்லைக் கடந்தும் இதயக்கா தல்பெயரைச்
சொல்லி ரசிக்குஞ் சுகங்காணப் - பிள்ளைக்குச்
சாற்றி அழைத்திட்டால் சாகும் வரைவலியை
ஆற்றுகின்ற மாமருந்தாம் அஃது.

●

கோடி அனுபவத்தைக் கொண்டும் உளம்மறைத்தே
ஆடி மகிழ்ந்திருக்கும் அவ்விரண்டும் - மூடிவைத்த
அத்தனையும் தானறிந்து ஐயோ! தனிமையிலே
புத்தகத்துள் காயும்;அப் பூ.

**- ஏடி வரதராாசன்**



# சிறுவர்கள் சங்கமம்

## குளிக்க ஆசைப்பட்ட நிலா

அன்றைக்கு கடலில் நீச்சலடித்துக் குளிக்கணும் என்று நிலாவுக்கு ஆசையா இருந்தது. ஆனால் அமாவாசை அன்று வெளியில் எங்கும் போகக்கூடாது, வீட்டில் தான் குளிக்க வேண்டும் என்பது வழிவழியாக வந்த வழக்கம். அதனால் நிலாவால் வீட்டை விட்டு வெளியே போக முடியாது.

நேரமாக, ஆக நிலாவால் அதன் ஆசையை அடக்க முடியவில்லை. எப்படி யாவது வெளியே போய் குளிக்க வேண்டும் என்று யோசனை செய்தது. ஒரு வழியும் தெரியாமல் கவலையாக உட்கார்ந்து இருந்தது. அப்போது நிலாவின் நண்பர்கள் நட்சத்திரமும், குட்டி மேகமும் நிலாவைப் பார்க்க வந்தனர்.



“என்னாச்சு நிலா, ஏன் இவ்வளவு கவலையாக இருக்கிற... வா விளையாடலாம்” கேட்டபடியே வந்தது நட்சத்திரம்.

“இல்லை, நா விளையாட வரலை” நிலா சொன்னதும், “அட, இன்னும் நீ குளிக்கலையா, எவ்வளவு நேரமாகி விட்டது... ஏன் குளிக்கவில்லை? உடம்பு ஏதும் சரியில்லையா நிலா?” குட்டி மேகம் விசாரித்தது.

‘‘அதெல்லாம் ஒன்றும் இல்லை மேகமே, எனக்கு கடலில் நீச்சலடித்துக் குளிக்கணும் என்று ஆசையாக உள்ளது, அதான் எப்படி குளிக்கப் போகலாம் என்று யோசித்துக்கொண்டே இருக்கிறேன்”நிலா சொன்னது.

“அதெப்படி, இன்னைக்கு அமாவாசை, நீ வெளியே போகக் கூடாதே, வீட்டில் தானே குளிக்க வேண்டும்” என்றது நட்சத்திரம்

“ஆமாம்... தெரியும் தான், ஆனாலும் ஆசையாக இருக்கிறதே, எப்படியாவது

இன்றைக்கு நான் கடலில் குளிக்க ஒரு யோசனை சொல்லுங்களேன் பா” ஆவ லோடு நட்சத்திரம் மற்றும் மேகத்தின் முகங்களைப் பார்த்தது நிலா.

“பொறு... பொறு... யோசிப்போம்” மேகம் சொன்னது.

“நீங்கள் யோசித்துக் கொண்டே இருங்கள்... எனக்கு நேரமாகிறது, நான் போகிறேன்” என்றவாறே குடுகுடுவென ஓடியது நிலா.

“ஏய் நிலா, ஓடாதே... நில்லு” நட்சத்தி ரமும், குட்டி மேகமும் கூப்பிடும் சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தது பூமி.

பார்த்தால் யார் கூப்பிடுவதையும் கவனிக்காமல் சூரியனின் பக்கத்தில் போய் விட்டது நிலா. சூரியனிடம் நிலா போனால் சுட்டுவிடுமோ என்ற பயத்தில் நிலாவை அழைத்தபடியே பூமியும் வந்தது. ஆனால் கடலில் குளிக்கப் போகும் ஆர்வத்தில் நிலா எதையும் கவனிக்காமல் போய்க் கொண்டே இருந்தது.

திடீரென பார்த்தால் நிலா... சூரிய னுக்கும், பூமிக்கும் இடையே வந்து விட்டது. அதனால் பூமிக்கு சூரியனின் வெளிச்சம் கிடைக்காமல் ஒரே இருட் டாக ஆகிப்போனது. பூமியில் வாழும் உயிரினங்கள் எல்லாம் வெளிச்சம் கிடைக்காமல் பயத்தில் சத்தம் போடத் தொடங்கின.

அதற்குள் சூரியனைச் சுற்றி ஒளி வளையம் ஒன்று பளீர் வெளிச்சமுடன் தோன்றவும் அனைவரும் பயத்துடன் பூமிக்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டது. வேற்றுக்கிரக வாசிகள் யாரேனும் வந்து விட்டார்களா? இன்றைக்கே பூமி அழியப்போகுதோ என்னவோ?







கி.பிரியதர்ஷினி ஒன்பதாம் வகுப்பு
செயின்பேட்ரிக் மேல்நிலைப்பள்ளி புதுச்சேரி

என்று கூச்சலிட்டவாறு அங்குமிங்கும் ஓடினர். வானவியல் மற்றும் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் இது குறித்து உடனடி யாக ஆராயத் தொடங்கினார்கள்.

சூரியனை முழுவதுமாககடந்தநிலாவை நட்சத்திரமும், குட்டி மேகமும் ஓடிவந்து பிடித்து "ஏன் நிலா சூரியனை மறைத்தாய்? பூமியில் இருந்த உயிரினங்கள், மனிதர்கள் அனைவரும் பயந்து குழம்பிப் போயினர். நாங்களும் சூரியனால் உனக்கு ஆபத்து வருமோ என்று பயந்து போனோம்" எனக் கேட்டன.

"என்னது... நான் சூரியனை மறைத் தேனா? எனக்கு எதுவும் தெரிய வில்லையே... அச்சோ இப்போது நான் வெளியே வந்தது தெரிந்தால் எல்லோரும் என்னைக் கேள்வி கேட்பார்களே" என்ற நிலா குடுகுடுவென ஓடி பூமியில் இருந்த கடலுக்குள் விழுந்து மறைந்து கொண்டது.

"சிறிது நேரம் வெளிச்சம் இல்லாமல் இருந்ததற்கு பூமிக்கும், சூரியனுக்கும் நடு வில் நிலா வந்ததுதான் காரணம். இதற்கு பெயர் சூரியகிரகணம். அமாவாசை அன்று தான் இந்த சூரியகிரகணம் வரும். இதனால் பூமிக்கு எந்தவிதமான ஆபத்துமில்லை, இயற்கையாக நடக்கிற விசயம்தான் இது" என்று அறிவியல் அறிஞர்கள் அறிவித்தனர்.

அப்பாடா, பூமிக்கு எந்த ஆபத்தும் இல்லை என்று பயம் நீங்கிய மக்கள் வழக்கம் போல் வேலை செய்யத் தொடங்கினர்.

அன்று மாலை வரை கடலுக்குள்ளே மறைந்து இருந்த நிலாவிற்கு வித்தியாச மான நல்ல வாசனை வந்தது. எங்கேயிருந்து இந்த வாசனை வருகிறது என்று சுற்றி முற்றி நிலா தேடும் பொழுது "உனக்கும் வடை வேண்டுமா நிலா?" என்று நிலாவில் வடை சுட்டுக் கொண்டு இருந்த பாட்டி கேட்டார்கள்.

"ஆமாம், இவ்வளவு நேரமாக கடலுக் குள்ளேயே மறைந்து இருந்து நீச்சலடித் ததால் வயிறு மிகவும் பசிக்கிறது. நிறைய வடை தாருங்கள் பாட்டி" பேசியவாறே நாலைந்து வடைகளைச் சாப்பிட்டது நிலா.

வயிறு நிரம்பியதும் மகிழ்வுடன் கடலில் இருந்து வானத்திற்கு சென்றது நிலா. அதுமுதல் எப்போதாவது அமாவாசை அன்றும் குளிக்க ஆசைப் பட்டால் நிலா கடலுக்கு வருவதும், மக்கள் சூரிய கிரகணம் என்று கண்களுக்கு பாதுகாப்புடன் பார்த்து மகிழ்வதும் வழக்கமாக இருந்து வருகிறது.

**சு.பிரவந்திகா**
பட்டாபிராம், சென்னை

## மன வேற்றுமை

**பேராசை உருவெடுக்கும்**
**பொருளாசை போர்த்தொடுக்கும்**
**உறவோடு வெறுப்பு தோன்றும்**
**கருத்து பரிமாற்றங்கள் கசியும்**
**செயலை மாறுப்படுத்தும்**
**பகைமை உருவாகும்**
**நட்புறவு விலகும்**
**கூடி வாழ்வதை தடுக்கும்**
**கூடாநட்பை சேர்க்கும்**
**இதனால் மனவேற்றுமை பிறக்கும்**
**வெறுப்பனவற்றை செய்வானாயின்**
**அவரோடு இணைந்து மாறுபடுத்துவோம்**
**நன்மை நடப்பதே செயலாக்குவோம்**
**விட்டுக் கொடுத்து விளையாடுவோம்**
**அண்டத்தை ஆனந்தத்தால் நிரப்புவோம்**
**மனவேறுபாட்டை மறப்போம்!**



ம.குசன்
சென்னை

# வனம் ஓர் பார்வை

தவளகிரி மலையை ஒட்டியுள்ள வனத்திற்கு தான் நாம் போகிறோம். நம்மை வரவேற்பதற்கு ஏற்றவாறு அங்கு இருந்த மரக்கிளைகளில் குரங்குகள் காணப்பட்டன. குரங்கு குட்டிகள் விளையாடிக் கொண்டு சண்டை போட்டுக் கொண்டும் காணப்பட்டன. மரக்கிளையில் அமர்ந்திருந்த பறவைகள் கூச்சல் மேல தாளங் களை தோற்கடிக்கும் வகையில் இருந்தன. இதைத் தாண்டி காட்டில் உள்ளே சென்றால் முயல் குட்டி, கரடி மாமா ஒட்டகச்சிவிங்கி அண்ணா, குதிரை தம்பி, யானை, மான் வகைகள் என தாவரங்களை உண்ணும் விலங்குகள் ஒற்றுமையாகவும் கூட்ட மாகவும் விளையாடிக் கொண்டு இருந்தன.

'இளங்கன்றுகள் பயமறியாது' என பழ மொழிக்கேற்ப குட்டியானைகள், குதிரைக் கன்றுகள் என அங்கும் இங்கும் ஓடிக்கொண்டே இருந்தன. காட்டில் அருவிகள் சிறு சிறு ஓடைகள் அங்கும் இங்கும் காணப்பட்டன. அதில் மீன்கள், தவளைகள், நண்டுகள் விளையாடிக் கொண்டே நீந்தியும் மகிழ்ந்தன. ஆற்றில் விலங்குகள் நீந்தி விளையாடிக் கொண்டிருக்கும். அதில் உள்ள ஆபத்தை அறியாமல் இருந்தன. நீரில் விச பாம்புகள், முதலைகள் மறைந்து இருந்து விலங்குகளைத் தாக்கும்.

பறவைகள் மரக்கிளையில் கூடு கட்டி தன் இனப்பெருக்கம் செய்து தன் குஞ்சுகளுக்கு உணவு ஊட்டி வளர்த்து கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொண்டு வரும். ஆண் மயில் தோகை விரித்து ஆடும் போது பார்க்க இரண்டு கண்கள் போதாது. மழை வருவதை உணர்த்தும் வகையில் மயில் அகவும். தோகை விரித்து ஆடி மழையை வரவேற்கும்.

எறும்புகள் சாரை சாரையாக மழைக்காலத் திற்கும், எதிர்காலத்திற்கும் தேவையான உணவு களைத் தன் புற்றில் சேமித்து வைத்துக் கொள்ளும்.

## விடுகதை

1.
உச்சியில் கிரீடம் வைத்தவனுக்கு
உடம்பெல்லாம் கண்
அவன் யார்?

2.
பச்சை மரம் முழுவதுமே
பளபளக்கும் மஞ்சள் பந்து
முகர்ந்து பார்த்தால் மணக்கும்
தின்று பார்த்தால் புளியாய் புளிக்கும்
அது என்ன?

3.
வீடு ரெண்டு
விடுதி பதினாலு
ஆடும் பெண்கள் எழுபது பேர்
ஆட்டி வைப்பார் இரண்டு பேர்
அது என்ன?

4.
அனல் மேல் கருப்பு நிலா
அதன் மேல் வெள்ளையன் காய்கிறான்
அது என்ன?

- நா.கீதா



விடை
1. அன்னாசி
2. எலுமிச்சை பழம்
3. பல்லாங்குழி
4. தோசை

வேலைக்கார தேனீக்கள் தொடர்ந்து பூவிலிருந்தும், பழங்களில் இருந்தும் இருந்தும் தேனை சேகரித்துக் கொண்டே இருந்தன. பட்டாம்பூச்சி, தும்பிகள் அங்கும் இங்கும் பறந்து கொண்டே இருந்தன.

பூனை இனமான புலி, சிறுத்தை, சிங்கம் போன்றவை வேகமாக ஓடும் திறன் கொண்டவை, பசித்தால் மட்டுமே தானே வேட்டை ஆடிய உணவை மட்டுமே உண்ணும்.

புலியும், சிறுத்தையும் பார்ப்பதற்கு ஒரே மாதிரியாக இருக்கும். சிறுத்தை மரம் ஏறும் திறன் கொண்டவை. புலி காற்றில் தனது உணவை உணரும் திறன் கொண்டது.

சிங்கம் இயற்கையாகவே தனது பிடரி முடி ராஜாவின் தலைக்கவசம் போல காட்சி தரும். சிங்கத்தின் கர்ஜனை எட்டு கிலோமீட்டர் வரை கேட்கும். ஆண் சிங்கம் காட்டின் ராஜாவாக வலம் வரும். பெண் சிங்கம் எத்தனை குட்டி போட்டாலும் அதில் இரண்டு ஆண் குட்டி மட்டுமே ஈனும் அதற்கு உணவை வேட்டையாடும் திறன் வளரும் வரை பெண் சிங்கம் பேணிக்காக்கும்.

ஒரு நாள் முழுவதும் இந்தப் பகுதியில் பயணம் செய்த களைப்பு ஏற்படுவதற்கு முன் முடிந்துவிட்டது. இன்னும் அரிய நிகழ்வுகளைக் காண கண்கள் மறுபடியும் காத்துக் கொண்டுள்ளன.

**ஜீ.மைத்ரேயி**
வந்தவாசி







அர்ஷின் சனா சா அ
6 ஆம் வகுப்பு,
உடுமலைப்பேட்டை.



அர்ஷத் சைஃப் சா அ ,
6 ஆம் வகுப்பு ,
உடுமலைப்பேட்டை.





இரா.ஆதிரா



## ஆராய்ந்த நட்பு

**நண்பர்களை ஆராய்ந்து**
**நன்மை பல அறிந்து**
**நட்பினை நல்கி**
**நயத்துடன் பழகி**
**பாகுபாடில்லாமல் உறவாடி**
**மனதை களவாடி**
**எதிர்ப்பார்ப்பு சிறிதும் இல்லாதபடி**
**கேடு விளைவிக்காதபடி**
**நன்மை தீமையை அறிந்தபடி**
**நம்பிக்கை மட்டும் புரிந்தபடி**
**நல்வாழ்வு வாழும்படி**
**உண்மையை உணர்ந்தபடி**
**சிநேகத்தை சுவாசித்தபடி**
**நட்பை சரியாக ஆராய்ந்தபடி**
**இனம்,மொழி,மதத்தால் வேறுபட்டாலும்**
**நட்பு எனும் உறவு வேறாகாது**



ம.லவன்
சென்னை

**படிக்கணும்...**

பள்ளிக்கூடம் போகணும்.
பாங்காய் நீ படிக்கணும்.
பார்த்து நீ பழகணும்.
பார் பார்க்க நீ உயரணும்.

அவரைப்போல் இவனைப் போல்
இல்லாமல் நீ உன்னைப் போலவே
நீ இருக்கணும். முன்னவிட
உன்னையே நீ உயர்த்தணும்.

பாட்டி சொல் பேச்சைக் கேக்கணும்.
தாத்தா கருத்தை மதிக்கணும்
அப்பா அம்மாவுக்குத்
தக்க பையனா வளரணும்.
தம்பிப் பயலுக்கு அண்ணனா
என்றும் நீ இருக்கணும்



சசிகலா விஸ்வநாதன்

## பாப்பா பாப்பா

குட்டி பாப்பா
அச்சமில்லை என
உரக்கச் சொல்லு பாப்பா
அமைதியாய் இருந்து
அனுபவத்தை கற்றுக்கொள் பாப்பா
அடக்க வருபவரிடம்
அச்சமில்லை என
உரக்கச் சொல்லு பாப்பா
அன்பை தருபவரிடம்
அனைத்தும் சொல்லு பாப்பா
பாப்பா பாப்பா
எங்கள் செல்ல பாப்பா



- சித்ரா பாலன்



புவனஅபிராமி சி.ஆ



# அவனும் நானும்

தாமோதரன் சாது
சவூதி அரேபியா.

அவன் என்னை விட்டு போய் விட்டான் இனிமேல் திரும்ப வரமாட்டான்.

அவனிடமிருந்து நான் இதை எதிர் பார்க்கவில்லை.

எல்லாமே என் தப்புதான் . அவனை முழுசா நம்புனது என்னோட தப்புதான்.

'கனவில் கூட அவன் இப்படி செய்வான்' என்று நான் நினைத்துப்பார்க்கவில்லை.

'ஆட்டை வெட்டும் போதுதானே! ஆட்டிற்கே தெரிய வரும். தன்னோடு எஜமான் எதற்காக பழகினார்' என்று.

அது போன்று அவனும் சிரிச்சி.. சிரிச்சி.. பேசி.. பேசி.. மயக்கி நம்பிக்கை துரோகம் செய்துவிட்டான் படுபாவி.

இதற்கு மேல் உயிர் வாழ்ந்து நான் என்ன செய்ய? அவன் இல்லாத இந்த வாழ்க்கை வாழ எனக்கு விருப்பமில்லை. துக்கம் குடிக்கொண்டு மனம் எழுந்திருக்க முடியாமல் உட்கார்ந்துக்கொண்டது.

'என்ன செய்ய?... என்ன செய்ய?...' என்று உள்ளுக்குள் முளைத்த கேள்விக்கு விடை தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தேன்.

இப்படி விடிய.. விடிய..கண் விழித்து.. கண் விழித்து.. அவனோடு பேசி.. பேசி.. எனக்கு பழக்கமானான்.

அவன் அவனே.. பெயரில் என்ன இருக்கிறது?

அது அவனுடைய உண்மையான பெயரா?' என்று கூட தெரியாது.

திரைக்கு தேவை ஒரு பெயர். அவன் ஜோக்கர்-143 என்ற பெயரில் தான் அறிமுகம் ஆனான்.

அறிமுகம்.. அறிமுகம்.. எப்படி அறிமுக மானான்? யோசிக்க ஆரம்பித்தேன்.

சட்டென்று லேப்டாப் ஒப்பன் செய்தேன். 'இன்ஸ்டாவில் ஜோக்கர்-143' என்ற ஐடியின் தபால்பெட்டியை கிளிக் செய்தேன்.

தபால்பெட்டி என்றால் வேறு ஒன்றுமில்லை அதாங்க மேஸேஜ்..

நாங்கள் பேசியதை பார்த்துக்கொண்டு வந்தேன்.

கனவுகளில் நினைவடுக்குளை பார்ப் பது போல,

இதோ இங்கே இருக்கு! அவனுடைய முதல் செய்தி.!

“குட்மார்னிங் டியர்...”

‘அவனுக்கு உடனே பதில் கொடுக்க வில்லை. மாறாக நான் என்ன செய்துக் கொண்டிருந்தேன்’ என சிந்திக்க தொடங் கினேன்.

“குட்மார்னிங் டியர்...” அவன் சொன்ன தேதியை குறித்துக் கொண்டு டைரி யில் அந்த தேதியை பார்த்து அதிர்ந்து போனேன்.

அன்று.. அன்று..எனக்கு பீரியட்ஸ். அம்மா அப்பா வேறு ஊரில் இல்லை.

அதனால் தனிமை... தனிமை... தனிமை என்பது கொடுமை.. அதுவும் வலியும் சேர்ந்துக்கொண்டால்? ஒவ்வொன்றாக ஏதோ புரிய தொடங்கியது.

‘யோசி... யோசி...’ என்று மீண்டும் நினைவுகளை மீட்டத்தொடங்கினேன்.

‘செக்ஸ்’
‘கவர்ச்சி’
இல்லை இதில் எதுவுமில்லை.
‘இப்பருவத்தின் போதையோ?’

அன்று பீரியட்ஸ் மன அழுத்தம் அதையும் மீறி தனிமை வேறு. இது தான் காரணமோ?

வலியை பற்றி சிந்திக்காமல் இருக்க? வேறொன்றில் கவனம் செலுத்த வேண்டும். அது இதில் செலுத்தினால் என்னவென்று காரணம் தோன்றியது.

அவனுடைய ஐடிக்குள் போய் போட்டோக்களை பார்த்தேன்.

மறக்க நினைக்கும் நினைவுகளை
மனதிற்குள் பூக்க வைக்கும்
மந்திரம் அறிந்த ஒன்னு - புகைப்படம்

ஆளு பார்க்க ஹண்ட்சமாக இருக் கான். ஒரு மேஸேஜ் அனுப்பி தான் பார்ப்பமே...! என்ன நடந்துவிட போகுது? அந்த சிந்தனையில் இருக்கும் போதே ‘குட்மார்னிங்’ என பதில் கொடுத் தேன். வலியை மீறி வயிற்றுக்குள் அமிலம் சுரப்பது போலிருந்தது.

அவன் அதை பார்த்துவிட்டு பதில் கொடுக்காமல் இருப்பது நெஞ்சில் சுருக் கென்று தைத்து போன்று இருந்தது. வலிக்கு வலிக்கொடுத்தது.

சற்றும் எதிர்பாராத நேரத்தில் “சாரி டியர்.. சமைத்துட்டு இருந்தேன்.”

“ஐய்யோ...இதுக்கு எதுக்கு சாரி”

“பார்த்துட்டு பதில் கொடுக்காமல் இருந்ததற்கு”

“ஓஓஓஓஓஓ”

“...”

“உங்களுக்கு சமைக்கலா தெரியுமா?”

“ஏதோ கொஞ்சம்.. நான் ஒன்னு சொல்லவா?”

“ம்ம்....சொல்லுங்க”

“ஒரே ஒரு நாள் நீங்க சமைச்சீங்க”

“ம் நானு...சரி அப்புறம் என்னாச்சு?”

“டோட்டல் பமிலி க்லோஸ்”

“ஹா ஹா நாட் ஃபன்னி”

என்னை சிரிக்க வைப்பதும், அவன் சிரிப்பதும், நான் யோசிக்க ஆரம்பிக்கும் முன் அவன் பேச ஆரம்பித்துவிடுவதும்.

இப்படிதான் தினமும் ஏதோ ஒன்று பேசி.. பேசி.. அப்புறம் அது பெரும் பேச்சாகியது. மனசும் அதிலே பயணித்து இருக்கிறது.

'எது பயணம் செய்ய தூண்டியது?' என்று என்னால் காரணம் கண்டுபிடிக்க முடியவில்லை. இதுதான் மனகுறைவோ?

ஒரு வேளை வயசு காரணமா இருக்குமோ?

வெளிப்பார்வை இல்லாமலும் கண்ணுக்கு தெரியாத திரை இருப்பதாலும் கண்ட தோற்றங்கள் மனக்கிளர்ச்சிக்கு காரணமாயிற்றோ?

காரணமற்றது என்றாலுமே மனக் குறைவு ஏற்படுகிறது. காரணமற்றே நடந்த நிகழ்வும், காரணம் கொள்வதற்கு வேண்டிகாரணம்தான் போலுமோ?

முக்கால் வாசி அவன் அம்மாவை காரணம் காட்டி- பேசி.. பேசி .. அம்மாவை தூண்டிலில் புழுவா மாட்டி இரையை தேடி இருந்திருக்கிறான். நான்தான் தெரி யாமல் அதில் சிக்கிக்கொண்டேன்.

அவனுடைய தூண்டில் இழுத்த இழுப்புக்கெல்லாம் நானும் பின்னால் சென்றிருக்கிறேன்.

ஒரு நாள் சாயங்காலம் ப்ரொவ்சிங் சென்டரில் அவன் என் பின்னால் நின்றுக் கொண்டிருந்தான். எனக்கு ஐஸ் கட்டி களை வாரி வயிற்றில் கொட்டியது மாதிரி இருந்தது.

'இது எதிர்பாரத சந்திப்பா? இல்லை திட்டமிட்ட சந்திப்பா?' என்று அன்று யோசிக்க மனம் இடம் கொடுக்கவில்லை.

அவனை பார்த்த ஆனந்தத்திலும், இன்ப அதிர்ச்சியிலும் ஒரே குதூகலமாக இருந்தது.

ப்ரொவ்சிங் சென்டரில் ஒரே அறையில் அவனும் நானும்.

அவனுடைய கண்களை ஒரு நிமிஷம் கூர்ந்துப் பார்த்தேன். அவனுடைய பார்வை மகத்தானதாக இருந்தது.

ஏதோ ஒரு வகையில் அவனோடு பேசிய வார்த்தைகள் உன்னதமாக என் மனதில் ஓடிக்கொண்டிருந்தது.

'பேச்சினால் உணர்வுகளை வெளிச் சொல்ல முடியாது என நினைத்தானோ? 'இல்லை' 'குருட்டு தைரியமோ' என்று தெரியாமல் 'பளிச்' என்று கையைப் பிடித்துவிட்டான்.

அந்த கணம் என் தேகம் முழுவதும் மயிர்க்கூச்செரிந்தது.

'அவன் கையை பிடிப்பான்' என்று நினைத்தது கிடையாது. என்ன நம்பிக்கையில் நான் தட்டிவிடாமல் இருந்தேன்? செயல்களை நினைத்துப் பார்க்கவில்லையோ? பின்னால் செய்ய போகிற நிகழ்வையும் நினைத்துப் பார்க்கப் போவதுமில்லை. செயலை வைத்துதான் திட்டங்களும், சிந்தனைகளும் தோன்ற காரணமாயிற்றோ?

'இப்படி பிடித்த கையை கடைசி வரை விடமாட்டேன் டி' என்று அவனுடைய பார்வை சொல்லியது. அவன் கண்கள் பிரகாசத்தோடு ஜொலித்தது.

இந்த பார்வையை பார்க்க முடியாமல் வெடுக்கென்று கையை விடுவித்துக் கொண்டு தலையை அந்த பக்கம் திருப்பிக்கொண்டேன்.

அவன் என் முகத்தை அவனுடைய முகத்திற்கு நேராக திருப்பினான். அவனுடைய பார்வை என்னை ஊடுருவி துளைத்துச் சென்றது.

பூமியில் மின்னல் பாய்ந்தால் என்ன நிகழுமோ! அது எனக்குள் நிகழ்ந்தது.

அவனுடைய கை என் முகத்தில் ஏற்பட்ட ஸ்பரிசம் எனக்குள் ஆயிரம் மின்னல்கள் பாய்ந்தது போலிருந்தது.

'இது என்ன உணர்வு' என்று உணர் வதற்குள் திடீரென்று என் நெற்றியில் முத்தமிட்டான்.

மனமோ 'இது துன்பம்.. இது துன்பம்' துன்பத்தை மனக்கண் திறந்து எச்சரித்துக்கொண்டிருந்தது.

உடம்போ 'இது இன்பம் இது இன்பம்..' இன்பவேதனையை கண்மூடி அனுபவித்துக்கொண்டிருந்தது.

முத்தமா இது? இல்லை உயிரின் திறவுகோலா? சுகானுபவம் நீர்போல பெருக்கெடுத்தது. அடக்கிவைத்திருந்த நீர்தேக்கம் மடைதிறந்த வெள்ளம் போல் வெளியே பாய்ந்து ஓடியது.

அறையை விட்டு வெளியே வந்தோம். ஒருவரையொருவர் பார்க்க முடியாமல் தலை திருப்பிக்கொண்டோம்.

அவன் பதித்த முத்தங்களும், நடுநடுவே நிகழ்ந்த சில்மிஷங்களும் என் மனதில் திருப்பி புரட்டி பார்த்துக்கொண்டிருந்தது. அதை நினைத்து இரவு என்னவோ மிகவும் சந்தோசமானதாக தோன்றியது. ஆனால் எல்லாச் சந்தோசமும் மறுநாள் புகை போலாயிற்று.

'அன்று தான் எங்களுடைய கடைசி சந்திப்பு' என்று எனக்கு தெரியாமல் போயிற்று.

'இது வெளியே தெரியகூடாது' என்ற ஜாக்கிரதை எனக்குள் மீண்டும் மனக்கண் திறந்து எச்சரித்தது.

இப்பொழுதொல்லம் அவன் ஆன் லைனில் வருவதில்லை. நாங்கள் கூடிவிட்டு பிரிந்து விட்ட அவன் ஞாபகம் அடிக்கடி வராமல் இல்லை.

சில நாட்களில் அவனிடமிருந்து எந்த தகவலும் வரவில்லை.

எனக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருந் தது. ஆனாலும் நிமிஷத்துக்கு நாற்பது தடவை அவனுடைய ஐடியை போய் பார்த்து.. பார்த்து.. மனதை சமாதானம் செய்துக்கொண்டேன்.

'அவனுக்கு ஏதாவது வேலை இருக்கும்' என்று மனதை சமாதானம் செய்தாலும் நாட்களாக.. நாட்களாக.. ஏதோ ஒரு வித பயம் தொற்றிக்கொண்டது. கொரோனாவை போல,

வீட்டில் யாரோடும் ஒன்றும் பேச வில்லை. பேச தோன்றவில்லை. என்னை நானே தனிமையில் அடைத்துக்கொண்டது போல உணர்ந்தேன்.

துக்கம்.. துக்கம்.. சில நேரங்களில் துக்கம் தாங்க முடியாமல் அழத்தோன்றும். 'ஒவென பாத்ரூமில் எத்தனை தடவை அழுதேன்' என்று தெரியாமல்

அழுதுக்கொண்டிருந்தேன்.

எதிர்பாராது நேர்ந்த இந்த சந்திப்பி னால் அவனிடம் ஒருவகை வெறுப்புக் கொண்டேன். அது எனக்கு உலகமே வெறுப்பாயிற்று.

அவன் என்னை விட்டு போய்விட்டான் இனிமேல் திரும்ப வரமாட்டான்.

அவனிடமிருந்து நான் இதை எதிர் பார்க்கவில்லை.

இந்த எண்ணம் தோன்ற.. தோன்ற.. என் வாழ்வில் ஏதோ இடி விழுந்து விட்டது. அவனுடைய நினைவுகளில் இடி, இடி பட்ட இடத்தில் அடி, இடியும் அடியும் மாறி..மாறி.. பதிவு செய்துவிட்டது. கூட்டிகழித்து பார்த்தால் மாறி..மாறி.. இடிதான் விழுந்துக்கொண்டிருந்தது.

இடிந்து போய் உட்கார்ந்து இருப்பது பிரயோசனமில்லை.



‘அவனுடைய நினைவு இருக்க வேண்டி தான் எப்பவும் அவன் செய்ததையே நினைத்துக்கொண்டு இருந்தால் நான் எப்போது வாழ்றது?’ துக்கம் வெளியேறி உட்கார்ந்திருந்த மனம் எழுந்து நிற்க முடிவு செய்தது.

இனி நடக்க வேண்டியதை சிந்திக்க வேண்டும். அடிப்பட்ட இரை பழிவாங்க துடித்தது.

இவனை போன்ற ஆண் என்ற அகம்பாவம் பிடித்த ஆண்களுக்கு புத்தி கற்பிக்க வேண்டும் என்ற எண்ணம் என் உள்ளத்தில் அழுத்தமாகப் பதிந்தது.

‘நான் தான் கடைசி இரையாக இருக்க வேண்டும். இனிமேல் யாரும் சிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட அயோக்கியனை சும்மா விடக்கூடாது’ என்ற எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தது.

நான் என்ன செய்ய முடியும்? சட்டத்தின் பக்கம் போனாலும் கடைசியில் அவமானம் எனக்குதானே? பெண் ஆச்சே என்ன செய்ய முடியும்? அந்த தைரியத்தில் தானே அவன் என் வாழ்க்கையில் விளையாண்டுட்டு போய்விட்டான்.

மகாபாரதத்தில் திரௌபதி வாழ்க்கை யில் விளையாட முயன்ற கீசகன் என்ற காமுகனை போல நிறைய பேர் திரையில் உலவிக்கொண்டிருக்கிறார்கள்.

இவர்களை சும்மா விடக்கூடாது?

என் மனதில் மின்னல் மாத்திரம் அடித்துக்கொண்டிருந்தது. அது நிழலாக வும் இருளாகவும் மாறினாலும் அதன் ஈர்ப்பில் அவனே ஆட்பட்டான்.


# சர்வதேச புகழ்பெற்ற 'மூதூர் முகைதீன்'




மூதூர் மண்ணை பிறப்படமாகக்கொண்ட சர்வதேச புகழ் பெற்ற கவிஞரும், பன்னூல் எழுத்தாளுமான மூதூர் முகைதீன் அவர்களை அறிமுகம் செய்வதில் தமிழ்நெஞ்சம் பெருமிதம் கொள்கின்றது. சிறுகதைகள், கவிதை, சிறுவர் பாடம், இலக்கிய மலர் வெளியீடு மற்றும் விமர்சன கட்டுரைகள் என்று பல்வேறு தளங்களில் விரியும் இவரின் இலக்கிய பரப்பு இவரின் இலக்கிய முதிர்ச்சியின் அடையாளமாகும். கிழக்கிலங்கையில் தனக்கென அடையாளம் பதித்த இலக்கிய ஆளுமை மூதூர் முகைதீன் என்ற புனைபெயர் கொண்ட மீரா முகைதீன் அவர்கள்.

மேல்படத்தில் மீரா முகைதீன் அவர்களுடன் நேர்காணல்பவர் முதூர் ஜெ.எம்.ஐ அவர்கள்

சமீபத்தில் வெளியான் வண்டில் மாமா சிறுவர்கள் நூல் முகப்பு




*உங்களைப் பற்றிய விபரங்களை சுருக்கமாகக் கூறுங்கள்.*

நான் இலங்கை மூதூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவன். எனது முழுப் பெயர் அபுசாலிகு மீரா முகைதீன். சுமார் நாற்பது வருட காலம் ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றி இப்பொழுது ஓய்வு நிலையில் இருக்கின்றேன். பாடசாலையில் படிக்கும் காலத்திலிருந்தே கலை, இலக்கியத்தின் மீது அதீத ஆர்வம் உண்டு. சுமார் ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக எழுத்துத் துறையில் ஈடுபட்டு வருவதோடு 'மூதூர் முகைதீன்' என்ற பெயரில் நான் எனது ஆக்கங்களை எழுதி வருகின்றேன்.



திருமலை மாவட்ட அரசாங்க அதிபரினால் கவிதைப் போட்டிக்கான பரிசினைப் பெற்றுக் கொண்டபோது (2001)

*நீங்கள் இலக்கியத் துறையில் ஈடுபடுவதற்கு பின்புலமாக இருந்த காரணிகளை கூற முடியுமா ?*

எனது சிறுவயதில் இருந்தே நூல்களை தேடி வாசிப்பதில் மிக விருப்பமுடையவனாக இருந்தேன் பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாசிப்பதில் அதிக அக்கறை காட்டினேன். அதற்கு முக்கிய காரணியாக இருந்தது எனது வீட்டிற்கு அருகாமையில் இயங்கிய இக்பால் சனசமுக நிலைய நூலகமாகும். இந்த நூலகம்தான் எனது எழுத்துப் பணிக்கு அத்திவாரமிட்டது. அத்தோடு எனது வாசிப்புக்கு நல்ல தீனியாகவும் அமைந்திருந்தது. பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே நான் சிறு சிறு துணுக்குகள், விடுகதைகள் போன்றவற்றை அப்பொழுது வெளிவந்து கொண்டிருந்த பல பத்திரிகைகளுக்கும்,சஞ்சிகைகளுக்கும் எழுதியுள்ளேன்.

எமது பிரதேசத்தில் இலக்கிய முயற்சிகளை முன்னெடுக்கும் வகையில் மூதூர் கலை இலக்கிய ஒன்றியம் என்ற பெயரில் ஓர் அமைப்பை உருவாக்கி கடந்த நாற்பது வருடங்களுக்கும் மேலாக நூல் வெளியீடுகள், நூல் அறிமுக நிகழ்வுகள், கருத்தரங்குகள் போன்றவற்றை சிறப்பாக நடாத்தி வருகின்றோம்.

*நீங்கள் எவ்வகையான இலக்கியங்களில்*



ஈடுபாடு காட்டி வருகின்றீர்கள்?

கவிதை, சிறுகதை, பாடலாக்கம், உருவகக் கதைகள், கட்டுரைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதுவரை கவிதைத் துறையிலேயே அதிக ஈடுபாடு காட்டி வந்துள்ளேன்.

இத்துறையில் உங்கள் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக இருந்த காரணிகள் என்ன?

இதில் பல விடயங்கள் உள்ளன. 1970களில் வெளிவந்த தினபதி என்ற பத்திரிகையில் தினம் ஒரு சிறுகதை திட்டம் என்ற ஒரு பகுதியை ஆரம்பித்திருந்தனர். அதில் ஒவ்வொரு நாளும் சிறுகதைகளைப் பிரசுரித்து புதிய எழுத்தாளர்களுக்கு இடம் கொடுத்து ஊக்கப்படுத்தி வந்தனர். அந்த வகையில் நானும் ஒரு சிறுகதையை எழுதி அனுப்பி இருந்தேன். அது 1969 ஆம் ஆண்டு பிரசுரமானது. இதுவே எனது முதலாவது எழுத்துப் பிரவேசமாகும். அதனை தொடர்ந்து சில கவிதைகளையும் தினபதி கவிதா மண்டலத்தில் எழுதி உள்ளேன். 1973 ஆம் ஆண்டு நான் பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலைக்கு ஆசிரியர் பயிற்சி பெறுவதற்காக செல்லும் சந்தர்ப்பம் ஏற்பட்டது அங்கே சென்றதும் எதிர்பாராத விதமாக அந்த பயிற்சி கலாசாலையில் என்னுடன் சேர்ந்து பயிற்சி பெறுவதற்காக இலங்கையில் நாலா திசைகளிலுமிருந்தும் வந்திருந்த நண்பர்களில் பல எழுத்தாளர்களும் இருந்ததனர். இதை எனது அதிர்ஷ்டமாகவே கருதுகின்றேன். குறிப்பாக அன்பு ஜவஹர்ஷா, திக்குவல்லை கமால், கலைவாதி கலீல், ஜவாத் மரைக்கார்,ஏ. பீர் முகம்மது போன்றோர்களை குறிப்பிடலாம் இவர்களுடனான நட்பு எனது இலக்கிய ஆர்வத்திற்குப் பெரும் உந்து சக்தியாக இருந்து. நாங்கள் அனைவரும் அந்த காலகட்டத்தில் யாழ் நகரில் நடைபெறுகின்ற பல இலக்கிய



கிழக்கு மாகாண முதலமைச்சரால் முதலமைச்சர் விருது(2010)

நிகழ்வுகளில் தவறாது கலந்து கொள்வோம். குறிப்பாக திக்குவல்லை கமால், அன்பு ஜவஹர்ஷா, ஆகிய இருவருடன் நானும் இப்படியான நிகழ்வுகளில் அதிகம் கலந்து கொள்வதை வழமையாகக் கொண்டிருந்தோம்.

இவர்களுடனான உறவே எனது இலக்கிய பயணத்தில் ஒரு புதிய மாற்றத்தைக் கொண்டு வந்தது எனின் மிகையில்லை. இவர்கள் மூலமாகவே அக்காலகட்டத்தில் பிரபல்யமாக விளங்கிய எழுத்தாளர்களான டொமினிக் ஜீவா, கே. டானியல், சிரித்திரன் சுந்தா, எச்.எம்.பி.மொஹிதீன் எம்.எச். எம்.ஷம்ஸ், மு. பஷீர் ஆகியோரின் அறிமுகம் கிடைத்தது மறக்க முடியாத நிகழ்வுகளாகும்.

கருத்தாழமிக்க விடயங்களின்றி ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் எழுதி வந்த எனக்கு சரியான திசையை காட்டி மக்கள் இலக்கியத்தின்பால் ஒரு ஈர்ப்பை ஏற்பட வைத்ததும் இவர்களின் நட்பினால் ஏற்பட்ட

முஸ்லீம் விவகார கலாசார இராஜாங்க. அமைச்சரால் வழங்கப்பட்ட கலாபூஷண விருது (2008)




கொழும்பு தமிழ் சங்கத்தில் எனது கவிதைகள் பற்றிய ஆய்வு நூல் விடியல் வெளியீட்டு விழாவில் அல்-ஹாஜ் ஹாஷிம்.உமர் நூலினைப் பெறுகின்றார்.

விளைவுதான் எனக் கூறிக் கொள்வதில் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். எமது நட்பு வட்டம் இன்றுவரை தொடர்வது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

*நீங்கள் இதுவரை வெளியிட்ட நூல்களின் விபரங்களை தர முடியுமா*

முத்து (1976 - கவிதை), பிட்டும் தேங்காய்ப் பூவும் (1997 - கவிதை), இழந்துவிட்ட இன்பங்கள் (2003 - கவிதை), ஆசிரியர் பணியை அழகுறச் செய்வோம் (2005 - கட்டுரை), ஒரு காலம் இருந்தது (2010 - கவிதை), அபோதம் (2016 - உருவகக் கதைகள்), ஒரு வானில் இரு நிலவுகள் (2018 - கவிதை), கனாக் கண்டேன் (2020 - பாடல்), கடலோரப் பாதை (2021 - சிறுகதை), சங்கமம் (2021 - கவிதைத் தொகுப்பு), வண்டில் மாமா (2023 - சிறுவர் பாடல்கள்) ஆகிய 11 நூல்களை வெளியிட்டுள்ளேன் அத்தோடு 'ஓசை' என்ற காலாண்டு கவிதைச் சிற்றிதழின் ஆசிரியராக இருந்து 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை 28 இதழ்களை வெளியிட்டுள்ளேன் இதில் இளைய தலைமுறைக் கவிஞர்களுடன் பல மூத்த கவிஞர்களும் கவிதைகளை எழுதி இருப்பது முக்கிய விடயமாகும்.

*தற்போதைய கால கட்டத்தில் நூல் வெளியீடுகள் பற்றி தாங்கள் என்ன கருதுகிறீர்கள்?*

இன்றைய காலத்தை பொறுத்தவரை நூல்களை வாசிப்பவர்களின் தொகை மிகவும் குறைந்து கொண்டே வருகின்றன. இதற்கான முக்கிய காரணமாக நவீன தொடர்பு சாதனங்களின் பாவனையே எனப் பலரும் கூறுகின்றனர். மேலும் நூல்களைப் பணம் கொடுத்து வாங்குவோரின் எண்ணிக்கை முன்னரைவிட மிகக் குறைவடைந்துள்ளன. இதனால் நூல்களினுடைய விற்பனையும் அல்லது அதனை சந்தைப்படுத்துகின்ற வாய்ப்பும் குறைந்துள்ளன. இதன் காரணமாக எழுத்தாளர்கள் நூல்களை வெளியிடுவதற்கும் அஞ்சுகின்றனர்.

*இலக்கியத் துறையில் உங்களுக்கு கிடைத்த விருதுகள், பரிசுகள், பாராட்டுகள் பற்றி கூறமுடியுமா?*

பல பரிசுகள் விருதுகள் கிடைத்த போதிலும் அவை எதனையும் நான் எனது பெயருடன் சேர்த்துக் கொள்ள விரும்புவதில்லை. சிலவற்றை மட்டும் குறிப்பிடுகின்றேன. அரச மற்றும் நிறுவனங்கள் மூலம் தேசிய ரீதியாக



நடைபெற்ற கவிதைப் போட்டிகளில் பலமுறை முதல் பரிசுகளைப் பெற்றுள்ளேன். மேலும் கலாபூஷணம் விருது, கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது, விபவி விருது போன்றவைகளை முக்கியமாகக் குறிப்பிடலாம்.

மேலும் பல்கலைக் கழக, கல்வியற் கல்லூரி மாணவர்கள் பலராலும் எனது கவிதைகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. கவிதாயினியும், எழுத்தாளருமான வெலிகம றிம்சா முகம்மது அவர்கள் தனது ஊடக டிப்ளோமா பட்டத்திற்காக இன நல்லுறவில் மூதூர் முகைதீனின் கவிதைகள் என்ற விடயத்தை கருப்பொருளாகக் கொண்டு எழுதிய ஆய்வுக் கட்டுரையை 'விடியல்' என்ற பெயரில் ஒரு நூலாக வொளியிட்டுள்ளார். 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வெளியான 'மல்லிகை' இலக்கிய சஞ்சிகை எனது படத்தை அட்டைப்படத்தில் பிரசுரித்து கௌரவித்தமையும் எனது எழுத்திற்கு கிடைத்த விருதுகளாகவே கருதுகின்றேன்.

*இலக்கியப் படைப்புகள் ஏதாவது ஒரு நோக்கத்தை முன்வைத்தே எழுதப்படவேண்டும் என்ற விடயத்தில் தங்கள் கருத்து என்ன?*

இலக்கியத்தை காலத்தின் கண்ணாடி என்பார்கள். ஒரு காலகட்டத்தின் நிகழ்வுகளை இலக்கியமாகப் படைக்கும்போது அது எதிர்காலத்தில் வரலாற்றில் நிலைத்து நிற்கக் கூடியதாக, என்றும் பேசப்படக்கூடிய சிரஞ்சீவி இலக்கியமாக திகழும் என்பதே உண்மை. அந்த வகையில் நிகழ்கால வாழ்க்கையில் நடக்கின்ற சம்பவங்களை இலக்கியமாக படைக்கும்போது அவை வாழும் இலக்கியமாக என்றும் விளங்கும். இதை விடுத்து வெறும் வர்ணனைகளையும், இயற்கை ரசனைகளையும் வைத்து எழுதப்படும் ஜனரஞ்சக இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கையில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை.

சமூகத்தில் புரையோடிப் போய் இருக்கின்ற வறுமை, அறியாமை, அடிமைத்தனம், சுரண்டல் போன்றவற்றை எடுத்துக் காட்டும் வகையில் யதார்த்தங்களை மையமாக வைத்து நடைமுறைப் பிரச்சினைகளைக் கருப் பொருளாகக் கொண்டே இலக்கியம் படைக்கப்பட வேண்டும் அதுவே மக்கள் இலக்கியமாகும். அந்த வகையில் இன்று பல எழுத்தாளர்கள் சமகால பிரச்சினைகளையும் மக்களின் அவலங்களையும் முன்வைத்து கதைகள், கவிதைகள், காவியங்களை எழுதி வருகின்றனர் இத்தகைய மக்கள் இலக்கியமே என்றும் வாழும்.எனவேதான் இலக்கியப் படைப்புக்கள் சமூக மாற்றத்திற்கான பங்களிப்பை வழங்க வேண்டும் என்ற கருத்தில் நான் எப்போதும் உடன்பாடுடையவனாக இருந்து வருகின்றேன்.

*இன்றைய இளம் எழுத்தாளர்களுக்கு தாங்கள் கூற விரும்பும் செய்தி என்ன ?*

இன்றைய காலகட்டத்தில் எழுத்துத் துறையில் பிரவேசிக்க அதிகமானோர் ஆர்வம் காட்டுகின்றனர். இது வரவேற்கத்தக்கதே. எனினும் இவர்களில் பெரும்பாலானோர் போதிய வாசிப்போ, தேடலோ இன்றி நுனிப்புல் மேய்ந்த நிலையில் எழுத்துலகில் கால் பதிக்க முயற்சிக்கின்றனர். இது மிகவும் தவறான செயற்பாடாகும்.

ஆழமான வாசிப்பின் மூலமே சிறப்பான ஆக்கங்களைப் படைக்க முடியும். இதனை. இளம் தலைமுறையினர் மனதில் கொண்டால் எழுத்துலகில் சுடர் விட்டுப் பிரகாசிக்கலாம்.

# தாய் மொழி நாள்

திருமதி.இரா.இராஜாமணி.
ஈரோடு.

மொழியே ஒரு. இனக்குழுவின் அடையாளம்.

ஒவ்வொரு மொழிக்கும் அதற்கென்ற சிறப்பு உண்டு.

இன்றைய பிப்ரவரி 21 ஆம் நாள் உலகின் தாய்மொழி நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார நிறுவனமானது (UNESCO) தாய் மொழி சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், இந்த நாளை முன்மொழிந்துள்ளது.

தாய் மொழி நாள் கொண்டாட வேண்டியதன் நோக்கமென்ன, இதனால் பெறும் பயன்கள் யாவை என்பதைப் பற்றி ஒரு சில கருத்துகள்.

மொழி : இது ஒரு எண்ணப்பரிமாற்றக் கருவி.

தாய்மொழி: கருவறையிலிருந்தே உயிரினத்தின் வகுப்பறை தொடங்கிவிடுகிறது. தாய் பேசும் மொழி ஒலிக்குறிப்புகளே முதலில் குழந்தை அறிகிறது. பதிவு செய்துகொள்கிறது. பிறந்த உடனே அதே ஒலி அதற்கு இதமாகவும் பயமற்ற உணர்வையும் தருகிறது. அதன் மூலம் சிந்தனை வளர்கிறது.

தாய் மொழியே சிந்தனையின் திறவுகோல். எனவே, தாய் மொழிக் கல்வி அவசியமானதாகிறது.

மனித இனம் : சமூகமாக இணைந்து வாழும் இயல்புடையவன் மனிதன். எனவே, மனித இனம் தனித்தனி சமுதாயமாக மாறி வாழத் தொடங்கியபொழுது எண்ணப்பரிமாற்றமாகத் தனக்கென மொழியை அமைத்துக்கொண்டான்.

மொழி என்பது அவ்வினத்தின் கலாச்சாரம், பண்பாடு, ஒழுக்கநெறிகள் சார்ந்த பிணைப்பாகக் காணப்படுகிறது.

இந்நாள் தாய்மொழி நாளாகக் கொண்டாடப்படுவதன் நோக்கம் :

“இனத்தை அழிக்க வேண்டும் என்றால் முதலில் அவனின் மொழியை அழித்தால் போதும்” என்பர்.

ஒரு மொழியினுடைய தொன்மை ... அதன் தொடர்ச்சியில் தான் உள்ளது. தாய் மொழி கற்பது பிறப்புரிமை; பிற மொழி கற்றல் பிழைப்புரிமை, என்றான நிலையிலே, மொழி யைக் காத்தல் அவசியமாகிறது.

மொழி என்பது ஒரு இனத்தின் அடையாளம் என்பதால் "தாய் மொழி" பற்றிய விழிப்புணர்வு இன்றியமையாத ஒன்றாகிறது.

உலகில் 6000 மொழிகள் பேசப்பட்ட நிலையிலே இன்று 2000 மொழிகள் காணாமல் போய் விட்டன.

ஒரு மொழியினுடைய செழுமை அந்த மொழி பேசும், பாதுகாக்கும், இன்றும் வளரும் நிலையைப் பொறுத்தே அமைகிறது.

ஒரு மொழி நிலைத்து நிற்பதற்கான காரணங்கள்

ஒரு மொழி, 1) பேச்சு மொழியாக2) எழுத்து மொழியாக, 3) ஆட்சிமொழியாக 4) நீதிமன்ற மொழியாக 5) பயிற்றுமொழியாக தொடர்ந்தால் மட்டுமே நிலைபெற முடியும். இதில் "பயிற்றுமொழியாக" என்பது ஒரு மண்டபத்தின் "தாங்கு தூண், நிலைத் தூண்" போன்றது. பயிற்றுமொழி என்பது இல்லாமல் போனால் படிப்படியாக "மொழி" ஆட்டம் கண்டு வீழ்ந்துவிடும் என்பது உண்மை.

மேலும் ஒரு காரணியாக, "மொழிக்கலப்பு" அமைந்துள்ளது எனலாம். பிற மொழிச் சொற்கள் ஒரு மொழியில் தேவைக்கு அதிக விழுக்காட்டில் கலந்து பேசும்போதும், எழுதும்போதும் அம்மொழி சிதைவுறுகிறது. பிற மொழிச்சொல் ஒன்று அம்மொழியில் கலக்கும்பொழுது அம்மொழியுள்ள சொல் "செத்துவிடுகிறது" எனலாம். ஒரு மொழி அழிந்தால், அம்மொழி பேசும் இனத்தின் பண்பாடு, கலாச்சாரம் அழிந்துவிட்டது என்பதே பொருள்,

வளர்ந்துவரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றபடி தன்னை வளர்த்துக்கொள்ளும் மொழிகளின் எண்ணிக்கை நூற்றுக்கும் குறைவே. காலச்சூழலுக்கு ஏற்ற ''கலைச் சொல்லாக்கம்" பெற்று வளர்ந்துவரும் மொழியே நிலைபெறும்.

"மொழிபெயர்தேயத்து புலம் பெயர் மாக்கள், கலந்து இனிது உரையின் முட்டாச் சிறப்பின் பட்டினம்' - பட்டினப்பாலை வரிகள்.

யாதும் ஊரே; யாவரும் கேளீர் "வைர வரிகள்," இந்தியாவின் அடையாளத்தைப் "பன்முகத்தன்மையால்தான் வளர்த்தெடுக்க முடியுமே, தவிர ஒற்றை அடையாளத்தால் முடியாது. -பாலகிருஷ்ணன் (இ.ஆ.ப. ஓய்வு)

தமிழ் மொழி தான் அழிந்துவிடாமல் நிலைத்து நிற்கவும், வளர்ந்து வரவும்,பட்ட இன்னல்கள் நாம் அறிந்ததே.

மொழி என்பது "பண்பாட்டின் அடையாளம்" என்பதால், தாய்மொழியை நேசிப்போம்; பிற மொழியை மதிப்போம்.

# துடிக்கும் இதயம்

பொறு பொறு கொஞ்சம்
இளைப்பாறி க்கொள்கிறேன்
மூச்சு முட்டுகிறது
உன் நினைவுகளால்... என்று
கூறிக்கொண்டே மறுபடியும்
உன்னை நினைக்கின்றேன்...

உன்னைச்சந்தித்தது உண்மைதானே
பொறு கிள்ளிப் பார்த்துக்கொள்கிறேன்
கனவில்லை என்று

உள்ளம் இனிக்கிறது
என்ன என்று பார்க்கிறேன்
உன்னுடன் இருந்த என் நினைவுகள்

படபடக்கிறது உள்ளம்
எதிலும் நிலைகொள்ளாமல்
அட!!
என்னருகில் நீ

என்ன பேசுகிறேன் என்ன நினைக்கின்றேன்
ஏதும் விளங்கவில்லை
உன்னைக்கண்ட அந்த நொடி...

உணவை அள்ளுகிறது கைகள்
தின்னுகின்றேன்
என்ன உண்டேன் நினைவில்லை
நீ அருகே அமர்ந்த போது...

மழையின் குளிர்ச்சி
உடலெங்கும்...
சட்டென்று பரவிய மின்னலின்
அதிர்வு உடலெங்கும்
அய்யோடா உன்னுடன் நான்
பேசிக்கொண்டு இருக்கின்றேன்

கரிய விழிகள் என்னை
அளப்பது புரிகிறது
திரும்பாமலே தெரியும் எனக்கு...
நீதான்
நின்றுகொண்டு இருக்கிறாய்



தடக் தடக் துடிக்கும் இதயம்
தள்ளி நீ நிற்பது புரிகிறது
அய்யோ அருகே வராதே
என்னால் தாங்க இயலாது

- தென்றல் கவி (தமிழ்ச்சிட்டு!)

## எதிர் காலம்

என்னுடைய
விழி பார்வையில்
நான் விரும்பிய
உன் எதிர் காலம்......
உன் நிகழ் காலத்திற்க்கு
எனுடைய கடமையில்
கண்டிப்பு.....
செயலில் முடியாது
பார்வையில் பயம்
நினைவில் தோல்வி
முன்றும் இறந்த காலம் ....
ஞானத்தில் நாட்களும்
உன்னை சுழன்று
நபர்கள்.....
எல்லாம் உன்னுள் கற்று
தரும் எனக்கு எதுவும்
கடமை இல்லை....
கனிவான உன்னுடன்
இனிய நாட்கள்
நானும் தந்தையாக
நிற்கிறேன் .....

மகனும் தந்தையும்
மதிப்பிற்குரிய
ஆனந்த அடையாளம் ......

ரா. சத்தியசீலன் (சேலம்)

# காதல்

அறுசீர் விருத்தம் (5 மா + 1காய்)

உள்ளம் தன்னை இளமை யாக்கி
உலகை ஆள்வதுவாம்
கள்ளம் கொஞ்சம் கபடம் கொஞ்சம்
கலந்தும் வருவதுவாம்
பள்ளம் நோக்கிப் பாயா நதியாய்ப்
பார்த்து முறைப்பதுவாம்
அள்ளி அழகை அறிவைப் பருகி
ஆட்சி செய்வதுவாம்

உண்ணும் உணவை வெறுக்கச் செய்தே
உடலை உருக்கிடுமாம்
விண்ணில் பறந்து நிலவைப் பிடிக்கும்
வேகம் தந்திடுமாம்
கண்ணும் கருத்தாய் இணையை எண்ணிக்
காத்துக் கிடப்பதுவாம்
எண்ணும் செயலில் ஒன்றே கொண்ட
இயல்பாய் இருப்பதுவாம்

உடையில் மாற்றம் நடையில் மாற்றம்
உள்ளம் பூத்திடுமாம்
தடைகள் நூறு வந்தால் என்ன
தகர்த்தே எறிந்திடுமாம்
படைகள் கண்டும் அஞ்சா தென்றும்
பயத்தைக் களைந்திடுமாம்
இடையில் உள்ளோர் எவரென் றாலும்
எதையும் மறந்திடுமாம்

இருவர் மட்டும் உலகம் என்றே
என்றும் நம்பிடுமாம்
உருவம் தேய்ந்தும் உள்ளம் தேயா(து)
உயர்வான் ஆகிடுமாம்
பருவக் காலம் வந்தால் இந்தப்
பண்பும் வந்திடுமாம்
கருமப் பலனாய்ச் சிலரின் வாழ்வைக்
காற்றில் கரைத்திடுமாம்

முற்றும் அறிந்த முனிவர் எனினும்
மூடர் ஆக்கிடுமாம்
பெற்றோர் மற்றோர் உற்றார் உறவோர்
பேச்சை மறுத்தி டுமாம்
சற்றும் உறுதி இழக்கா வண்ணம்
சாதித் தேகாட்டிக்
கற்றும் தெளியார் காதல் கொண்டால்

காதல் செய்தல் தவறே இல்லை
காதல் செய்திடுவோம்
காதல் செய்யும் கருவை மாற்றிக்
களத்தில் குதித்திடுவோம்
சாதல் நிலைக்கு நம்மை என்றும்
காதல் தள்ளாதே
கீதம் பாடும் குயிலாய் மாறிக்
கிழக்கில் எழுந்திடுவோம்!

ஏட்டை எழுத்தைக் காதல் செய்தே
எழுவோம் இலக்கியமாய்
தோட்டில் தொழிலைக் காதல் செய்தே
தூணாய்த் திகழ்ந்திடுவோம்
பாட்டை இசையைக் காதல் செய்தே
பாரில் நலம்விளைப்போம்
நாட்டை மொழியைக் காதல் செய்தே
நாட்டில் உயர்ந்திடுவோம்

பெற்றோர் தம்மைக் காதல் செய்வோம்
பெருமை காத்திடுவோம்
கற்றுக் கொடுத்தோர் காதல் செய்வோம்
கற்றே உயர்ந்திடுவோம்
உற்ற தொழில்மேல் காதல் செய்வோம்
உண்மை விதைத்திடுவோம்
நற்றாள் இறைமேல் காதல் செய்வோம்
நாட்டில் நிலைத்திடுவோம்

இராம வேல்முருகன்

பல்சுவை
தமிழ்நெஞ்சம்
tamilnenjam.com
பெப்ரவரி 2024

# செம்மொழி பேசும் போது...

அம்மொழி சிறப்பே என்றும்
அதில்பல சிறப்புண் டென்றும்
இம்மொழி சிறப்பே என்றும்
இதில்பல சுவைகள் என்றும்
எம்மொழி பேசும் போதும்
இருந்திடாச் சிறப்பெல் லாமும்
செம்மொழி பேசும் போது
சிலிர்க்குமே மனமெல் லாமும்
.
பக்தியும் அறமும் சொல்லும்
பாங்குடன் நீதி சொல்லும்
சிக்கலை ஆரூ டத்தால்
சிந்தையில் போக்கும்; யாக்கை
எக்கணம் நோயுற் றாலும்
இயல்புடன் மருந்தும் சொல்லும்
தக்கதோர் மொழியே எங்கள்
தமிழ்மொழி மட்டும் தானே
.
சிந்திடும் அலைநீர் கொண்ட
சீர்கடல் தாண்டி வந்தும்
சிந்தையில் இதுநாள் மட்டும்
சீர்குலை யாமல் பேசச்
செந்த மிழ்த் தைத்து வைத்த
சிறப்பினை எண்ணி எண்ணி
எந்தனுள் இறைவ னுக்கே
யான்பெரும் நன்றி சொல்வேன்
.
தாய்மொழி தினம் வாழ்த்துக்கள்

தமிழ்நெஞ்சம் அமின்